
# உதயன்



www.onlineuthayan.com

28: பக்கங்கள் சுடர் 27 கதிர் 331 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 06 திங்கட்கிழமை (22/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


# டில்லிக்கு கோத்தா அவசரமாக விரைவு

## 13ஆவது திருத்தம், கே.பி. விவகாரம் பற்றியும் ஆராய்வு



கொழும்பு, ஒக்ரோபர் 22

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் பரபரப்புக் கருத்தை வெளியிட்டிருந்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அவசர பயணமொன்றை மேற்கொண்டு இந்தவார நடுப்பகுதியில் இந்தியா செல்லவுள்ளார்.

புதுடில்லியில் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனுடன் கோத்தபாய முக்கிய பேச்சுகளை நடத்துவாரென்று உயர்மட்ட அரச வட்டாரங்கள் நேற்றிரவு 'உதயனி'டம் தெரிவித்தன.

பார்க்க பக்கம் 4



## கே.பியை பாதுகாக்கிறது அரசு

கொழும்பு, ஒக்.22

கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனைப் பாதுகாக்கும் நோக்குடனேயே அரசு கருத்து வெளியிட்டுள்ளது என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேசப் பொலிஸாரால் தேடப்பட்டு வருபவரான குமரன் பத்மநாதன் தொடர்பில் தம்மிடமுள்ள ஆதாரங்கள் - தகவல்களை பொலிஸ் மா அதிபர் சர்வதேசப் பொலிஸாரிடம் வழங்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர்

பார்க்க பக்கம் 4

## அரசுடன் பேசுவதற்கு ஐ.தே.க தயார்

கொழும்பு, ஒக்.22

நிறைவேற்று அதிகாரத் தரப்புக்குக்கும் மற்றும் நீதித் துறைக்கும் இடையில் தொடரும் மோதலை தீர்ப்பதற்காக அரசுடன் பேச்சு நடத்த ஐக்கிய தேசிய கட்சி தயார் என எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீதிச் சேவை ஆணைக்

பார்க்க பக்கம் 4

## வர்த்தகரின் 50 இலட்சத்தை கையாடிய பொலிஸ் அதிகாரி

கிளிநொச்சி, ஒக்.22

தன்னிடமிருந்து சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை மோசடி செய்தார் எனக் கூறி கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் மீது யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கிளிநொச்சியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்றை இ.ஜெயசிங்கம் என்பவர் நடத்திவருகிறார். கடந்த ஓகஸ்ட் மாதம் சகோதரி ஒருவரின் மரணச் சடங்குக்காக அவர் கொழும்பு சென்றுள்ளார். அப்போது சந்தேகத்தின் பேரில் குறித்த வர்த்தகர் ஜா-எல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பார்க்க பக்கம் 4

## உலகிலேயே இலங்கையில்தான் மருத்துவமனை மீது தாக்குதல்

### போதனா வைத்தியசாலை படுகொலை நினைவு நிகழ்வில் பதில் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக்.22

உலகில் எங்குமே வைத்தியசாலைகள் மீது தாக்குதல் நடத்தப்படுவதில்லை. ஆனால் கொடூரமான தாக்குதல் யாழ். போதனா வைத்தியசாலை மீது 25 வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது ஏராளமான உயிர்

பார்க்க பக்கம் 4



உயிர்நீத்தோரை கண்ணீரோடு தீபமேற்றி நினைவேந்துகையில்...

## இலங்கையை இராணுவமயமாக்க அரசு முயற்சி

கொழும்பு, ஒக்.22

13ஆவது அரசியல் திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கு அரசு உடனடியாகப் பதில் கூறியாக வேண்டும். அதிகாரப் பரவலாக்கலில் உண்மைத்தன்மை இருந்தால் அரசு ஏன் இன்னும் மௌனம் காக்கிறது? எது எப்படி இருப்பினும், அதிகாரப் பரவலாக்கலில் அரசின் உண்மையான நிலைப்பாட்டையே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கலாநிதி குமரகுருபரன் நேற்றுத் தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4


பங்களாதேஷ் விடுதலைப் போரின் போது பெரும் பங்காற்றிய இந்தியர்கள் அந்தநாட்டு அரசால் கௌரவிக்கப்பட்டனர். 8

காசாவுக்கு சென்று கொண்டிருந்த படகை இஸ்ரேல் படையினர் தடுத்துள்ளனர் - இஸ்ரேல் பாதுகாப்புப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். 9

ஈரானில் மாணவிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்ததில் 26 பேர் சாவு. 10


## அரசின் கபட நாடகம் தமிழரிடம் பலிக்காது

கொழும்பு, ஒக்.22

"ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களை உதாசீனம் செய்துவிட்டு, தமிழ் மக்களிடையே தலைவரொருவரைப் பலவந்தமாகத் திணிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றது. அரசின் இந்தக் கபட நாடகம் பலிக்காது என்பதனை அரசுக்கு மட்டுமல்ல, சர்வதேசத்திற்கும் தமிழ் மக்கள் இதற்கான பதிலைத் தெளிவாக எடுத்துக்காட்டுவர்"

- இவ்வாறு நேற்றுக் கருத்துத் தெரிவித்திருந்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் சிங்கள, பௌத்த மக்களிடம் மட்டுமே வெற்றிபெற்றுள்ளார். தமிழ் மக்களிடம் அவர் தோற்றவர்தான் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி

பார்க்க பக்கம் 4

## விபத்தில் முதியவர் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 22

சுன்னாகம் பகுதியில் நேற்று இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் சுன்னாகம் ரொட்டியாலடியில் இடம்பெற்றது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த உடுவிலைச் சேர்ந்த மார்க்கண்டு பாலமார்க்கண்டன் (வயது-60) என்பவரே

பார்க்க பக்கம் 4

## அகிம்சை மீதே நம்பிக்கை; வெளிக்காட்ட அணிதிரள்க

### சரவணபவன் எம்.பி. அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.22

அரசினதும் இராணுவத்தினரினதும் அராஜகச் செயற்பாடுகள் மீண்டும் தமிழர்களை ஆயுதப் போராட்டத்தை நோக்கியே உந்தித் தள்ளுகின்றன. எனினும் இன்னமும் எங்களுக்கு அகிம்சை மீதும் நம்பிக்கை உண்டு என்பதைக் காட்ட இன்று நடைபெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்தில் அணி திரள்வோம்.- இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பார்க்க பக்கம் 4


திவிநெகும நான்காவது கட்டத்தின் கீழ் விதைப் பொதிகள் பகிர்ந்தளிப்பதற்கு

உங்கள் வீட்டிற்கு நாங்கள் வருகிறோம்!

பத்துவகையான மரக்கறி விதைகளடங்கிய பொதிகள் மற்றும் அறிவுறுத்தல் பத்திரங்கள் இன்று காலை 9.59 முதல் 24ம் திகதி வரை வசதிசெய்பவர்களால் இலங்கையிலுள்ள அனைத்து இல்லங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.



இன்று

விதைப் பொதிகள் பகிர்ந்தளிப்பு

காலை 9.59 மணிக்கமைந்த சுப முகூர்த்தத்தில் கிழக்குத்திசையினை நோக்கி ஆரம்பிக்கப்படும்.

திவிநெகும

வாழ்வு எழுச்சி

நிறைவான இல்லம் - வளமான தாயகம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு விடயத்தில் அரசின் கபடத்தை போட்டுடைத்த கோத்தாவுக்கு நன்றி

## பொது எதிரணி தெரிவிப்பு

13ஆவது அரசியல் திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கு அரசு உடனடியாகப் பதில் கூறியாகவேண்டும். அதிகாரப் பரவலாக்கலில் உண்மைத் தன்மை இருந்தால் அரசு ஏன் இன்னும் மௌனம் காக்கிறது? எது எப்படி இருப்பினும், அதிகாரப் பரவலாக்கலில் அரசின் உண்மையான நிலைப்பாட்டையே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கலாநிதி குமரகுருபரன் நேற்றுத் தெரிவித்தார்.

எந்தவொரு அமைச்சின் செயலாளரும் அரசியல் கருத்துகளைத் தெரிவிப்பதில்லை. ஆனால், தனது குடும்ப அதிகாரத்தைக் கொண்டே அவர் மேற்படி கருத்தொன்றைத் தெரிவித்துள்ளார் எனத் தெரிவித்த அவர், கே.பியுடன் பேச்சு நடத்துவதற்குப் புலம்பெயர் தமிழர்கள் அறிவிலிகள் அல்லர். இப்போதுள்ள தமிழ்த் தலைவர்கள் மக்கள் ஆதரவற்றவர்களும் அல்லர் என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கலாநிதி குமரகுருபரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

13ஆவது அரசியல் திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். பொறுப்பு வாய்ந்த அதிகாரத்திலுள்ள அமைச்சின் செயலாளர்கள் இவ்வாறான அரசியல் கருத்துகளை வெளியிடமாட்டார்கள்.

ஆனால், தமது குடுமப அதிகாரத்தை வைத்துக் கொண்டே அவர் இப்படியொரு கருத்தைக் கணிப்பிடுகிறார். கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்தை ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ, கலாநிதி குணதாச அமரசேகர ஆகியோர் வரவேற்றுள்ளனர்.

> ‘திவிநெகும’ (வாழ்வின் எழுச்சி) என்ற சட்டமூலத்தினூடாக மாகாணசபைகளின் அதிகாரங்களை மத்திய அரசின்வசம் சுவீகரித்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்துக் குறித்து அரசு இதுவரையில் பதிலளிக்கவில்லை. தமிழர் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் அரசின் உண்மையான நிலைப்பாட்டையே அவர் தெரிவித்துள்ளார். அவர் மேற்படி கருத்தைக் கூறியமைக்கு நாம் அவருக்கு நன்றிகூறவேண்டும்.

ஏனெனில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாகக் கூறிக்கொண்டு இந்த அரசு வெறும் கபட நாடகத்தையே நடத்திவருகின்றது. ‘திவிநெகும’ (வாழ்வின் எழுச்சி) என்ற சட்டமூலத்தினூடாக மாகாணசபைகளின் அதிகாரங்களை மத்திய அரசின்வசம் சுவீகரித்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது. இது மட்டுமல்ல, இன்னும் பல நடவடிக்கைகளினூடக 13ஆவது அரசியல் திருத்தத்தை அரசு சிறிதுசிறிதாக இல்லாது செய்துவருகின்றது.

அரசின் இந்த நடவடிக்கைகளின் உண்மைத்தன்மையையே கோத்தபாய் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால், கோத்தபாய ராஜபக்ஷவின் இந்தக் கருத்துக்கு அரசு இதுவரையில் பதிலளிக்கவில்லை. அரசு இதற்கு உடனடியாகப் பதிலளித்தேயாகவேண்டும்.

கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனைக் கொண்டு புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு நடத்தவுள்ளோம் என்று அரசு கூறுகிறது. புலம்பெயர் தமிழர்கள் ஒன்றும் அறிவிலிகள் அல்லர். அத்துடன், தமிழ்த் தலைவர்களும் மக்கள் ஆதரவற்றவர்கள் அல்லர்.

நாட்டில் இடம்பெற்றுவருகின்ற ஜனநாயக விரோத ஆட்சியால் தமிழ் மக்களின் காணி, நிலம் முதல் மயானங்களையும் இராணுவத்தினர் அபகரித்துவிட்டனர் - என்றார் கலாநிதி குமரகுருபரன்.

## கவிஞர்கள் இருவருக்கு புலவர் மாணிப் பட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.22

மூத்த கவிஞர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ம.பார்வதிநாதசிவம், கொழும்பு ஜின்னா ஹ்ஷரி புத்தீன் ஆகியோருக்கு ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம், புலவர் மணி பட்டம் வழங்கி கௌரவிக்கவுள்ளது.

கடந்த காலங்களில் பண்டித மணி, புலவர் மணி, மகாவித்துவான் போன்ற பட்டங்கள் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த அறிஞர்கள், கவிஞர்களுக்கு வழங்கி வந்த ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் நாட்டுச் சூழல் காரணமாக அதனைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட் டது.

இந்த நிலையில் இப்போது மீளவும் நடத்தப்படவுள்ள இந்த விழாவில் இரு கவிஞர்களுக்கும் புலவர் மணிப் பட்டத்துக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன் சங்கத்தின் கலாநிதி சஞ்சிகையும் வெளியிடவுள்ளதுடன் பண்டித மணி நீ. நாகலிங்கம் நினைவுரையும் இடம்பெறும்.

(ஐ-7)

## பருத்தித்துறை இ.போ.ச. ஊழியர்கள் இன்று தொடக்கம் பணிப்புறக்கணிப்பில்

யாழ்ப்பாணம், ஒக்.22

பருத்தித்துறை இ.போ.ச. ஊழியர்கள் இன்றுமுதல் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

தமது சம்பளப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்டும் இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை இதனைக் கண்டித்தே தாம் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

போராட்டம் தொடர்பில் பிராந்திய முகாமையாளர் உள்ளிட்ட தரப்பினருக்கு அறிக்கை அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊழியர்களின் போராட்டம் தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் எஸ்.அஸ்கரிடம் தொடர்புகொண்டு கேட்ட போது;

‘ஊழியர்களது சம்பளப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவது தொடர்பில் அவர்களுக்கு உரியவகையில் விளக்கமளிக்கப்பட்டு விட்டது.

தொழிற்சங்கத்தினூடாக நாளைய போராட்டம் தொடர்பில் எதுவித அறிவித்தலும் தரப்படவில்லை. சில ஊழியர்கள் மட்டுமே வேண்டுமென்று இவ்வாறு குழப்பம் விளைவிக்க முனைகின்றனர்.

இவர்கள் தமது கோரிக்கை தொடர்பிலோ அல்லது போராட்டம் தொடர்பிலோ எமக்கு உரிய நேரத்தில் அறிவிக்கவில்லை.

இன்று (நேற்று) மாலை 4.30 மணிக்கே திடீரென அறிக்கை அனுப்பியுள்ளனர்.

குழப்பம் விளைவிக்க முயலும் ஒரு சிலரால் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் என பஸ்ஸை நம்பிக் காத்திருப்போர் தான் வீண் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும்.

இதனால் இந்த நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-16)

## வீதி புனரமைப்பு கைவிடப்பட்டது

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள சில வீதிகளின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையில் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதால் அந்த வீதியூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வீதி புனரமைப்புக்கென வீதிகளின் மருங்கில் குவிக்கப்பட்ட கற்கள் பரவி இருப்பதால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து இடைநடுவே கைவிடப்பட்ட வீதி திருத்த வேலைகளை பூர்த்தி செய்யுமாறு மக்கள் கோரியுள்ளனர்.

(எ-500)

## யாழ்.-கண்டி பஸ்ஸில் வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து கண்டிநோக்கிச் சென்ற பஸ் ஒன்றில் நேற்றுமுன்தினம் துப்பாக்கி உட்பட வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டிநோக்கி புறப்பட்டுச் சென்ற பஸ் நண்பகல் ஒரு மணியளவில் ஓமந்தைச் சாவடியில் இரா ணுவத்தினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது குறித்த பஸ்ஸிலிருந்த பயணப்பை ஒன்றில் இருந்து துப்பாக்கி ஒன்றும், 27 துப்பாக்கி ரவை களும் மீட்கப்பட்டன.

இவ்வாறு வெடிபொருள்கள் மீட்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலை ஏற்பட்டது. குறித்த பஸ் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டதுடன், அதிலிருந்த பயணிகள் அனைவரும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். நீண்டநேர விசாரணையின் பின்னரே குறித்த பஸ்ஸும் அதில் பயணம் செய்தவர்களும் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டனர்.

வெடிபொருள்கள் மீட்கப்பட்டதை ஓமந்தைப் பொலிஸாரும் உறுதிப்படுத்தினர். எனினும் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ந-16)

## ஐந்து கோரிக்கைகளுடன் ஆசிரியர்கள் கொழும்பில் பாதயாத்திரை போராட்டம்

### ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், ஒக்.22

அதிபர், ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து பாதயாத்திரை ஒன்றை நாளை மறுதினம் புதன்கிழமை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பு ராஜகிரிய என்.எம்.பெரேரா சிலையருகே முற்பகல் 10 மணிக்கு இந்தப் பாதயாத்திரை ஆரம்பமாகி கல்வி அமைச்சின் முன்பாக சென்றடையவுள்ளது.

* அமைச்சரவை அனுமதித்த இடைக்கால சம்பளப் பிரேரணையை உடன் நடைமுறைப்படுத்தி அதிபர் ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பை நிலுவையுடன் வழங்கு,
* அதிபர், ஆசிரியர்களின் பதவு உயர்வுகளை உடன் வழங்கு,
* சம்பள நிலுவை, இடர் கடன், வீடமைப்புக் கடன் உள்ளிட்ட அதிபர் ஆசிரியர்களுக்கு உரித்தான அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் அவசியமான நிதியை ஒதுக்கீடுசெய்,
* மொத்தத் தேசிய உற்பத்தியின் 6 வீதத்தை கல்விக்காக ஒதுக்கீடு செய்,
* கல்வித்துறையை அரசியல் மயப்படுத்துவதை உடன் நிறுத்தி இலவசக் கல்வியின் பாதுகாப்பை உறுதி செய் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பாதயாத்திரை நடைபெறவுள்ளது.

கல்வித்துறை தொடர்பான பல கோரிக்கைகளை வலியுறுத்தி நாம் முன்னர் பல தடவைகள் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்தோம். எனினும், அரசு மௌனமாகவே இருந்து வருகிறது. கல்வி அமைச்சரோ இன்று கல்வித்துறையில் நிலவும் பெரும் பிரச்சினைகள் தொடர்பில் எந்தவொரு கலந்துரையாடல்களையும் நடத்தத் தயாராக இல்லை.

எனவே எமது பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற அனைவரும் ஒன்றிணைந்து தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுப்பதைத் தவிர வேறுவழியில்லை என்று சங்கம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர் சேவை தரம் 3-II, 2-II, 2-I, 7 ஆகிய தரங்களில் உள்ளவர்களுக்கு ஆயிரத்து 750 ரூபாவிலிருந்து 3 ஆயிரத்து 870 ரூபா வரை சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும். அதே போன்று அதிபர் சேவை தரம் 3-I, 2-II, 2-I, 1 ஆகிய தரங்களில் உள்ளவர்களுக்கு 2 ஆயிரத்து 495 ரூபாவிலிருந்து 5 ஆயிரத்த 805 ரூபா வரை சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும்.

(ஐ-04)

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் கலாசார விழாவும் நூல்வெளியீடும்

வலி.தென்மேற்கு,ஒக்.22

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கலாசார விழாவும் நூல் வெளியீட்டு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந்த் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக முல்லை மாவட்ட மேலதிக அரச அதிபர் எ.மோகன்ராஜ், பிரிகேடியர் கே.ஜே.விஜயதிலக, ஜனாதிபதியின் இணைப்பாளர் எஸ். கனகரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

பிரதம விருந்தினர், புதுக்குடியிருப்பு கந்தசுவாமி ஆலயத்திலிருந்து பாடசாலை மாணவர்களின் பாரம்பரிய கலை நிகழ்வுகளுடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவார். கலை கலாசார பண்பாடு மற்றும் பூர்வீக வரலாறு அடங்கிய ‘‘புது வசந்தம்’’ என்னும் நூல் வெளியீட்டு விழாவும் இடம்பெறவுள்ளது. இந்த நூலை அரச அதிபர் நா.வேதநாயகன் வெளியிட்டு வைப்பார்.

இந்த நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வருடம் திருட்டுப் போன நகைகள் பொலிஸாரால் மீட்பு

## சந்தேகத்தில் கைதானவர் மறியலில்

வலி.வடக்கு, ஒக்.22

சாவகச்சேரியில் கடந்த ஆண்டு நடந்த திருட்டுடன் தொடர்புடைய ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதில் அவரிடம் இருந்து திருட்டுப் போன பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என்று யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருட்டு ஒன்று இடம்பெற்றிருந்தது.

இதன்போது பெறுமதியான நகைகள் திருடப்பட்டிருந்தன.

இவற்றின் பெறுமதி 6 லட்சத்து 93 ஆயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டு இருந்தது.

இந்தத் திருட்டுத் தொடர்பாகப் பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து கடந்த 15 ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் மட்டுவிலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து அந்த நபர் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் ஒரு தொகுதி நகைகள் மீட்கப்பட்டன.

ஏனைய நகைகளை தனியார் வங்கி ஒன்றில் அடைவு வைத்துள்ளதாகவும் குறித்த நபர் தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த சந்தேகநபர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வங்கியில் அடைவு வைத்துள்ள நகைகளை மீட்பதற்கு நீதிமன்ற அனுமதி கோரிப் பொலிஸார் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்- என்று எரிக் பெரேரா மேலும் தெரிவித்தார். (ம-86)

# புல்லுக்குளத்து அணைக்கட்டு மழையால் இடிந்து வீழ்ந்தது



கொழும்புத்துறை, ஒக்.22

யாழ். புல்லுக்குளத்தின் நூல் நிலையப் பக்கமாகவுள்ள அணைக்கட்டு அண்மையில் பெய்த மழையை அடுத்து இடிந்து குளத்தினுள் விழுந்துள்ளது.

அந்த இடத்தில் நின்ற மின்கம்பமும் குளத்தினுள் சரிந்து தொங்கிக் கொண்டு ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.

அண்மையில் புல்லுக்குளம் ஆழப்படுத்தப்பட்டபோது அணைக்கட்டின் அத்திபாரத்துக்குக் கீழ் தோண்டப்பட்டமையால் இந்த நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

மழை நீரால் சுமார் 50 அடி நீளமான அணை மண் அரிப்பு ஏற்பட்டுக் குளத்தினுள் சரிந்து வீழ்ந்துள்ளது.

தொடர்ந்து பெய்யவுள்ள மழையால் குளத்தில் நீர் நிரம்பும்போது ஏனைய அணைக்கட்டுகளும் இடிந்து விழும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை, இடிந்த பகுதியில் மின்கம்பம் சரிந்து குளத்தினுள் விழும் நிலையில் உள்ளமையால் அந்தப் பகுதியில் மின்சாரத்தால் மக்கள் பாதிக்கப்பட்க் கூடிய அபாயம் ஏற்படுகிறது.

குளத்தை ஆழப்படுத்தும்போது தொழில்நுட்ப ஆலோசனையின்றி செயற்பட்டமை இந்தப் பாதிப்புக்குக் கரணம் என்று துறை சார்ந்தோர் தெரிவிக்கின்றனர்.

தொடரும் மழைகாலத்தில் ஏற்படக் கூடிய ஆபத்தை நீக்க உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, குளத்தை ஆழப்படுத்தியபோது சுற்றுப்புற வீதிகளில் குவிக்கப்பட்ட சேற்றுமண் அகற்றப்படாமையால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் கூறுகின்றனர். (ம-135)

# சங்கானையில் சனி இரவு கடை உடைத்து திருட்டு

## திருடன் அகப்பட்டான்

**கடந்த வருடம் இந்தக் கடையில் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன.**

சங்கானை,ஒக்.22

சங்கானையில் இருந்து நிற்சாமம் செல்லும் வீதியில் மாளிகாவத்தையில் பலசரக்குக் கடை ஒன்றில் திருட்டில் ஈடுபட்ட ஒருவர் அகப்பட்டார். ஏனையோர் பொருள்களுடன் ஓட்டம் எடுத்தனர்.

சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

சம்பவம் நடைபெற்ற போது, அந்தநேரம் அந்த வழியால் மோட்டார் சைக்கிளில் சங்கானையிலிருந்து நிற்சாமம் சென்ற நபர், சந்தேகத்துக்கிடமான முறையில் குறித்த கடைக்கு அருகில் ஒரு மோட்டார் சைக்கிள் நிற்பதைக் கண்டுள்ளார்.

அதேநேரம் இந்தக் கடையின் கதவு திறந்திருந்ததைக் கண்டு உட் சென்று பார்த்துள்ளார்.

அங்கு ஒருவர், கடையிலிருந்த பொதி செய்யப்பட்ட மிக்சர், தூள், பிஸ்கட் வகைகள், பால்மா போன்றவற்றை ஒவ்வொரு பெட்டிகளில் எடுத்து வைத்துள்ளார்.

குறித்த நபர் அந்த நபரை பிடித்து விசாரித்துள்ளார். அந்த நபர் இவரைத் தாக்க முற்பட்டபோது மடக்கிப் பிடித்து மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து குறித்த நபரை கொண்டு சென்றுள்ளார்.

இதேவேளை, கடையில் இருந்த அரிசி, மா, சீனி மூடைகளை இந்த நபருடன் கூட வந்தவர்கள் முதலில் எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இதே கடையில் கடந்த வருடம் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-29)

## பெருங்குள வீதி திருத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.22

நெல்சிப்- புறநெகும திட்டத்தின் கீழ் நயினாதீவு பெருங்குளம் வீதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

கடல் வழி 'பாஜ்' போக்குவரத்து உதவியுடன் பெருங்குளம் வீதியின்மீளப்புனரமைப்புப் பணி நிறைவடைந்துள்ளது என்று வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா தெரிவித்துள்ளார்.

மக்களின் முன்னுரிமை பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட குறித்த வீதியே இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை புறநெகும திட்டத்தின் கீழ் மண்டைதீவு சுடலை வீதியும் துரித அபிவிருத்தியின் கீழ் மீள் புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-50)



நல்லூரில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் நல்லை ஆதீனத்தின் புதிய கட்டடம் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. லண்டன் வாழ் சைவப் பெருமக்களின் உதவியுடன் இரண்டு மாடிகள் கொண்டதாக அமைக்கப்படும் இந்தக் கட்டடத்தில் மாநாட்டு மண்டபம், விருந்தினர் அறை, நூலகம் உட்பட ஆதீன நிகழ்வுகள் செய்வதற்கான வசதிகளும் உள்ளன. (ம-7)

## கைதடி தபாலக ஊழியர்களால் தொழிற் பூங்காவில் சிரமதானம்

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு கைதடி தபாலக ஊழியர்களால் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற் பூங்காவில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

காலை தொடக்கம் நண்பகல் வரை இடம்பெற்ற இந்தச் சிரமதானத்தில் கைதடி தபாலக பொறுப்பதிகாரி உள்ளிட்ட பத்துக்கும்மேற்பட்டோர்பங்குபற்றினர்.

தொழிற்பூங்காவில் பற்றைகள் வெட்டப்பட்டதுடன் அங்கிருந்த கற்கள் மற்றும் கழிவுகளும் அகற்றப்பட்டு சுத்தமாக்கப்பட்டன.

கைதடி தபாலக ஊழியர்களின் இந்தச் செயற்பாட்டை கைதடியிலுள்ள பல பொது அமைப்புக்களும் பாராட்டியுள்ளன. (ம-288)

## வட்டு. இளைஞன் விளக்கமறியல்

15 வயதுச் சிறுமி ஒருவரைப் பாலி யல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதனையடுத்து குறித்த நபரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 15 வயதுச் சிறுமியை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் ஒருவர் காதலிப்பதாகக் கூறி வன்புணர்வுக்கு ஆளாக்கியதாக இளவாலைப் பொலிஸில் பெற்றோரால் முறையிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட இளவாலைப் பொலிஸார் வட்டுக்கோட்டைப் பொலிஸாருடன் இணைந்து குறித்த நபரைக் கைது செய்தனர் என்று கூறப்பட்டது. (ம-86)

## காவலரண் மூடப்பட்டது

கொழும்புத்துறை மணியம்தோட்டம் சந்தியில் இருந்து வந்த இராணுவக் காவலரண் கடந்த வாரம் மூடப்பட்டுள்ளது. பல வருட காலமாக அந்தப் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவக் காவலரண் அகற்றப்பட்டு தற்போது உதயபுரம் பகுதியில் உள்ள காவலரண் முகாமுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அரியாலை நாவலடிப் பகுதியில் இந்தப் பகுதிக்கான இராணுவ முகாம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ம-135)

# வடதாரகையின் சேவை வாடைக்காற்றால் நிறுத்தம்

**வடதாரகையுடன் மோதிச் சேதப்படுத்தலாம் என்பதால் வடதாரகையின் சேவை நிறுத்தப்பட்டுள்ளது**

யாழ்ப்பாணம், ஒக்.22

நெடுந்தீவுச் சேவைக்கெனத் தருவிக்கப்பட்ட வடதாரகை படகுச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

தற்சமயம் வாடைக் காற்றுக் காலம் ஆரம்பமானதால் நெடுந்தீவுக் கடற்கரையோரப் பகுதி கொந்தளிப்பு நிறைந்து காணப்படுகிறது.

இதனால் வடதாரகை படகை துறைமுகத்துக்கு வெளியில் நிறுத்த முடியாது என்பதுடன் மற்[illegible] படகின் மூலம் பயணிகளைக் கொண்டு சென்று படகில் ஏற்றுவதும் சாத்தியப்படாது என்றும் கூறப்பட்டது.

படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதுப்படும் நிலை இதனால் ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. துறைமுகத்தில் இருந்த பயணிகளை வடதாரகைக்குக் கொண்டு செல்லும் படகுகள் வடதாரகையுடன் மோதிச் சேதப்படுத்தலாம் என்பதால் வடதாரகையின் சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-7)

# வலி. கிழக்கில் கழிவுகளை கொட்டுவதற்கு இரு இடங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.22

வலி. கிழக்குப் பிரதேசத்தில் இருந்து அகற்றப்படும் கழிவுகளைக் கொட்டுவதற்கு இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நீர்வேலி மற்றும் அச்சுவேலி தரவைப் பகுதிகளில் இந்தக் கழிவுகள் கொட்ட இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கொட்டப்படும் கழிவுகள் உரிய வகையில் தீயிடப்பட்டும் வருகின்றன என்று வலி. கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

பொதுமக்கள் தமது சுற்றாடலில் இருந்து அகற்றும் கழிவுகளை இதற்கென ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட இடங்களிலேயே போட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

உயிரிழந்துள்ளார். இவர் சம்பவ இடத்தில் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இதே விபத்தில் மோதுண்ட மற்றைய மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த ஏழாலையைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரம் தர்சினி (வயது-32) என்பவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தில் படுகாயமடைந்த பெண் சுயநினைவு இழந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக தெல்லிப்பழை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ங-16)

## வர்த்தகரின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பின்னர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அவர் அவ்வாறு விளக்கமறியலில் இருந்த சமயத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த இருவருடன் குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த குறித்த பொலிஸ் அதிகாரி வர்த்தகரின் வீட்டுக்கு வந்தார். ''உனது கணவர் எங்களிடம் வாங்கிய கடனை தராமல் ஏமாற்றிவிட்டு வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுவிட்டார். எனவே கடன் பெறுமதிக்குரிய பொருள்களைத் தரவேண்டும்''. என்று வர்த்தகரின் மனைவியிடம் கூறியதுடன், அவரைக் கடுமையாக அச்சுறுத்தியுள்ளனர். பின்னர் வர்த்தகரின் மனைவியை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்து, குறித்த வர்த்தக நிலையத்தில் இருந்த சுமார் ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கையாடிவிட்டனர்.

இந்த மாத முற்பகுதியில் குறித்த வர்த்தகர் விடுதலையானார். அதன் பின்னர் அவருக்கு இந்த மோசடி குறித்து தெரியவந்தது. இது பற்றி அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றபோது பொலிஸார் அவரை அச்சுறுத்தியதுடன் முறைப்பாட்டை ஏற்கவும் மறுத்துவிட்டனர்.

அதன் பின்னர் பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட மூவர் தனக்குச் சொந்தமான ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை மோசடி செய்துள்ளனர் எனத் தெரிவித்து பாதிக்கப்பட்ட வர்த்தகர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ங-6)

## உலகிலேயோ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கள் காவுகொள்ளப்பட்டன. இது இன்னமும் மனதை விட்டகலாத துயர நிகழ்வாகப் படிந்திருக்கிறது- இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் 25 வருடங்களுக்கு முன்னர் இந்திய இராணுவத்தினர் நடத்திய வெறியாட்டத்தில் பணியிலிருந்த வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், தாதியர்கள், ஊழியர்கள் உட்பட 21 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த வைத்தியசாலைப் படுகொலைகளின் 25ஆவது நினைவு தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுக்காலை உணர்வுபூர்வமாக நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஸ்ரீபவானந்தராஜா இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

வைத்தியசாலைகள், அம்புலன்ஸ் வண்டிகள், அகதிமுகாம்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது உலகில் எந்த ஒருநாட்டிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிராத ஒன்று. எந்தவொரு இடத்திலும் அவ்வாறு நடக்காத, நடக்கக் கூடாத விடயமும் கூட. ஆனால் இங்கு அத்தகைய கொடூரம் நிகழ்ந்திருக்கிறது.

போரின் நெருக்கடிக்குள்ளும் கடும் அச்சுறுத்தல்கள், ஆபத்துகள் என்பவற்றுக்கும் மத்தியில் மக்களுக்கு சேவையாற்றவென யாழ். போதனா வைத்தியசாலையில் பணிக்கு வந்த வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட 21பேர் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர். 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளில் இந்தப் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன. இது மன்னிக்க முடியாத, துக்ககரமான ஒரு சம்பவம்.

படுகொலைசெய்யப்பட்ட 21 பேருடன் பணியாற்றியவர்களில் சிலர் தற்பொழுதும் போதனா வைத்தியசாலையில்சேவையில் உள்ளனர். அவர்களின் மனங்களில் மட்டுமல்லாமல் எல்லோரிடத்தும் இந்த வைத்தியசாலைப் படுகொலைகள் என்றுமே மறக்கமுடியாத துயர நிகழ்வாகப் படிந்துள்ளன-என்றார்.

படுகொலையானவர்களின் உறவினர்கள், தாதியர்கள், ஊழியர்கள் எனப் பலரும் இந்த நினைவு நிகழ்வில் கலந்து கொண்டனர். உயிரிழந்தோரின் உருவப் படங்களுக்கு உறவினர்கள் கண்ணீர் மல்க, தீபம் ஏற்றி, மலர்மாலை அணிவித்து தமது அஞ்சலிகளைச் செலுத்தினர். (ங-4-78)

## கே.பியை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்கான முன்னாள் பொறுப்பாளரான கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன் தொடர்பான வழக்குகளோ அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் போதிய ஆதாரங்களோ இல்லையென தேசிய பாதுகாப்புக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக் கருத்தை நாம் ஏற்கமுடியாது. குமரன் பத்மநாதனுக்கு எதிராக இந்தியாவில் சென்னை நீதிமன்றமொன்றில் வழக்குள்ளதுடன் நீதிமன்றத்தினால் பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அவரை சர்வதேச பொலிஸாரும் தேடி வருகின்றனர். இந்நிலையில் தேசிய பாதுகாப்புக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளர் இவ்வாறானதொரு கருத்து தெரிவித்துள்ளமை உண்மையை மூடி மறைக்கும் செயலாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுக்கு அடுத்த தலைவர் என பகிரங்கமாக கூறப்பட்ட ஒருவரே இந்த குமரன் பத்மநாதன். இவர் போர்குற்றவாளி, பயங்கரவாதி எனவே ஏன் அவரை பாதுகாக்கும் வகையில் அரசு செயல்பட வேண்டும்.

சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டு வருபவரான கே.பி தொடர்பில் தம்மிடம் இருக்கும் ஆதாரங்கள் - தகவல்களை பொலிஸ்மா அதிபர் சர்வதேச பொலிஸாரிடம் வழங்க வேண்டும். சர்வதேச பொலிஸில் இலங்கைப் பிரதிநிதிகளும் இருக்கின்றனர். அத்துடன், இரு தரப்பினருக்குமிடையே தகவல் பரிமாற்றங்களும் இடம்பெறுகின்றன. அந்தவகையில் சர்வதேச பொலிஸாரிடம் கே.பி தொடர்பான ஆதாரங்கள் - தகவல்களைப் பொலிஸ்மா அதிபர் வழங்க வேண்டும் - என்றார்.

## அரசுடன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன தாக்கப்பட்டமையை கண்டிப்பதாக தெரிவித்த அவர், சுயாதீன நீதித்துறை மற்றும் சட்டவாக்கம் ஆகியவற்றின் சுயாதீன செயற்பாடுகளின் உறுதி தொடர்பில் தீர்மானிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ங)

## டில்லிக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையில் அரசியல் தீர்வு மற்றும் வடபகுதியில் இராணுவப் பிரசன்னம் உட்பட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு விளக்கமளித்திருந்தார்.

இதனையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் இந்தியப் பிரதமர் முக்கிய சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். அந்தப் பேச்சுக்களின் தொடர்ச்சியாகவே பாதுகாப்புச் செயலரின் இந்தப் பயணம் இடம்பெறுவதாகத் தெரிகிறது.

''13ஆவது திருத்தத்தினை ரத்துச்செய்வது தொடர்பில் இலங்கையில் ஏற்பட்டுள்ள வாதப்பிரதிவாதங்கள், புலிகள் இயக்கத்தின் முன்னாள் ஆலோசகரை இந்தியாவிடம் ஒப்படைப்பது குறித்தான இந்திய மத்திய அரசின் கோரிக்கை, வடபகுதியில் இராணுவப் பிரசன்னத்தை குறைப்பது போன்ற விடயங்களை இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இலங்கை பாதுகாப்புச் செயலாளருடன் ஆராய்வார்'' என்று உயர்மட்ட இந்திய இராஜதந்திரியொருவர் தெரிவித்தார். எதிர்வரும் புதன்கிழமையளவில் கோத்தபாய இந்தியா செல்வாரென தெரிவிக்கப்படுகிறது. (ங-சி)

## இலங்கையை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

எந்தவொரு அமைச்சின் செயலாளரும் அரசியல் கருத்துகளைத் தெரிவிப்பதில்லை. ஆனால், தனது குடும்ப அதிகாரத்தைக் கொண்டே அவர் மேற்படி கருத்தொன்றைத் தெரிவித்துள்ளார் எனத் தெரிவித்த அவர், கே.பியுடன் பேச்சு நடத்துவதற்குப் புலம்பெயர் தமிழர்கள் அறிவிலிகள் அல்லர். இப்போதுள்ள தமிழ்த் தலைவர்கள் மக்கள் ஆதரவற்றவர்களும் அல்லர் என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்றபொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே கலாநிதி குமரகுருபரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

13ஆவது அரசியல் திருத்தத்தை இல்லாதொழிக்கவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். பொறுப்புவாய்ந்த அதிகாரத்திலுள்ள அமைச்சின் செயலாளர்கள் இவ்வாறான அரசியல் கருத்துகளை வெளியிடமாட்டார்கள்.

ஆனால், தமது குடும்ப அதிகாரத்தை வைத்துக்கொண்டே அவர் இப்படியொரு கருத்தைக் கணிப்பிடுகிறார். கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்தை ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ, கலாநிதி குணதாச அமரசேகர ஆகியோர் வரவேற்றுள்ளனர்.

கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்துக் குறித்து அரசு இதுவரையில் பதிலளிக்கவில்லை. தமிழர் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் அரசின் உண்மையான நிலைப்பாட்டையே அவர் தெரிவித்துள்ளார். அவர் மேற்படி கருத்தைக் கூறியமைக்கு நாம் அவருக்கு நன்றிகூறவேண்டும்.

ஏனெனில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாகக் கூறிக்கொண்டு இந்த அரசு வெறும் கபட நாடகத்தையே நடத்திவருகின்றது. 'திவிநெகும' (வாழ்வின் எழுச்சி) என்ற சட்டமூலத்தினூடாக மாகாணசபைகளின் அதிகாரங்களை மத்திய அரசின்வசம் சுவீகரித்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது. இது மட்டுமல்ல, இன்னும் பல நடவடிக்கைகளினூடக 13ஆவது அரசியல் திருத்தத்தை அரசு சிறிது சிறிதாக இல்லாது செய்துவருகின்றது.

அரசின் இந்த நடவடிக்கைகளின் உண்மைத்தன்மையையே கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால், கோத்தபாய ராஜபக்ஷவின் இந்தக் கருத்துக்கு அரசு இதுவரையில் பதிலளிக்கவில்லை. அரசு இதற்கு உடனடியாகப் பதிலளித்தேயாக வேண்டும். - என்றார் கலாநிதி குமரகுருபரன்.

## அரசின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வித்தவை வருமாறு:-

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்காத இந்த அரசு அவர்களிடம் தோல்வியையே தழுவியுள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நுவரெலியா, கொழும்பு உள்ளிட்ட மாவட்டங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வியையே தழுவினார். இதிலிருந்து என்ன தெரிகிறது? அவர் சிறுபான்மை மக்களிடம் தோற்றுவிட்டார் என்பதே தெளிவு.

சிங்கள, பௌத்த மக்களிடம் மட்டுமே வெற்றிபெற்ற இந்த அரசு அதனை அறியாதது போல் செயற்படுகிறது. ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களை உதாசீனம் செய்துவிட்டு, தமிழ் மக்களிடையே தலைவரொருவரைத் திணிக்க அரசு முயற்சிக்கின்றது. அதுவே அரசின் இன்றைய தேவைப்பாடாகவும் இருக்கின்றது.

எது எப்படியிருப்பினும் அரசின் இந்தக் கபட நாடகத்திற்கு தமிழ் மக்கள் ஒருபோதும் பலியாக மாட்டார்கள். அரசின் நாடகம் எம்மிடம் எடுபடாது என்று இந்த அரசுக்கு மட்டுமல்ல, சர்வதேசத்திற்குமே தமிழ் மக்கள் எடுத்துக்கூறுவர் - என்றார் சுமந்திரன். (ங-சி)

## அகிம்சை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மீண்டும் ஒருமுறை ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்கும் முயற்சி ஒன்று கொக்குவிலில் அரங்கேறியிருக்கிறது. இராணுவத்தின் நில அபகரிப்புக்கு எதிராக போராடிவரும் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப. வசந்தகுமார் மீது நடத்தப்பட்ட தாக்குதல், தமிழர் பகுதியில் ஜனநாயகத்தின் நிலை என்னவென்பதை உலகின் முன் பட்டவர்த்தனமாக்கியுள்ளது.

போர் நடைபெற்ற காலத்தில் ஆயுதங்களின் அச்சுறுத்தல் துணையோடு தமிழர்களின் தாயக பூமி அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, முள்வேலி இடப்பட்டு உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற நாமம் பொறிக்கப்பட்டு, படை முகாம்களாலும் காவலரண்களாலும் நிறைக்கப்பட்டது.

போர் முடிந்த பின்னரும் இராணுவத்தின் நிலத்தை விழுங்கும் பசி அடங்கவில்லை. தம்முடைய இருப்பை இன்னமும் தமிழர் பகுதிகளில் தக்கவைத்துக் கொள்வதற்காக சட்டவிரோதமாக தனியார் காணிகளை அபகரித்து தம்முடைய தேவைகளுக்காக நிரந்தர படைத்தளங்களை இராணுவத்தினர் அமைத்து வருகின்றனர். இத்தகைய அபகரிப்பின் தொடர்ச்சியாக நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியை படைத்தரப்பு கபளீகரம் செய்திருந்தது.

ஆயினும் இது குறித்து வாளாவிருக்காமல் உடனடியாகவே நிலமீட்பு நடவடிக்கையில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் இறங்கியிருந்தார். கடந்த 7ஆம் திகதி இது குறித்து 51 ஆவது படையணியின் பிரிகேடியர் சன்ன குணவர்த்தனவுடன் கலந்துரையாட நான் சென்றபோது, நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் கூடவே வந்திருந்தார்.

சட்டவிரோத காணி அபகரிப்புப் பற்றி படையணியின் தளபதியிடம் நான் விளக்கம் கேட்டபோது, ''அரசு நினைத்தால் எந்தக் காணியையும் சுவீகரிக்கும். அதனை யாராலும் தடுக்க முடியாது'' என்று இறுமாப்புடன் அந்த இராணுவ பொறுப்பதிகாரி பதில் சொல்லியிருந்தார். இதன்பின்னர் சட்ட நடவடிக்கை மூலம் நிலத்தை மீட்க முடிவுசெய்திருந்தோம். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தால், நிச்சயமாக இந்த நிலத்தை இராணுவத்திடம் இருந்து மீட்க முடியும். இது அரசுக்கும் இராணுவத்துக்கும் நன்கு தெரியும். அதனால் தான் குறித்த வழக்கை தாக்கல் செய்வதைத் தடுப்பதற்காக நல்லூர் பிரதேச சபைத் தலைவரை தாக்கியுள்ளனர்.

அரசுக்கு எதிரானவர்களை அல்லது மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்களை எந்தவித கேள்வியும் இன்றி இராணுவப் புலனாய்வாளர்களாலும், அதன் அடிவருடிக் கும்பல்கள் மூலமும் அச்சுறுத்தல், கொலை செய்தல், கழிவு ஒயில் வீசுதல் என்பன நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு இன்னமும் முற்றுப்புள்ளி வைத்ததாக இல்லை.

அரச அதிகாரிகளும் நியாயத்தின் பக்கம் செயற்பட அஞ்சுகிறார்கள். உயிர் அச்சம் மற்றும் பதவியாசை என்பன காரணமாக அவர்களும் அரசுக்கும் இராணுவத்துக்கும் அமைச்சர்களுக்கும் ஏவலாளிகள் போலவே பணிபுரிகிறார்கள். அவர்கள் இத்தகைய அதிகாரச் சார்பு நிலையைவிடுத்து மக்களுக்குப் பணியாற்ற முன்வரவேண்டும்.

நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதாக சர்வதேசத்துக்கு வாக்குறுதி அளித்துவிட்டு, சன அடர்த்தி மிகுந்த இடங்களில் உள்ள மக்களின் நிலங்களை பலவந்தமாக விழுங்கிவருகிறது அரசு. அத்தோடு தமது மண் பறிபோவதை கண்டித்து ஜனநாயக ரீதியாக மக்கள் போராடப் புறப்பட்டால் அதனை எப்படி நீதிமன்ற உத்தரவுகள் மூலம் தடுத்து நிறுத்தலாம் என்று தான் அரசும் பொலிஸாரும் சிந்திக்கிறார்கள். மாறாக மக்களின் பிரச்சினையை எப்படித் தீர்க்கலாம் என்று நினைப்பதே இல்லை. இத்தகைய பேரினவாத மனோநிலையே பல தசாப்தங்கள் கடந்தும் இனப்பிரச்சினை இலங்கையில் கொழுந்துவிட்டு எரிவதற்கு காரணி.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் மீதான தாக்குதல் போன்ற ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடுகள், 80களில் இலங்கையில் நிலவிய தமிழர் விரோத நிகழ்வுகளை மீள் பிரசவிப்பன போலவே இருக்கின்றன. இத்தகைய உரிமை மறுப்புகளும், ஆயுத முனை அச்சுறுத்தல்களும் மீண்டும் தமிழினத்தை ஆயுதப் போராட்டத்தை நோக்கி உந்தித் தள்ளுவனவாகவே அமைந்துள்ளன.

ஆயினும் இன்னமும் நாங்கள் அகிம்சை மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். இதனை வெளிப்படுத்த இன்று (திங்கட்கிழமை) கூட்டமைப்பின் வசமுள்ள பிரதேச சபைகளின் முன்பாக நடைபெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்தில் தமிழின மக்கள் அனைவரும் தமது உரிமைக்காகவும், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் மீதான தாக்குதலைக் கண்டித்தும் குரல் எழுப்ப திரண்டு வரவேண்டும என அழைக்கிறேன். - என்றுள்ளது. (ங)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சமூக சேவையாற்றியோர்மதிக்கப்பட வேண்டியவர்கள்

## யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் உரை

சமுதாய நலனுக்காக சேவையாற்றியவர்களை நாம் என்றுமே மறக்கமுடியாது. அவர்களின் பணிகள் மதிக் கப்பட வேண்டியதுடன் பாராட்டப்பட வேண்டி யவை.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் இவ் வாறு தெரிவித்தார்.

ஸ்ரீமதி நகுலாம்பிகை அம்பிகைபாகனின் 90ஆவது பிறந்தநாள் விழாவும் ''அம் பிகைபாகன் ஆளுமைத் தடம்'' எனும் நூல் வெளியீ டும்கடந்த வியாழக்கிழமை யாழ். வைத் தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றன.

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபர் எம்.மகேந் திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

ஆரம்ப காலங்களைவிட தற்போதைய சூழலில் புறம் கூறும் சமுதாயமே உருவாகிக் கொண்டிருக் +கிறது. மற்றவர்கள் செய்யும் நல்ல செயற்பாடுகளை மதிப்பதற்கு யாருமே இல்லை. இதனால் சமூக நலச் செயற்பாடுகள் குறைவடைந்து போகின்றன.

ஆனால் ஆரம்ப காலங்களில் சமுதாயத்துக்கு என்ன பணிகளை முன்னேற்றகரமாக மேற்கொள்ள முடியும் என்பதை சேர்ந்து இருந்து பேசி முடிவெடுப்பார்கள்.

இவையெல்லாம் தற்போது அருகி விட்டன. சமுதாயத்துக்காக தொண்டாற்றியவர்களை நாம் மதிக்க வேண்டும். அவர்களின் பணி களை நினைவு படுத்திப் பாராட்ட வேண்டும்.-என்றார்.

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவிகளின் வர வேற்பு நடனத்துடன் ஆரம்ப மாகிய இந்த நிகழ்வில் தொடர்ந்து வரவேற்புரையை அமெரிக்க ஆரோக்கிய பரா மரிப்பு நிலையத்தைச் சேர்ந்த திருமதி ஆனந்த கௌரி நவானந்தனும், தலைமை யுரையை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் எம். மகேந்திர னும் வாழ்த்துரைகளை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், யாழ். பல் கலைக் கழக விஞ்ஞான பீட முது நிலைப் பேராசிரியர் இ.குமார வடிவேல், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ் வரன், யாழ். வைத் தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சிவ.சரவண பவன், தெல் லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தின் தலைவர் ஆறு. திருமுரு கன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து அம்பிகைபாகன் ஆளுமைத் தடம் நூலின் ஆசிரியரும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரி வுரை யாளருமான முருகேசு கௌரி காந்தன், ஸ்ரீமதி நகு லாம்பிகை அம்பிகைபாகன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.



தொடர்ந்து யாழ்.பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நூலை வெளியிட்டு வைத்தார். நூலின் வெளியீட்டுரையை முனைவர் கந்தையா ஸ்ரீகணேசனும் நூல் ஆய்வுரையை கல்லூரியின் முன்னாள் அதிபர் என்.வன்னியசிங்கமும் நிகழ்த்தினர்.

(ம-14-86)




எடிசன் அக்கடமியின் 25ம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் எடிசன் அக்கடமியின் நிர்வாகி பி.பி.பாஸ்கரன் தலைமை யில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக ஆசிரியர் கதிர்காமத்தம்பி, சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் கு.மிகுந்தன், பேராசிரி யர்.தி.வேல்நம்பி, பேராசிரியர் செ.இளங்குமரன், விரிவுரையாளர் க.அருந்தவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-16)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமேஸ்வரி சிவகுருநாதன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், காங் கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்து வந்தவருமான திருமதி பரமேஸ்வரி சிவகுருநாதன் கடந்த (15.10. 2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருநாதனின் (லிகிதர், சிமெந்து கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - தையல்முத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வடிவேற் கரசு மற்றும் செல்வநாயகம் (கனடா), சுகுணாதேவி (ஜேர்மனி), சுதாகரன் (லண்டன்), கருணாகரன் (ஜேர்மனி), யசோதரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், கைலாசநாயகி, கலாதேவி, பேரின்ப நாயகம், காஞ்சனாதேவி, மகேசன் ஆகியோரின் மாமியும், நிரஞ்சன், ஜெயந்தன், முகுந்தன், ஸ்ரீகௌரி, விக்னா, பிறேமி, அருண், கரண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டிலக்ஷி, சுஸ்மிதாகினி, சானுஜன், திவ்வியனி, பிறிமிக்கா, சாருக்ஷன், தனுஷன், சாருஜா, பவித்திரா, ரினுஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2012) திங்கட்கிழமை காலை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8/3, புகையிரத வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(24838)(3.6)

தகவல்:
மருமகள்,
பேரன்மார்கள்

## சின்னர் செல்லத்துரை



சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப் பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் செல்லத்துரை நேற்று (21.10.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவசண்முகநாதன் (சண்-ஆஸ்திரேலியா), பொண்ராஜா, இந்திரராஜா, புவனேஸ்வரி, சந்திரா, உதயகுமாரி (கனடா), லோகேஸ்வரி (பிரான்ஸ்), சிறீஸ்கந்தராஜா (உரிமையாளர், 5115, முத்துமாரி மினிபஸ்) ஆகியோரின் தந்தை யும், நவரத்தினம், உதயசிறி, சாந்தா, துபா, சுபா, சிவஞானம், ஆனந்தி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(24644)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்லையா குணரட்ணம் (சின்னமணி)



முருகேசர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், யமுனா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குணரட்ணம் நேற்று (21.10.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சின்னத்துரை- சின்னம்மா தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் (லீலா) பாசமிகு கணவரும், வதனா (கனடா), வதி, வசந்தி, ரஜி, சாந்தி, காலஞ்சென்ற சசிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சோதி அம்மா, நாதன் மற்றும் ராசாத்தி (மனா-கனடா), ஆஞ்சன், பேபி, விசயரத்தினம், கனகராணி, நேசமணி, சவுந்தலா ஆகியோரின் சகோதரனும், குணசேகரன் (கனடா), ரவிச்சந்திரன், பாலசூரி ஆகியோரின் மாமனும், சுகந்தன், சுகந்தி, கோபி, அனுசியா, வாசுகி, சுரேகா, சுமன், சுமதி, ஐஸ்வரியா, கௌதமன், ஐங்கரன், சுரேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2012) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.24, யமுனா வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி மேரிராணி அல்பிறட் (பொன்கிளி)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், புதுவீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிராணி அல்பிறட் நேற்று (21.10.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீமான் பிள்ளை - திவ்யம் தம்பதியரின் மகளும், காலஞ் சென்றவர்களான சோமு - றோசம்மா தம்பதி யரின் மருமகளும், காலஞ்சென்ற அல்பிறட்டின் (ஜயாத்துரை) பாசமிகு மனைவியும், காலஞ் சென்ற அனி மற்றும் லீலா காலஞ்சென்ற வர்களான டொன்பொஸ்கோ, சின்னக்கிளி மற்றும் கசில்டா (பிள்ளை), இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பற்றிக், ஜெகதாம்பாள், எலிசபெத், காலஞ்சென்ற வர்களான செல்லத்துரை, முத்துச்சாமி, ஜீவமலர், யேசுரட்ணம், துரைசிங்கம், கனகமணி, இராசமணி, துரைரெட்ணம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், விமல், வனிதா, லலிதா, காலஞ்சென்ற அகிலா, மற்றும் திலகா, செல்வதி, தம்பினா, பாபு, சித்திரா ஆகியோரின் அன்புத்தாயும், ஜெயராசா, செல்ராசா, நல்லைநாதன், அன்ரன், பாமா, ரமேஸ் ஆகியோரின் அன்பு மாமியும், அமுதினி, ஜெனனி, அஜந்தன், ஜெனிற்றா, லக்சி, ஆனந், அனுசியா, நிஷா, நரேஸ், நிலோசா, சந்தோஸ், கார்த்தி, அவந்தி, ஆர்த்தியா, லேயா, பிறின்சி, அபி, ஐஸ்வர்யா, பிரீத்தி, அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அன்ருஷன், அல்வின், அக்ஷயா, சச்சின், சஞ்ஜெ, அலிசியா, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (23.10.2012) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26/3, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 ஆம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம் 15 ★ 09 ★ 1967

மறைவு 26 ★ 09 ★ 2009



அமரர்
**சிவசுப்பிரமணியம் கிருஸ்ணதாஸ்**

எங்களை விட்டு நீங்கள் பிரிந்தாலும்
எங்கள் மனதை விட்டு உங்கள்
நினைவை மறக்க முடியாது
மனமுருகி வாழுகின்றோம்.

50/18, செட்டித்தெரு,நல்லூர், யாழ்ப்பாணம்.

மைத்துனர்
N. சந்திரதாஸ்

(24625)(6.7.8)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 ★ 07 ★ 1947

இறப்பு 19 ★ 10 ★ 2007



அமரர் **பாக்கியலட்சுமி குலவீரசிங்கம்**

திதி : அட்டமி (22.10.2012)


ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு என்றும் அகலா.

ஈஞ்சடி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய். (23153)(6.7.8) குடும்பத்தினர்.

## என்றும் நீங்கா நினைவலைகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
06.07.1929

உதிர்வு
03.11.2011



வேல்லணை சரவணை மேற்கு,
ஸ்ரீ அருள் வரத
காளி அம்பாள் கோயிலடி

அமரர் **ஐயம்பிள்ளை கோபாலபிள்ளை**

*(வதிவிடம் – கொழும்பு)*

திதி : 22.10.2012

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் நிறைகுடமாய்
பண்பின் சிகரமாய் பாரினில் உயர்ந்தவனாய்
இன்முகம் காட்டி இனிய மொழி பேசிய நல்லவனே
ஊரர் உள்ளமெல்லாம் உத்தமனாய் உறைந்து விட்டாய்

ஆண்டுகள் பல சென்றாலும் உம் மறையா
நினைவலைகள் எம்மைவிட்டு மறையாதய்யா
உங்கள் ஆத்ம சாந்திக்காக உளம் உருகி
வரத காளி அம்பாளிடம் வேண்டி நிற்கும்...

சரவணை மேற்கு.
(24516)(6.7.8)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி முத்து இராசேந்திரம் அன்னம்மா



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்து இராசேந்திரம் அன்னம்மா நேற்று (21.10.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

158, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். (சி/4263)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## 2 லட்சம் பேருக்கு பாலியல் நோய்

கொழும்பு,ஒக். 22

இலங்கையில் ஆண்டொன்றுக்கு 60 ஆயிரம் முதல் 2 லட்சம் பேர்வரை பாலியல் ரீதியிலான நோய்களுக்கு ஆளாகின்றனர் என்று புதிய ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது என்றுதேசிய பாலியல் நோய்கள்மற்றும்எயிட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் விசேட நிபுணர் டாக்டர் ஜீ.வீரசிங்க தெரிவித்தார்.

மேற்கண்ட தொகையினர்பாலியல் நோய்களுக்கு உள்ளாகின்ற போதிலும் சுமார் 10ஆயிரம் முதல் 15 ஆயிரம் பேர் மாத்திரமே இது தொடர்பான சிகிச்சைகளுக்காக வைத்தியர்களை நாடுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெட்கம், சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுதல், அறியாமை போன்ற காரணங்களாலேயே இந்த நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதில்லை என்று டாக்டர் வீரசிங்க கூறினார்.

எச்.ஐ.வி. எயிட்ஸ் தொற்றானது தாயிடமிருந்து குழந்தைக்குத் தொற்றுவதால் கர்ப்பிணிப் பெண்கள் இரத்த பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்ததென்று தெரிவித்த அவர், இலங்கையில் எயிட்ஸ் நோயானது ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மூலமாகவே அதிகளவில் பரவுகின்றது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (த)

## புத்தகக் கண்காட்சியும்-நூலகமன்றப் போட்டியும்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் எதிர்வரும் 23, 24, 25 ஆகிய திகதிகளில் புத்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

சமயம், வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம், ஆரோக்கியம், அரசியல், கணினி, தொழில்நுட்பம் என பல பிரிவுகளாக கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு சுன்னாகம் புத்தகச் சோலை அதிபர் சபா. புஸ்பநாதன் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். அன்றைய தினம் நூலக மன்றத்துக்குரிய சஞ்சிகை ஆக்கம், கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன என்று கல்லூரி அதிபர் ராமநாதன் ஈஸ்வரதாசன் தெரிவித்துள்ளதுடன் மாணவர்கள் புத்தகக் கண்காட்சி [illegible] யுள்ளார்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி செல்லையா கமலாம்பிகை

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், இல.20, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா கமலாம்பிகை நேற்று முன்தினம் (20.10.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி (வெள்ளையர்) - மருதடியாள் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், மங்களநாயகி, சுந்தரநாயகி, நாகரத்தினம் (முன்னாள் ஊழியர் - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும், மதியாபரணம் (முன்னாள் ஊழியர் - ப.நோ.கூ.சங்கம், வேலணை), மகாதேவா (வர்த்தகர்), புவிமலர்தேவி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான யோகம்மா, முத்துலட்சுமி, இரத்தினவிநாயகர், இராசசேகரம், பாலகணபதி, பரஞ்சோதி மற்றும் படிகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.20, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (24636) (45.7.6)

தகவல்:
செ. நாகரத்தினம்
(மகள்).

### சிவராசா குணபூசணி *(குணம்)*



கைதடி நுணாவில், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா குணபூசணி நேற்று (21.10.2012) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் சிவராசாவின் (முன்னாள் உத்தியோகத்தர் - சிமெந்துக்கூட்டுத்தாபனம் , காங்கேசன் துறை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - கனகபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கவிசாலினி (லண்டன்), காலஞ்சென்ற ரகுலாதன் மற்றும் பிரிந்தாயினி (2012 கலைப்பிரிவு - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், சிவரூபனின் (லண்டன்) அன்பு மாமியும், புஸ்பமலரின் அன்புச் சகோதரியும், பேரின்பம், சிவசம்பு, துரை, இராசமணி, சிவஞானம் (உதயாலொட்ஜ், வெள்ளவத்தை), செல்வராணி ஆகியோரின் அன்புமைத்துனியும், காலஞ்சென்ற கனகமணியின் பெறாமகளும், கனகராசா, காலஞ்சென்ற கனகசிங்கம் மற்றும் கனக சூரியர், கனகச் சந்திரன் ஆகியோ ரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி. (21571)(3.6.7)

தகவல்:
சிவராசா (கணவர்).

### அருட்சகோதரி மேரி கில்டகாட் வைத்தியாம்பிள்ளை - *தி.கு*



இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி கில்டகாட் வைத்தியாம்பிள்ளை 20.10.2012 சனிக்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரது பூதவுடல் இன்று (22.10.2012) திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

தகவல்:
அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ்,
மாகாணத் தலைவி,
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(24628)(3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பெரும்பான்மை இனத் தலைவர்களிடம் பெருமனதை எதிர்பார்க்க முடியுமா?

நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும் என்று பலத்த குரலில் ஓங்கி ஒலித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சரத் பொன்சேகா.

கொழும்பு ஹைட் பாக் மைதானத்தில் தேசிய பிக்குகள் முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமது வெற்றி கொள்ளை அடிக் கப்பட்டிருக்காவிடில், இப்போதெல்லாம் நிறைவேற்று ஜனாதிபதிமுறை ஒழிக்கப்பட்டிருக்கும் என்றும் அவர் பிரலாபித்திருக்கிறார். சிறையிலிருந்து மீண்ட பின்னர் தனக்கென ஓர் அரசியல் கட்சியை ஆரம்பித்து அதற்கு மக்கள் ஆதரவு திரட்டி வரும் அவர், இப்போதைய அரசியல் சூழ்நிலையில் இவ்வாறு கருத்துத் தெரிவிக்க வேண்டிய கட்டாய தேவை எழுந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் வென்று அந்தக் கதிரையில் அவர் அமர்ந்திருப்பின், ஏதோ ஒரு தேவையைக் காட்டி மீண்டும் அந்தப் பதவியை தக்க வைப்பதற்கான வழிமுறைகள் மற்றும் புதிய சட்ட வசதிகளைச் செய்வது குறித்தே நித்தமும் சிந்தித்திருப்பார்.

ஏனெனில், நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை இந்த நாட்டில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா புகுத்திய பின்னர், அப்பதவியை வகித்தவர்கள், அதனை நீக்கப்போவதாகச் சொல்லிச் சொல்லியே, அதனை மீண்டும் மீண்டும் ஆண்டு அனுபவித்தார்கள். மக்கள் நலன்களைப் பின்னுக்குத் தள்ளித் தள்ளியே, தமக்குள் அதிகாரங்களைப் பெருக்கினார்கள்.

அந்த முன்மாதிரிகள் இப்போதும் தொடர்கின்றன என்றால் தப்பன்று.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்று தேர்தல் பிரசாரங்களில் வாக்குறுதி அளித்த எவருமே, தேர்தலில் வென்ற பின்னர் தமது வாக்குறுதியை நிறைவேற்றிய வரலாறு இலங்கையில் கிடையாது. எதிர்காலத்திலும் இதே நிலைமையே தொடரும் என்பதில் எவருக்கும் ஐயுறவு இருக்க வேண்டியதில்லை.

1977 பொதுத் தேர்தலில் ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி மொத்தம் 168 நாடாளுமன்ற ஆசனங்களில் 140இல் வெற்றிபெற்று ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது. மிகவும் தந்திரமான அரசியல்வாதி என்று கருதப்பட்ட ஜே.ஆர். ஜெயவர்தன எதிர்காலத்தில் எந்த ஒரு கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சி அமைக்க முடியாத விதத்தில், பிரெஞ்சு அரசமைப்புப் பாணியில் ஓர் அரசமைப்பை 1978 இல் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன புதிய அரசமைப்பை உருவாக்கிய போது, பிரெஞ்சு அரசமைப்பைப் பின்பற்றுவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால், பிரான்ஸில் ஜனாதிபதிக்கு உள்ளதைவிட மிகவும் கூடுதலான அதிகாரங்கள் இலங்கை அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அரசமைப்பு மூலம் ஜனாதிபதி பெற்றுள்ள அதிஉச்ச அதிகாரங்கள், கடந்த இரண்டு தசாப்தங்களாக சர்ச்சைக்குரியனவாகவே இங்கு இருந்து வருகின்றன.

தேர்தலில் வெற்றிபெற்றால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கப்போவதாகக் கூறிய எவருமே அதனை நீக்க முயற்சிக்காமல், அதிகார வெறியுடன் செயற்படுவது இந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள சாபக்கேடு.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறைமையைக் கொண்ட அரசமைப்பை ஜே.ஆர். ஜெயவர்தன நாடாளுமன்றத்தில் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தபோது, அவ்வேளை எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, ஜனநாயகத்துக்குச் சாவுமணி என்று எச்சரித்தார்.

அதன் பின்னர் 1994 தேர்தலில் பதவிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்கவும் தேர்தல் பிரசாரங்களின்போது தாம் பதவிக்கு வந்தால், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நீக்கப்போவதாகக் கூறினார். இருபத்துநான்கு மணித்தியாலங்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை நீக்கப்போவதாகவும், வெஸ்ட் மினிஸ்டர் பாணியிலான அரசமைப்பை உருவாக்கப் போவதாகவும் சூளுரைத்தார். ஆனால் எதுவுமே நடைபெறவில்லை.

2005இல் பதவிக்கு வந்த ஜனாதிபதி ராஜபக்ஷவும் தனது தேர்தல் பிரசாரங்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதை முதன்மைப்படுத்தியே பிரசாரம் செய்து வெற்றிபெற்றார். மஹிந்த சிந்தனையிலும் இது வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்பு, முதல் தடவையாகத் தற்பொழுது ஜனாதிபதியின் ஆளும் கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேடிக்கொள்ளப்பட்டது. ஆனால், இத்தகைய ஆட்சிப்பலத்தைப் பயன்படுத்தி, அரசமைப்பை மாற்றி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு உள்ள வாய்ப்பை ஜனாதிபதி ராஜபக்ஷ பயன்படுத்தும் நிலையில் இல்லை.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றிபெற்று, ஆட்சி அதிகாரங்களைத் தொடர்ந்து அனுபவிக்கும் இலக்குடனேயே அனைத்துக் காரியங்களும் ஒப்பேற்றப்பட்டு வருகின்றன.

1978 அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியே முப்படைகளின் தளபதி. அமைச்சரவையின் தலைவர்; பிரதமரை அவரே நியமிப்பார், அமைச்சர்களையும் நியமிக்கமுடியும். அமைச்சுப் பொறுப்புகளைத் தம்வசப்படுத்த இயலும், தேர்தல் முடிவடைந்து ஒரு வருடத்தின் பின்பு ஆட்சியைக் கலைக்க முடியும். ஜனாதிபதிக்கு எதிராக எவரும் வழக்குத் தொடர முடியாது. நாடாளுமன்றம் நிறைவேற்றும் ஒரு தீர்மானத்தை ரத்துச் செய்யும் அதிகாரம் அவருக்கு உண்டு. சட்டத்துறையின் ஒப்புதல் பெறாமல் எந்த ஒரு சட்டத்தையும் நடைமுறைப்படுத்தவும் இயலும். ஒரு பெண்ணை ஆணாகவும், ஓர் ஆணைப் பெண்ணாகவும் மாற்ற முடியாதொழிய, சகல துறைகளிலும் சர்வவல்லமை கொண்ட அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு உண்டு.

இலங்கையின் ஆட்சியில் சீரழிந்தமைக்கு, சீரழிந்து போவதற்கு, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கு மிதமிஞ்சிய அதிகா ரங்களே காரணமாக உள்ளன. நாட்டின் சகல துறைகளிலும் அரசியல் தலையீடு இருந்து வருகிறது. நீதித்துறைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. அரசியல் செல்வாக்கின் பின்னணியில் நாட்டில் கொலை, கொள்ளை, கடத்தல், போதைவஸ்து வியாபாரங்கள் தாராளமாக இடம்பெறுகின்றன. அரச துறைகளில் லஞ்சம், ஊழல் பெருமளவில் இடம்பெற்று வருகின்றன. மறுவளமாகச் சொல்வதானால் நாடு சர்வாதிகாரப் பாதைக்கு இட்டுச்செல்லப்படுகிறது.

நாட்டில் அரசியல் தலையீடு இல்லாத நல்லாட்சி நிலவுவதற்கு, மக்கள் நலன் நாடிய, எதேச்சாதிகாரத்தைப் பூண்டோடு அழிக்கும் ஓர் அரசமைப்புத் தேவை. பதவிக்கு வரும் எந்தவொரு ஜனாதிபதியும் அதிகாரத்தைக் கைவிட மறுப்பதும் எதேச்சாதிகாரப் போக்கில் செயற்படுவதும் நாட்டின் ஜனநாயகத்துக்கும், நீதிக்கும், சுதந்திரத்துக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியவை.

அதன் பயனாக அதிகாரத்தை கைப்பற்றுவோர் ஜனநாயக உரிமைகள் மீது காலால் ஏறி மிதிக்கும் நிலைக்குச் சாதகமாக திட்டமிட்ட முறையில் கருமங்கள் இலங்கையில் நடந்தேறி வருகின்றன.

இத்தகைய சூழலில் -

ஜனநாயக நாடென்ற வகையில், சிறுபான்மை இன மக்களுக்குரிய உரிமைகளில் கீறல்கள், கிழிசல்கள் இல்லாமல், அவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் குள்ளநரித் தனமான சட்ட முறைகளை வேரோடு அழிப்பதற்கு மனதும், துணிவும் உள்ள தெற்கின் தலைவர் ஒருவர் தலையெடுப்பார் என்று கற்பனையும் செய்துகொள்ள முடியவில்லை.

அவ்வாறிருக்க, ஜனநாயகத்தின் மீது ஆழமான கீறல்களை அடிக்கடி உண்டாக்கி நாற்றமெடுக்கும் நிலையை நீக்கும் பெருமனதை, பெரும்பான்மை இனத் தலைவர்களிடம் எதிர்பார்ப்பது எப்படி?

# தமிழர்களின் இன்றைய பயணம் மிகவும் முக்கியமான கட்டத்தில்

## கூட்டமைப்பு எம்.பி. சிறிதரன்

யாழ்ப்பாணம்,ஒக்.22

தமிழர்களின் இன்றைய பயணம் மிகவும் முக்கியமான கட்டத்தில் நிற்கின்றது. சர்வதேச மயப்பட்ட எமது இனத்தின் பிரச்சினை பிராந்திய ஒழுங்கிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை பெற்றுள்ளது. எமது மண்ணில் தாக்கத்தைச் செலுத்தக் கூடிய இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளிலும் மாற்றத்தின் அறிகுறிகள் தென்படுகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன்.

கைதடி கலைநகர் துர்க்கா சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழர் விடயத்தில் தமிழகத்திலும் இனிவரும் காலங்களில் மிக முக்கியமான முனைப்புகள் வெளிப்படும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

இவை எம்மோடு பிணைந்தவையாகவே இருப்பதால் எமது கொள்கை, இலட்சியம், சமூக ஒற்றுமை என்பனவும் எமது தீர்வு நோக்கிய பாதைக்கு முக்கியமாகத் தென்படுகின்றன. நாம் கடந்து வந்த பாதையை மறந்து விடாமல் இருப்பது இனிவரும் நாள்களுக்கு பலமான ஒன்று.- என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் பிரதேச மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கணினி ஒன்றை சனசமூக நிலையத்துக்கு கையளித்தார்.

சனசமூக நிலையத் தலைவர் மு.தங்கராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா, கூட்டமைப்பின் தென்மராட்சி அமைப்பாளர் க.அருந்தவபாலன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலர் செல்வி தி.தர்சினி, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.ஜெகதீசன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ச.தங்கராசா, சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் தர்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ம-288)

# வலி.வலய ஆசிரியர் இடமாற்றத்துக்கு ஜனநாயக தொழிலாளர் கட்சி கண்டனம்

வலி வடக்கு, ஒக் 22

வலிகாமம் வலய ஆசிரியர் இடமாற்றம் அறிவிக்கப்பட்டதையடுத்து இது குறித்து ஜனநாயகத் தொழிலாளர் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைவர் எஸ்.சத்தியேந்திரா இந்த விடயம் தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலிகாமம் கல்வி வலயத்தில், கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒரு பகுதி ஆசிரியர்கள் உள்ளக இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக திடீர் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதனை ஜனநாயக தொழிலாளர் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

டிசெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு மாணவர்கள் தயார்ப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், திடீரென விடுக்கப்படும் இவ்வாறான அறிவித்தல்களால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

ஒரே பாடசாலையில் தொடர்ந்து ஏழு வருடங்களுக்கும் மேல் பணியாற்றிய ஆசிரியர்கள் இடம்மாற்றப்படவுள்ளனர். குறிப்பாக, வலிகாமம் கல்வி வலயத்தில், அவ்வாறு உள்ளக இடமாற்றங்கள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தில் அவ்வாறு சுமார் 108 ஆசிரியர்கள் இடமாற்றம் பெறவுள்ளனர். வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.இராஜேந்திரன் தலைமையில் வலிகாமம் கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற அதிபர்களுடனான கலந்துரையாடலில் இது பற்றிக் கூறப்பட்டது.

இதன் போதே இடமாற்றம் பெறவுள்ள ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலும் அறிவிக்கப்பட்டது. போதிய கால அவகாசமின்றி இவ்வாறு இடமாற்ற உத்தரவு விடுக்கப்பட்டிருப்பது குறித்து பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை டிசெம்பரில் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாறான திடீர் இடமாற்றங்களால், கல்வித் தொடர்ச்சித் தன்மை பாதிக்கப்பட்டு விடும் என்றும் ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது பற்றி பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஜனநாயக தொழிலாளர் கட்சியின் தலைவர் சத்தியேந்திராவிடமும் முறையிட்டுள்ளனர்- என்றுள்ளது.

இந்த திடீர் இடமாற்றத்தையிட்டு அதிருப்தி வெளியிட்டுள்ள ஜனநாயக தொழிலாளர் கட்சியின் தலைவர் எஸ் சத்தியேந்திரா, இது குறித்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினதும் கல்வியமைச்சர் பந்துல குணவர்தனவினதும் கவனத்துக்குக் கொண்டு வந்து பாதிக்கப்பட்டவர்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளார்.

(ம-86)

# பிரதேச செயலர் பிரிவுகளில் அரைகுறையில் வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஜேஎவ்பிஆர் திட்டத்தின் கீழ் 8 பிரதேச செயலர் பிரிவுகளில் நடைபெறும் 20 வேலைத் திட்டத்தில் 50 வீதமானவை கூட பூர்த்தியாகவில்லை.

வடக்கின் முரண்பாட்டுக்குப் பின்னரான அவசர வாழ்வாதார வேலைத் திட்டத்தின் கீழ் 8 பிரதேச செயலர் பிரிவுகளில் காசுக்கான வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

காசுக்கான வேலைத் திட்டத்தின் கீழ் மொத்த மனித நாள்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, கரவெட்டி, புத்தூர், நல்லூர், உள்ளூராட்சி மன்றங்களின் கீழான வேலைகளில் பெரும்பாலான வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று பிரதேச சபைத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் யாழ். அரச அதிபர் சு. அருமைநாயகம் குறித்த வேலைகளின் துரித முன்னேற்றம் குறித்தும், இதுவரை ஆரம்பித்த, ஆரம்பிக்காத வேலைகளின் விவரங்களையும் வழங்குமாறு கோரியுள்ளார்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் குறித்த வேலைகள் தொடர்பாக மக்களின் தெரிவு குறித்தும் அபிவிருத்தி குறித்தும் அரச அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த 20 வேலைத்திட்டங்களும் டிசெம்பர் 30 ஆம் திகதிக்குள் முடிவுறுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-500)

# குறைந்த வருவாய் பெறுவோருக்கு சமுர்த்தி நிவாரணத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

குறைந்த வருமானம் பெறுபவர்கள் சமுர்த்தி நிவாரணம் பெறக்கூடிய வகையில் சமுர்த்தி செயற்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வு அதிகாரசபை மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.


இந்தத் திட்டத்தின் கீழ் வருவாய் குறைந்த மக்கள் உரிய வகையில் தெரிவு செய்யப்படுவார்களேயானால் நன்மையடைவர் என்றும் கூறப்பட்டது.


(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடுகளில் விடப்பட்ட யானைகளால் நெடுங்கேணிப் பகுதியிலும் தொல்லைகள்

## வீடுகள், கடைகள் நாசம்; பயிர்களுக்கும் அழிவுகள்; மக்கள் பீதி





மாங்குளம்,ஒக்.22

தென்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட வயது முதிர்ந்த யானைகள் நெடுங்கேணியின் சில பகுதிகளில் விடப்பட்டுள்ளமையால் அவற்றினால் தொல்லைகள் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக் காலமாக நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள சில பகுதிகளில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால், மக்கள் அச்சத்துடன் பொழுதைக் கழிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனகராயன்குளம், கரப்புக்குத்தி, நெடுங்கேணி ஆகிய இடங்களிலேயே யானைகள் அதிகளவில் நடமாடி வருகின்றன.

வயது முதிர்ந்த யானைகள் நெடுங்கேணி காட்டுப் பகுதிக்குள் கொண்டு வந்து விடப்படுவதால் இந்த அவல நிலை தோன்றியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த யானைகள் அந்தப் பகுதியிலுள்ள விவசாயப் பொருள்களைச் சேதமாக்கி வருவதுடன் மக்களின் நடமாட்டத்துக்கும் இடையூறு விளைவித்து வருகின்றன.

தற்போது இவற்றினால் உயிராபத்து எதுவும் ஏற்படாத போதிலும் எதிர்காலத்தில் ஏற்படலாமென்ற அச்சம் மக்களிடையே தோன்றியுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.

ஏற்கனவே முத்துஐயன்கட்டுப் பகுதியிலும் தென்பகுதியிலிருந்து கொண்டு வந்து விடப்பட்ட யானைகளால் மக்கள் பெரும் தொல்லைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் செய்திகள் வெளி வந்துள்ளன.

இரவு நேரத்தில் ஊருக்குள் வருகின்ற இந்த யானைகள் இதுவரை 20 வீடுகளை உடைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த நெல் மற்றும் உணவுப் பொருள்களைத் தின்று தீர்த்துள்ளதாக ஊர் மக்கள் அதிகாரிகளிடமும், அங்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கத்திடமும் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒரு மாதகாலமாக தாங்கள் இரவில் நித்திரையில்லாமல் யானைகளைத் துரத்துவதிலேயே ஈடுபட்டிருப்பதாகவும், இந்த யானைகள் சத்தமின்றி வந்து வீடுகளை உடைப்பதனால் வீடுகளில் தனியாகப் படுத்து நித்திரை கொள்வதற்கு பெரும் பயமாக இருப்பதாகவும் இதனால் நிம்மதியற்ற நிலையில் தாங்கள் இருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வீடுகள் கடைகளை உடைப்பதுடன் தென்னை, வாழை, மரவள்ளி போன்ற பயிர்வகைகளையும் யானைகள் அழித்து அட்டகாசம் செய்கின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முத்துஐயன்கட்டுப் பகுதியில் யானைகள் கொண்டு வந்து விடப்பட்டுள்ளதை வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த யானைகளில் ஒன்று தென்பகுதியில் மனிதர்களைத் தாக்கிக் கொன்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது குறித்த பகுதி மக்கள் அச்சத்தின் காரணமாக இரவில் மாற்று இடங்களில் தங்குவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கத்திடம் முறையிட்டுள்ளனர். (க-422-12)

## வாய்க்காலின் உட்புறத்தில் வசிக்கும் கற்சிலைமடு மக்கள் அவலத்தில்

### மாரியில் கடந்த வருடமும் இதே நிலை

முல்லைத்தீவு,ஒக்.22

முத்துஐயன்கட்டு பிரதான வாய்க்காலின் உட்புறத்தில் வசிக்கும் கற்சிலைமடுவைச் சேர்ந்த குடும்பங்களில் சில மழை காலத்தில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் வசிக்கும் பகுதியிலிருந்து மழை வெள்ளம் உரிய வகையில் வெளியேறாததால் இவர்கள் ஒவ்வொரு வருடமும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த வருடமும் இங்குள்ள வீடுகள் சில வெள்ளத்தில் மூழ்கியதுடன் அங்கு வசித்த மக்களும் பெரும் அவலங்களை எதிர்கொண்டனர்.

ஆனால் ஆண்டு ஒன்று கடந்த நிலையிலும் இதற்கு மாற்றீடான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமையால் இங்குள்ள மக்கள் அச்சத்துடனேயே நாளைக் கழித்து வருகின்றனர்.

இந்த வருடம் நிலவிய கடும் வறட்சியைத் தொடர்ந்து பரவலாக நல்ல மழை பெய்து வருகின்றது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் இது மகிழ்ச்சியை ஏற்படுத்திய போதிலும் தற்காலிக வீடுகளிலும், இதுபோன்ற இடங்களிலும் வசிக்கும் மக்களிடையேயும் கவலையை ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. (க-500)

## மன்னாரில் வெள்ள நீர் தேங்குவதால் டெங்கு தீவிரமாகும் அபாயகர நிலை



மன்னார்,ஒக்.22

மன்னாரில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக பெய்து வரும் கடும் மழையின் காரணமாக மன்னாரின் பல இடங்களிலும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதோடு மக்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 மாதங்களின் பின் தற்போது மன்னாரில் கடும் மழை பெய்து வருகின்றது. மன்னாரில் உள்ள அனைத்து வீதிகளும் உயர்த்தப்பட்டு கொங்கிரீட் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளதுடன். கழிவு நீர் வாய்க்கால் எவையும் புதிதாக அமைக்கப்படவில்லை. இந்த நிலையில் தற்போது பெய்து வரும் கடும் மழையின் காரணமாக மழை நீரை வீடுகளை விட்டு வெளியேற்றுவதில் மக்கள் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

வீட்டு முற்றத்தை விட வீதிகள் உயரமான நிலையில் காணப்படுகின்றன. இதனால் மக்கள் தற்போது மழை நீரை வெளியேற்றுவதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது மன்னாரிலும் டெங்குக்காய்ச்சல் அபாயம் ஏற்பட்டுள்ளமையினால் மழை நீரினால் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழை நீர் வீதிகளிலும் தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் டெங்கு ஒழிப்பு வாரம் மன்னாரிலும் பிரகடனப்படுத்தப்பட்டு வீடுகள்,அரச அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது இடங்கள் ஆகியவற்றில் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த சிரமதானப் பணிகளில் மன்னார் பொலிஸார், மன்னார் நகர சபை, பிரதேச சபைகள், தன்னார்வத் தொண்டு அமைப்புக்கள் இணைந்து டெங்கு ஒழிப்புச் செயல்திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-12)



டெங்கு வாரத்தை முன்னிட்டு சிரமதானப் பணிகளில் புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர மாணவர்கள், அதிபர் மற்றும் விளையாட்டுத்துறை ஆசிரியர் ஆகியோர். (க-555)

## தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நூலகங்களில் கொடிவாரம்

கிளிநொச்சி,ஒக்.22

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்திலுள்ள நூலகங்களில் கொடிவாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் பல்வேறு பகுதிகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்திலும் இந்த நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

கரைச்சிப் பிரதேச சபையின் கரைச்சி பொது நூலகம், முரசுமோட்டை பொது நூலகம், வட்டக்கச்சி பொது நூலகம், ஸ்கந்தபுரம் பொது நூலகம் ஆகியவற்றில் வாசிப்பு மாத கொடி வார நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் மேற்படி பிரதேச நூலகங்களில் வாசிப்பு மாதத்தையொட்டிய வகையில் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நேரம் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் முன்பள்ளிச் சிறுவர்களுக்கான கதைகள் கூறப்பட்டு வருகின்றன.

இதைவிட வாசகர்களிடையே கலை இலக்கிய போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (க-6)

# மன்னார் பஸ் தரிப்பிடங்களில் ஓட்டோக்காரர் சண்டித்தனம்

## பயணிகள் திண்டாட்டம்; கேட்பார் எவருமில்லை

மன்னார்,ஒக்.22

மன்னார் அரச, தனியார் பஸ் தரிப்பிடங்களில் தற்போது மீண்டும் ஓட்டோக்களின் அத்துமீறிய செயற்பாடுகள் அதிகரித்துள்ளமையால் குறித்த தரிப்பிடப் பகுதியில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் மக்களும், பஸ்களில் இருந்து இறங்கும் பயணிகளும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட நாள்களாகவே குறித்த செயற்பாடு இடம்பெற்று வந்த நிலையில் பொலிஸாரினதும், அதிகாரிகளினதும் துரித செயற்பாடுகளின் மூலமாக ஓட்டோக்கள் நிறுத்தப்பட்டதோடு உள்ளே செல்லக்கூடாது என மன்னார் நகர சபையால் அறிவித்தல் விடுக்கப்பட்டதோடு அறிவித்தல் பலகைகளும் போடப்பட்டிருந்தன.

இதனால் இந்தப் பிரச்சினை இல்லாதிருந்தது. இந்த நிலையில் மீண்டும் குறித்த சில ஓட்டோ சாரதிகள் அவ்விடத்தில் சண்டித்தனங்களில் ஈடுபட்டு வருவதோடு பஸ் தரிப்பிடத்தினுள் சென்று மக்களைப் பலவந்தப்படுத்தி ஏற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஓட்டோ சாரதிகள் இவ்வாறு போட்டி போட்டுக் கொண்டு செயற்படுவதினால் பயணிகள் பல்வேறு இடைஞ்சல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகக் கூறப்பட்டது.

இது மட்டுமின்றி மன்னார் தனியார் போக்குவரத்து தரிப்பிடத்திற்கு முன்பாகவே ஓட்டோ தரிப்பிடம் உள்ளது.

எனினும் குறித்த ஓட்டோ சாரதிகளில் சிலர் நீண்ட நேரம் தமது ஓட்டோக்களை வீதிக்கு நடுவே நிறுத்தி வைக்கின்றனர்.

இதனால் வாகன நெரிசலும் அப்பகுதியில் அடிக்கடி ஏற்படுகின்றது.

எனவே மன்னார் பொலிஸார்,மன்னார் நகர சபை, அரச, தனியார் போக்குவரத்துச் சங்கம் ஆகியவை இதில் உடனடியாக தலையிட்டு பயணிகளின் பிரச்சினைக்கு உரிய தீர்வை பெற்றுத்தரவேண்டுமென மன்னார் மக்களும்,சமூக ஆர்வலர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஆலயங்கள் நீதிமன்றம் செல்வது தவிர்க்கப்பட வேண்டும்

## யாழ்.இந்து மாமன்ற உபதலைவர் ஆறு.திருமுருகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.22

நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் இந்து மாமன்றம் உருவாக்கியுள்ள சமய நடுத் தீர்ப்பு மன்றங்கள் ஊடாக ஆலய பிரச்சினைகளை எடுத்துரைத்து இரு தரப்புகளும் சமாதானமாக ஆலயங்களை வழிநடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்.இந்து மாமன்ற உபதலைவர் ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

இந்து ஆலயங்களின் முகாமைத்துவம் மற்றும் பிணக்குகள், தீர்ப்புகள் தொடர்பான அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.இந்து மாமன்றத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் தலைமையுரையாற்றிய ஆறு.திருமுருகன் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

அகில இலங்கை இந்து மாமன்றம் சமுதாயப் பணிகளில் ஒன்றாக ஆலயங்களின் நிர்வாகம் தொடர்பான சட்ட திட்டங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்துக் கோயில்களின் பெயரில் நீதிமன்றங்களில் கூடுதலான வழக்குகள் நடைபெறுவது கவலைக்குரியது. கோயில்களை நிர்வகிப்பவர்களுக்குச் சட்டம் தொடர்பான தெளிவின்மையே இதற்குக் காரணம். இலங்கையில் உள்ள கோயில்கள் தொடர்பான நிர்வாகக் கட்டமைப்பு பற்றி அறிவுபூர்வமாக தெரிந்து கொள்ள இந்தக் கருத்தரங்கு வழியமைக்கும்.

சைவ சமயத்தவர்கள் சமூகத்துக்கும் பயன்தரக் கூடிய காரியங்களைச் செய்வது அவசியம்.

நீதிமன்றங்களுக்கு வீணாக பணத்தைச் செலவு செய்து பிரச்சினைகளை வளர்த்துக் கொள்ளாது நடுத் தீர்ப்பு மன்றங்களைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

சமீபத்தில் மதம் மாற்றும் முயற்சிகளும் இந்து மக்களுக்குச் சவாலாக உள்ளன.

வேறு மதத்தலங்கள் எழுவதும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. எனவே, ஆலய நிர்வாகங்கள் நீதிமன்றங்களை நாடுவதைத் தவிர்த்துக் கொள்வது அவசியம் - என்று கூறினார். (ம-7)



யாழ்ப்பாணம் இந்து மாமன்ற அலுவலகத்தில் கடந்த ஒரு வருடமாக பயிற்சி பெற்ற ஆறு மாணவர்கள் சனிக்கிழமை சைவ வித்தகர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நல்லை ஆதீன முதல்வர் மற்றும் இந்து மாமன்றத் தலைவர்களுடன் பட்டம் பெற்ற மாணவர்கள்.

## கடந்த வாரத்தில் மட்டும் 146 குற்றவாளிகள் கைது

யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரம் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருந்த 146 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் ளிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

வாராந்தம் இடம்பெறும் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் தலைமறைவாகியிருந்த 42 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதனைவிட போதையில் வாகனம் செலுத்திய 15 பேரும் போதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த 12 பேரும் சட்டவிரோதமாகக் கால்நடைகளை ஏற்றிச் சென்ற 6 பேரும் பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் வகையில் சூழலை வைத்திருந்த 37 பேரும் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய 3 பேரும் சட்டவிரோதமாகச் சாராயம் விற்ற 14 பேரும் பொது இடங்களில் மதுபானம் அருந்திய 14 பேரும் லேகியம் விற்ற ஒருவரும் மானிப்பாயில் மோட்டர் திருடிய குற்றத்தில் 2 பேரும் கைது செய்யப்பட்டனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-86)

## உடைந்த நிலையில் வாய்க்கால் வெள்ளம் தடைப்படும் நிலையில்

கொழும்புத்துறை வீதியில் பாண்டியன் தாழ்வு அன்னம்மாள் ஆலயத்துக்கும் விதானையார் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள வெள்ள வாய்க்காலில் உள்ள இடிபாட்டுத் தடைகளால் மழைவெள்ளம் வடிந்தோடுவது தடைப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நீண்டகாலமாக இந்த வெள்ள வாய்க்கால் சுத்தம் செய்யப்படாது மண் நிறைந்து திட்டுக்கள் தோன்றியுள்ளன.

பல இடங்களில் வீதியோரமாக உள்ள கால்வாய்ச் சுவர் இடிந்துள்ளமையால் வெளிமண் மற்றும் கற்கள் வாய்க்காலுக்குள் சென்று தடைகளை ஏற்படுத்துகின்றன.

கால்வாயின் பல இடங்களில் மழை நீருடன் வீடுகளில் இருந்து வரும் கழிவு நீரும் தேங்கி நின்று நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான சூழல் காணப்படுகின்றது.

விதானையார் வீதியில் புதிதாக பாலம் அமைக்கப்பட்டுள்ள போதிலும் இந்தக் கால்வாய் சீர்செய்யப்படாமையால் குறிப்பிட்ட பகுதி வெள்ளம் குளத்துக்குச் செல்வது தடைப்பட்டுள்ளது.

விரைந்து இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ம-135)

## நெடுந்தீவு வீதியால் பயணிக்க முடியாத நிலை


யாழ்ப்பாணம்,ஒக்.22

நெடுந்தீவு பிரதான வீதியின் மோசமான நிலையைக் கருத்தில்கொண்டு உடனடியாக அதனை திருத்தியமைக்குமாறு நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியஸ் றெக்ஷியன் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குத் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் பெய்து வரும் மழை காரணமாக வீதிகளால் பயணிக்க முடியாத நிலை உள்ளது. வீதி புனரமைப்பின் போது இரு ஓரங்களிலும் களிமண் இட்டு பரவப்பட்டிருந்தது.

மழை பெய்யத் தொடங்கியதும் அந்த மண் கரைந்து சேறும் சகதியுமாக காணப்படுகின்றது. இதனால் பயணிகள் சேற்றில் விழுந்தெழும்பி செல்கின்றனர்.

இதனால் பாடசாலை மாணவர்களின் உபகரணங்கள், உடைகள் என்பன சேறு படிந்து காணப்படுகின்றன. எனவே உடன் வீதியை திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்று கேட்கப்பட்டுள்ளது. (ம-7)



யாழ். பொலிஸ் நிலையத்துக்கு கோட்டைப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் கட்டடப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பகுதியில் முன்னர் இருந்த பொலிஸ் நிலையக் கட்டடம் போரால் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

## ஒளிராத நிலையில் வீதி விளக்குகள்

கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் உள்ள வீதி விளக்குகள் ஒளிராமையால் அந்தப் பகுதி மக்கள் இரவு வேளைகளில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதி வீதிகள் சீரின்மையால் பல இடங்களில் தேங்கி நிற்கும் வெள்ளத்தில் இரவில் பயணிப்போர் விழுந்து எழும்புவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

சென்.ஜோசப் வீதி மற்றும் உள்ளக வீதிகளில் இரவில் இருள் சூழ்ந்துள்ளமை திருட்டுக்கள் இடம்பெற வாய்ப்பாக உள்ளதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ம-135)

## 107 வயது மூதாட்டி கைதடியில் கௌரவிப்பு



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி குமரநகர் மாதர் சங்கம் முதியோர் தின விழாவை அண்மையில் நடத்தியது.

கைதடி குமரநகர் மாதர் சங்கத் தலைவி திருமதி விக்னேஸ்வரி ஈஸ்வரன் தலைமையில் குமரநகர் சனசமூக நிலைய மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கைதடியில் மிகவும் வயது முதிர்ந்த 107 வயதைக் கொண்ட திருமதி முருகன் பொன்னி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் அவருக்கு விசேட பரிசுகளும் விழாவில் கலந்துகொண்டோரால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பெருந்திரளான மாதர்கள் கலந்துகொண்டனர். (ம-288)

## அல்லைப்பிட்டியில் ஆயுள்வேத மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், ஒக்.22

வேலணைப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அல்லைப்பிட்டியில் ஆயுள்வேத மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

வேலணைப் பிரதேச சபைத் தலைவர் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை இலவச ஆயுள்வேத மருத்துவ சிகிச்சை மருத்துவர் கே.நடேசராசன் தலைமையில் இடம்பெறும்.

அன்றைய தினம் அல்லைப்பிட்டி மக்கள் இந்த மருத்துவ சிகிச்சை முகாமில் பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-50)

## வீதியோர சகதியால் சரிந்த வாகனம்




வலி.வடக்கு, ஒக்.22

யாழ்.காங்கேசன்துறை வீதியில் எதிரே வந்த வாகனத்துக்கு வழிவிட்ட சிறியரக வாகனம் ஒன்று வீதியோரத்தில் புதையுண்ட சம்பவம் சனிக்கிழமை கொக்குவில் பகுதியில் இடம்பெற்றது.

யாழ்.காங்கேசன்துறை வீதிக்கு 'காப்பெற்' போடுவதற்கு வீதியில் இரு பகுதியும் கிளறப்பட்டு ஒருவித கிரவல் மண் போடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தற்போது பெய்து வரும் மழையை அடுத்து இந்த மண் சேறும் சகதியுமாக மாறியுள்ளது.

இந்த நிலையில் குறித்த வாகனம் புதைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கைதடி நூலக செயற்பாடு விஸ்தரிப்பு

கைதடி, ஒக்.22

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் கைதடி பொது நூலகத்தால் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் ஆலோசனைச் சுற்றறிக்கைக்கு அமைய தேசிய வாசிப்பு மாதச் செயற் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதாக கைதடி பொது நூலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற் திட்டங்களில் பனர் மேற்கோள்கள் மற்றும் போஸ்டர்கள் காட்சிப் படுத்தல், கட்டுரை, சித்திரம், பேச்சு, பாட்டு ஆகிய விசேட போட்டிகளை நடத்துதல், சஞ்சிகை ஆக்கம் வெளியிடுதல், நூலகத்தை புதுப்பித்தமைத்தல், கணினி மற்றும் இணைய வசதிகளை ஏற்படுத்துதல், வாசகர்களின் தொகை அதிகரித்தலும் ஊக்குவித்தலும், நூலக வளங்களைப் பேணுவதுடன் பாதுகாத்தல், கதை சொல்லும் நேரம் மற்றும் இலக்கியம் சார்ந்த படக் காட்சிகள் நடத்துதல், நடமாடும் நூலக சேவை சனசமூக நிலையங்களூடாக முன்பள்ளிகளை நடத்துதல், நடமாடும் நூலக சேவையை கைதடி முதியோர் இல்லத்தில் நடத்துதல், திறனை மதிப்பிட்டு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் விழாவை நடத்துதல் ஆகியனவற்றைத் தாம் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக கூறப்பட்டது.

இதேவேளை, இத்தகைய செயற்பாடுகளை, அப்பிரதேச மாணவர்களும், நூலக வாசகர்களும் பொது மக்களும் பெரிதும் வரவேற்கின்றனர். (ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்களாதேஷ் விடுதலைப் போரில் பங்காற்றிய இந்தியர்கள் கௌரவிப்பு



பங்களாதேஷ் விடுதலைப் போரின் போது பெரும் பாங்காற்றிய இந்தியர்கள் அந்தநாட்டு அரசால் கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்கு பாகிஸ்தான் பெயரில் செயற்பட்ட பங்களாதேஷில் 1971 ஆம் ஆண்டில் விடுதலைப் போர் நடைபெற்றது. இந்தப் போரின் போது குறிப்பிடத்தக்க உதவிகளைப் புரிந்து பங்காற்றிய வெளிநாட்டவர்களை, பங்களாதேஷ் அரசு கௌரவித்து வருகிறது. இந்தநிலையில் நேற்று முன்தினம் டாக்காவில் நடைபெற்ற 3 ஆவது விருது வழங்கும் நிகழ்வில் 61 வெளிநாட்டவர்களுக்கு மேற்படி கௌரவ விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டது.

இதில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே. குஜ்ரால், மறைந்த அமைச்சர் ஜெகஜீவன் ராம், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி அசோக் டரா உட்பட 51 இந்தியர்கள் மேற்படி விருது மூலம் கௌரவிக்கப்பட்டனர்.(வ)

## இந்தியாவில் வறுமையில் வாடும் எட்டு மில்லியன் ஏழை மக்கள்

### ஐ.நா வின் அறிக்கையில் தகவல்

இந்தியாவில் 8 மில்லியன் பேர் வறுமையில் வாடுகின்றனர் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளில் உணவுப்பொருள்களின் விலையேற்றம், பணவீக்கம் காரணமாக 4 மில்லியன் மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளனர்.

குறிப்பாக உணவுப் பொருள்களின் கடுமையான விலையேற்றம் காரணமாக 8 மில்லியன் இந்தியர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

விவசாய உற்பத்தி பாதிப்பு, உரங்களின் விலை ஏற்றம், விவசாய நிலங்கள் போதியளவில் இல்லாமை, வறட்சி, எண்ணெய் விலை ஏற்றம் என்பனவும் வறுமை நிலைக்கு முக்கிய காரணம் என ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் உணவு மற்றும் விவசாயக் கழகம் தெரிவித்துள்ள தகவலின் படி ஒரு குடும்பத்தின் வருமானத்தில் 65 சதவீதத்துக்கும் அதிகமான பணம் உணவுக்காகச் செலவிடப்படுகிறது.

பங்களாதேஷ், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் உணவுப் பொருள்களின் விலை குறைவாகவே உள்ளன. அதனால் அவர்கள் உணவுக்காக செலவழிக்கும் தொகை குறைவானது -என்றுள்ளது. (வ)

## 'கிங் பிஷர்' விமான நிறுவனத்தின் போக்குவரத்து உரிமம் ரத்து

நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்து வந்த கிங் பிஷர் விமான நிறுவனத்தின் போக்குவரத்து உரிமையை விமானப் போக்குவரத்துத்துறை ரத்து செய்துள்ளது.

நலிந்த நிலையில் உள்ள கிங் பிஷர் விமான நிறுவனம் போதுமான நிதி நிலையை நிரூபிக்கத் தவறியதால் விமானப் போக்குவரத்துத் துறை மேற்படி நிறுவனத்தின் உரிமத்தை நேற்று ரத்து செய்துள்ளது.

தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு, முடிவுகள் அறிவிக்க, அந்த நிறுவனத்துக்கு அளித்த கெடு நேற்றுடன் முடிவடைந்திருந்ததுடன், நிறுவனத்தின் நிதிநிலை பற்றித் இதுவரையிலும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதனையடுத்து, பல்வேறு அடிப்படைகளை ஆலோசித்த பின்னரே கிங் பிஷர் நிறுவனத்தின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக கிங்பிஷர் ஊழியர்களுக்குக் கொடுப்பனவு சரியாக வழங்கப்படவில்லை என்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதனால் மேற்படி விமான சேவைகள் முடங்கியிருந்தன. (வ)

# சீனாவுடன் இனி போருக்கு இடமில்லை

## பேச்சு மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வு உறுதியளிக்கிறார் பாதுகாப்பு அமைச்சர்

டில்லி, ஒக்.22

''சீனாவுடன் 50 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது போன்ற போர் மீண்டும் ஏற்படாது. இரு நாடுகளுக்கும் இடையேயான பிரச்சினைகள் பேச்சு மூலமே தீர்க்கப்படும்'' என்று பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி தெரிவித்தார்.

அயல் நாடான சீனாவுடன், 1962 ஆம் ஆண்டு நடந்த போரில், இந்தியா தோல்வி அடைந்தது. அந்தப் போரில் இந்தியா அதிக இடங்களை சீனாவிடம் பறிகொடுத்தது.

சீனப் போரின், 50 ஆவது நினைவு தினம், நேற்று முன்தினம் நினைவுகூரப்பட்டது. தலைநகர் டில்லியில் நடை பெற்ற நிகழ்ச்சியில், போரில் உயிர்நீத்த வீரர்கள் மற்றும் உயிருடன் உள்ள வீரர்கள், முதல் முறையாகக் கௌரவிக்கப்பட்டனர்.

முன்னதாக, போர் வீரர் நினைவிடமான, 'அமர் ஜவான் ஜோதி'யில், மலர் வளையம் வைத்து வணங்கிய அமைச்சர் அந்தோனி, பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தற்போது நிலவும் சூழல் போல இந்தியா, 50 ஆண்டுகளுக்கு முன் இருந்திருக்கவில்லை. தொடர்ந்து வந்த பல அரசுகள் இராணுவத்தை பலம் வாய்ந்ததாக ஆக்கியதால், எந்த அச்சுறுத்தலையும் சமாளிக்கும் வகையில், இராணுவம் தற்போது விளங்குகிறது.

சீனா - இந்தியா இடையே, மீண்டும் ஒரு போர் ஏற்படாது. இரு நாடுகளுக்கும் இடையேயான பிரச்சினைகள், பேச்சு மூலம் தீர்க்கப்படும். எந்தவித மிரட்டலையும் சமாளித்து எல்லையை



எமது இராணுவத்தினர் பாதுகாப்பர். அதே நேரத்தில், இராணுவமும் பலம் வாய்ந்ததாக மாற்றப் படும். இரு நாடுகளுக்கும் இடையே உள்ள பிரச்சினைகள், பேச்சு மூலம் தீர்க்கப்படும்-என்றார். (வ)

## எல்லைக்குள் அத்துமீறி பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கிச் சூடு

ஜம்மு- காஷ்மீரில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இராணுவ முகாம்கள் மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள எல்லைப் பகுதியில், இந்திய இராணுவ முகாம்கள் உள்ளன. அந்த முகாம்கள் மீது கடந்த வெள்ளிக்கிழமை இரவு பாகிஸ்தான் இராணுவத்தினர் திடீரென சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர்.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இந்தத் தாக்குதல் நீடித்தது.

இந்திய இராணுவத்தினர் பதிலடியாக பாகிஸ்தான் பகுதியை நோக்கி துப்பாக்கியால் சுட்டதையடுத்து பாகிஸ்தான் வீரர்கள் தாக்கு தலை நிறுத்தியதாகக் கூறப் படுகிறது.

இந்த மாதத்தில் மட்டும் ஏழு முறை, போர் நிறுத்த ஒப்பந்த விதிமுறைகளை மீறி இந்தியப் பகுதிகள் மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியுள்ளதாக இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## அசுத்தமான நீரை நன்னீராக்கும் கருவியை உருவாக்கினார் மாணவி

### அவருக்கு 'இளம் விஞ்ஞானி' பட்டம்



இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க மாணவி ஒருவர் அசுத்தமான நீரை நன்னீராக்கும் கருவியை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் மாஸா சு-சீற்ஸ் மாநி லத்தின் தென் பகுதியிலுள்ள உயர் கல்லூரியில் கல்வி கற்று வரும் தீபிகா குருப் என்ற மாணவியே குறித்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். அமெரிக்காவின் டிஸ்கவரி எடியுகேசன் 3எம் யங் சயன்ஸ்ரிஸ் சலன்ஸ் என்ற அமைப்பு இளம் விஞ்ஞானிகளுக்கான பரீட்சை ஒன்றை நடத்தியது.

இதில், அசுத்தமான தண் ணீரை சூரிய சக்தி கொண்டு சுத்தப்படுத்தி தூய குடி தண்ணீராக்க உதவும் சிறந்த ஒரு கருவியை மாணவர்கள் உருவாக்க வேண்டும் என் பதே போட்டியின் விதிமுறை. இதில் தீபிகா குருப் உரு வாக்கிய கருவியே சிறந்த தாகத் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு அமெரிக்காவின் முதல் தரஇளம் விஞ் ஞானி என்ற பட்டத்துடன் 25 ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்பட்டுள்ளது. உலகம் முழுதும் ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் சுத்தமான நீரைப் பயன்படுத்த இயலாதவர் களாக உள்ளனர். இதனால் தீபிகாவைத் தெரிவு செய்த நடுவர்கள், அவர் கண்டுபிடித்த விலை குறைந்த கருவி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தண்ணீரைச் சுத்தப் படுத்த மிகவும் உதவிகரமாக இருக் கும் என்று தெரிவித்தனர்.

## ஊழலுக்கு எதிரான புதிய குழு ஆரம்பிக்கிறார் அன்னா ஹஸாரே

ஊழலுக்கு எதிரான புதிய குழுவை சமூக சேவகர் அன்னா ஹஸாரே ஆரம்பிக்க உள்ளதாக முன்னாள் பொலிஸ் அதிகாரி கிரண் பேடி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய குழுவில், தனி மனித நேர்மையின் அடிப்படையில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய அதிகாரத்துக்கு ஆசைப்படாதவர்கள் சேர்க்கப்படுவர். ஓய்வுபெற்ற அரச அதிகாரிகள், தனியார் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், கலைஞர்கள் ஆகியோர் அடங்கிய குழுவை ஹஸாரே தெரிவு செய்ய உள்ளார். இதற்கான சந்திப்புக் கூட்டம் எதிர்வரும் நவம்பர் 24, 25 ஆகிய திகதிகளில் நடைபெற உள்ளது.



முன்னாள் இராணுவத் தலைமைத் தளபதி வி.கே. சிங், உத்தரப் பிரதேச முன்னாள் அதிகாரி பிரகாஷ் சிங் மற்றும் புரிலால் ஆகி யோரின் பெயர்களைக் குழுவில் இணைக்க வாய்ப்புள்ளது. இதுகுறித்து அவர்களிடம் ஹஸாரே பேசவுள்ளார். அவர்கள் சம்மதிக்கும் பட்சத்தில் எதிர்வரும் நவம்பர் 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறும் சந்திப்புக் கூட்டத்தில் அவர்கள் கலந்து கொள்வர்-என்றார்.

இதேவேளை அன்னா ஹஸாரே, அரவிந்த் கேஜரிவால், பிரசாந்த் பூஷன், சாந்தி பூஷன், கிரண் பேடி, சந்தோஷ் ஹெக்டே ஆகியோர் அடங்கிய ஊழலுக்கு எதிரான இயக்கத்தை சில மாதங்களுக்கு முன்பு கலைத்து விட்டதாக ஹஸாரே தெரிவித்தது குறிப்பிடத்தக்கது

## நவராத்திரி பூசையைக் கொண்டாட சொந்த ஊர் செல்லும் பிரணாப்



நவராத்திரி பூசையை குடும்பத்துடன் கொண்டாட ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி சொந்த ஊருக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர், தனது குடும்பத்துடன் பிரணாப் கொண்டாடும் முதலாவது சமய விழா இதுவாக இருக் கும். மேற்கு வங்க மாநிலத் தில் உள்ள கிர்னாகர் பரோடா என்பது பிராணாப்பின் சொந்தக் கிராமமாகும். இதற்காக இந்தியன் ஏர்போர்ஸ் ஹெலிகொப்டர் மூலம் நேற்று முன்தினம் பிற்பகல் சென்றார்.

நவராத்திரி பூசையை 20-23 ஆகிய திகதிகள் 'வரை தன் குடும்பத்தினருடன் இருந்து கொண்டாடுகின்றார் பிரணாப் முகர்ஜி.

நவராத்திரி பூசையை முடித்த பின்னரே காங்கிரஸ் தலைமையிலான மத்திய அமைச்சரவையில் மாற்றம் குறித்து பிரணாப் முடிவெடுப்பார் என்று தகவல் கள் தெரிவிக்கின்றன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசாவுக்குச் சென்ற படகை தடுத்து நிறுத்தியது இஸ்ரேல்




காசாவுக்குச் சென்று கொண்டிருந்த படகை இஸ்ரேல் படையினர் தடுத்து நிறுத்தி உள்ளனர் என்று அந்த நாட்டின் பாதுகாப்புப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காசா நிலப்பரப்புக்குள் படகுகள் நுழையாதபடி இஸ்ரேல் இராணுவம் தடைகளை போட்டுவைத்துள்ளது. மேலும் யாரும் உள்ளே வரக்கூடாது போன்ற பல்வேறு தடைகளையும் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் தடைகளை மீறி காசாப் பகுதிக்குள் குறித்த படகு பயணிக்க முற்பட்டபோது, இஸ்ரேல் படையினர் தடுத்து நிறுத்தி உள்ளனர்.

இதுகுறித்து பாதுகாப்புப் பேச்சாளர் கூறுகையில்,

படகில் இருந்தவர்களுடன் மோசமாக நடந்து கொள்ளவில்லை. கடற்படையினர் அவர்களுக்கு உணவும், குடிபானமும் வழங்கியுள்ளனர்- என்றார்.

அந்தப் படகு தற்போது இஸ்ரேலின் அஷ்டோட் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இத்தாலியின் நேப்பிள்ஸ் நகரிலிருந்து பின்லாந்து நாட்டுக் கொடியுடன் கடந்த 7 ஆம் திகதி புறப்பட்ட எஸ்த்தல் என்ற குறித்த படகில் 8 நாடுகளைச் சேர்ந்த 20 பேர் இருந்துள்ளனர். மேற்படி படகில் சென்றவர்களில் ஐரோப்பிய நாடுகளின் அரசியல்வாதிகள் ஐந்து பேரும் அடங்குவர்.

காசா நிலப்பரப்புக்குள் வசிக்கும் பலஸ்தீனர்களுக்கு மருந்துப் பொருள்கள் மற்றும் கல்வி உபகரணங்களை எடுத்துக்கொண்டு அந்தப் படகு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போர் நிறுத்தம் செய்யுங்கள் சிரியாவிடம் அமெ. கோரிக்கை

## பண்டிகை வருவதால் வேறுநாடுகளும் வலியுறுத்து

முஸ்லிம்களின் பண்டிகை அடுத்த வாரம் கொண்டாடப்பட இருப்பதால், சிரியாவில் இடம்பெற்று வரும் போரை தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா சிரியாவுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில், இதுவரை 30 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் சிரியாவில் முஸ்லிம்களின் முக்கிய பண்டிகைக் காலம் அடுத்த வாரம் ஆரம்பமாக வுள்ளது.

இந்த விழாவில் அனைத்து முஸ்லிம் மக்களும் பங்கேற்க வசதியாக சிரியாவில் தற்காலிகப் போர் நிறுத்தம் ஏற்பட அமெ ரிக்கா, துருக்கி உட்பட ஏனைய நாடுகள் சிரியாவை வலியுறுத்தி உள்ளன.

> சிரியாவில் முஸ்லிம்களின் முக்கிய பண்டிகை அடுத்த வாரம் கொண்டாடப்படவுள்ளதால் அனைத்து முஸ்லிம் மக்களும் எந்தவித பய உணர்வும் இல்லாமல் கலந்து கொள்ள வேண்டும்

இதுகுறித்து அமெரிக்க அதிகாரி விக்டோரியா நூலந்து தெரிவித்ததாவது:-

சிரியாவில் முஸ்லிம்களின் முக்கிய பண்டிகை அடுத்த வாரம் கொண்டாடப்படவுள்ளது.

இந்த மத விழாவில் அனைத்து முஸ்லிம் மக்களும் எந்தவித பய உணர்வும் இல்லாமல் கலந்து கொள்ள வசதியாக தற்காலிகப் போர் நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதற்காக எங்களது ஆதரவாளர் பெர்காமி அங்கு விரைந்துள்ளார்.

நாம் சிரியாவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். உங்களது அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

மக்கள் பண்டிகைக் கால கொண்டாட்டத்தை அமைதியாகக் கொண்டாட வசதியாகவும், மனித நேயத்துடன் சிரியா நடந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம் - என்றார்.

இந்நிலையில் சிரியாவில் தற்காலிக போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு சிரியாவின் ஆதரவு நாடுகளான துருக்கி மற்றும் ஈரான் நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

துருக்கி வெளிவிவகாரத் துறை அமைச்சர் அகமத் தவுத்தோகுலு, மக்களின் விடுமுறைக் கொண்டாட்டத்தை சீர்குலைக்காத வகையில் சிரியாவில் 3 அல்லது 4 நாள்கள் போர் நிறுத்தம் ஏற்பட வழிவகுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.



அமெரிக்காவின் கென்னடி விமான நிலையத்துக்குச் சென்ற அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, அங்கு குழுமியிருந்த குழந்தைகளிடம் கைகுலுக்கி மகிழ்ந்தார்.

### கடற்கொள்ளையர்கள் 10 பேருக்கு ஜேர்மனியில் சிறை

பேர்லின், ஒக்.22

ஜேர்மனியில் முதன் முறையாக கடற்கொள்ளையர்கள் 10 பேருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

19 - 50 வயது வரையிலான கடற்கொள்ளையர்கள், 2010ஆம் ஆண்டு போர்க் கப்பல் ஒன்றைக் கடத்திக் கொண்டு வந்ததற்காக மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது.

அவர்களிடமிருந்து ஐந்து இயந்திரத் துப்பாக்கிகளும், இரண்டு ரொக்கெட் ஏவுகணைகளும் கைப்பற்றப்பட்டன.

அவர்களில் இளைஞர்கள் ஏழு பேருக்கு 6- 7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், பதின்மவயது இளைஞர்கள் மூவரை சீர்திருத்தப் பாடசாலையிலும் சேர்க்கும்படியும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

### நேட்டோப் படை மீது மக்கள் அதிருப்தி

# மோசமான நிலைமை ஏற்படலாம் ஆப்கன் ஜனாதிபதி எச்சரிக்கை

காபூல், ஒக்.22



ஆப்கானிஸ்தானில் குவிக்கப்பட்டுள்ள நேட்டோப் படையினர் மீது, மக்கள் அதிருப்தியடைந் திருப்பதால் சிக்கல் எழக் கூடும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி ஹமீது கர்சாய் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேட்டோப் படையின் செயலாளர் ஜெனரல் அண்டர்ஸ் ஃபோக் ராஸ்முஸன், கர்சாயை காபூலில் சந்தித்துப் பேசினார். இதுகுறித்து, கர்சாய் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஆப்கானிஸ்தானில் உள்ள வெளிநாட்டுப் படைகளுக்குச் சுதந்திரம் அளிப்பதை மக்கள் விரும்பவில்லை. அரசு அவ்வாறு சுதந்திரம் அளிப்பதற்கு அவர்கள் அனுமதிக்கவும் மாட்டார்கள். 2014 ஆம் ஆண்டு ஆப்கனிஸ்தான் படைகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, கூடுதல் நேட்டோப் படைகள் நிறுத்தப்பட்டால் அது சிக்கலை உருவாக்கும்.

ஆப்கனிஸ்தான் மக்கள் வறுமையில் இருந்த போதும், தமது நாட்டின் இறையாண்மைக்குரிய மரியாதை கொடுக்கப்படுவதை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். உள்நாட்டுப் போர் நீடித்து, பாதுகாப்பின்மை தொடர்ந்தால், ஆப்கனிஸ்தானின் எல்லைகளைப் பாதுகாக்க முடியாது. அப்போது, வெளிநாட்டுப் படைகளுக்கு வழங்கப்படும் சுதந்திரம் பிரச்சினைக்குரியதாகும்-என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(வ)

# முஸ்லிம் மாணவிகள் முக்காடு அணிய ரஷ்ய ஜனாதிபதி எதிர்ப்பு

முஸ்லிம் மாணவிகள் முக்காடு அணிந்து செல்வதற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர்புடின் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் மொத்தமுள்ள 15 கோடி மக்களில், இரண்டு கோடி பேர் முஸ் லிம்கள் ஆவர். செசன்யா, வடக்கு காகசஸ், டடார்ஸ் டான் ஆகிய மாகாணங் களில் அதிகளவு முஸ் லிம்கள் வசிக்கின்றனர்.

அங்கு பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் முக்காடு அணிந்து செல்கின்றனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பாடசாலை அதிபர்கள் மிரட்டப்படுகின்றனர்.

இதுகுறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கூறுகையில்,

ரஷ்யா மதசார்பற்ற நாடு. அனைத்து குடிமக்களிடையே சமத் துவம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த சட்டதிட்டங்களைத் தான் பள்ளியிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

### லெபனான் பாதுகாப்பு அதிகாரி கொலைக்கு அமெரிக்கா கண்டனம்

லெபனானில் தீவிரவாதிகளால் உள்நாட்டுப் பாதுகாப்புப் படை அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

லெபனானில் பெய்ரூட் நகரத்தில் தீவிரவாதிகளால் பாதுகாப்புத் துறையின் மூத்த அதிகாரி விஸம் அல்-ஹசன் கொல்லப்பட்டார்.

இதுகுறித்து அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின் டன் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்த தாவது:-

லெபனான் மக்களின் பாதுகாப்புக்கு உறுதுணையாக இருந்தவரும், நன்மதிப்பைப் பெற்றவருமான விஸம் அல்-ஹசன் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டிக்கிறோம்.

அங்குள்ள கட்சிகள் நாட்டின் நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்புக்கு பொறுப்பேற்க வேண்டும். இதற்காக [illegible] வாளர்களுடன் இணைந்து செயற்படுவோம்- என்றுள்ளது.

# லெபனானில் குண்டு வெடிப்பு பாதுகாப்பு அதிகாரி சாவு



லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கார் குண்டு வெடிப்பில் அந்த நாட்டின் பாதுகாப்பு அதிகாரி ஜெனரல் வஸ்ஸாம் அல் ஹசன் உட்பட எண்மர் உயிரிழந் துள்ளனர். மேலும் பலர் பலத்த காயமடைந் தனர்.

மேற்படி இடம்பெற்ற கார்குண்டுத் தாக்குதலில் லெபனானின் சிரேஷ்ட உளவுப்பிரிவு அதிகாரியும் உள்ளக பாதுகாப்பு தலைமை அதிகாரியுமான ஜெனரல் வஸ்ஸாம் அல் ஹஸ்ஸன் கொல்லப்பட்டுள்ளார். அவரது இல்லத்துக்கு முன்பாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற் றுள்ளது.

குறித்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை.

### லெபனான் குண்டு வெடிப்பு; சிரியா மீது குற்றச்சாட்டு

லெபனானில் நேற்று முன்தினம்இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் சிரியாவின் ஜனாதிபதி பஷர் அல் அசாத் இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

லெபனானின் எதிர்க் கட்சியினர் இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளனர்.

லெபனானின் கிறிஸ்த்தவர்கள் அதிகம் வாழும் பகுதியான அஸ்ராபியாவில் நேற்று முன்தினம் மேற்படி குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது.

இதில் 8 பேர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந் தனர். சம்பவத்தில் பல முக்கிய புலனாய்வுத் தரப் பினரும் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தாக்குதலை சிரியாவே திட்டமிட்டு மேற்கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் பள்ளத்தில் கவிழ்ந்தது ஈரானில் 26 மாணவிகள் சாவு



தெஹ்ரான், ஒக்.22

ஈரானில் மாணவிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்ததில் 26 பேர் உயிரிழந்தனர். 19 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

மாணவர்களுடன் பயணித்துக் கொண்டிருந்த பஸ் இஜே, லார்டிகன் வீதியில் கவிழ்ந்தது. 26 பேர் இறந்தனர். 19 பேர் காயமடைந்தனர். இதுகுறித்து பொலிஸ் அதிகாரி தெரிவிக்கையில்,

ஈரானில் பெய்து வரும் மழையால் வீதி ஈரமாக இருந்ததால் பஸ் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது என்று உலகளாவிய ரீதியில் வீதி விபத்துகள் அதிகமாக நடைபெறும் நாடுகளில் ஈரானும் ஒன்று.

அங்கு ஆண்டுக்கு 4 லட்சம் விபத்துகள் ஏற்படுகின்றன. அவற்றில் 20 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். அதிக வேகம், பாது காப்பில்லாத வாகனங்கள், வீதி விதிகளை மதிக்காதது, அவசர உதவிகள் கிடைக்காமை போன்ற காரணங் களால் அதிக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்று தெரி விக்கப்படுகின்றது.

## நபியை அவதூறாக பேசியவர் சுட்டுக் கொலை

முகமது நபியைப் பற்றி அவதூறாகப் பேசியதால் பாகிஸ்தானில் நபரொருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

லாகூரில் இருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள குஜ்ரன்வாலா மாவட்டத்தைச் சேர்ந்தவர் சஜ்ஜத் ஹுசேன்.

அவர் முகமது நபியைப் பற்றி அவதூறாக பேசியதாக 2011 ஆம் ஆண்டு பெப்ரவரியில் கைது செய்யப்பட்டார்.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிமன்றம், இதற்கு தகுந்த ஆதா ரங்கள் இல்லை என்றுகூறி அவரை கடந்த மாதம் விடுவித்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கடைப் பகுதியில் சென்று கொண்டிருந்த ஹுசேனை, துப்பாக்கியுடன் வந்த 2 பேர் சரமாரியாகச் சுட்டனர். இதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

இதன் பின்னர் இருவரும் பொலிஸில் சரணடைந்தனர். விசாரணையில் அவர்கள் ஷேக் சீஸன் மற்றும் அவைஸ் அகமது என்பதும், ஹுசேனின் வீடு அருகே வசிப்பவர்கள் என்பதும் தெரியவந்தது.

முகமது நபியைப் பற்றி தவறாகப் பேசியதால் ஹுசேனைச் சுட்டுக் கொல்லப்பட்டதாக இருவரும் தெரிவித்தனர்.

## பாக். மாணவியின் உடல் நிலையில் முன்னேற்றம்



லண்டன், ஒக்.22

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளால் சுடப்பட்ட மாணவி மாலலா யூசுப்பின் உடல் நிலையில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரிட்டன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மாலலா யூசுப்பை மருத்துவர்கள் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர முடியும் என்று குறிப்பிட்டனர். மேலும், அதற்குச் சில காலங்கள் ஆகும் என்றும், மாலலா தற்போது அடுத்தவர்கள் துணையுடன் எழுந்து நிற்கவும் முடியும் என்று தெரிவித்துள்ளனர். குறித்த மாணவி தீவிரவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

# நோபல் பரிசைப் பெற்றுக்கொள்வதில் ஐரோப்பிய நாடுகளிடையே சர்ச்சை

அமைதிக்கான நோபல் பரிசை, யார் பெற்றுக் கொள்வது என்பதில் சர்ச்சை எழுந்துள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசு, இந்த ஆண்டு, ஐரோப்பிய கூட்டமைப்புக்கு, அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போரின்போது, போரிட் நாடுகள், தற்போது ஒன்றி ணைந்து அமைதியாக இருப்பதைப் பாராட்டி, 27 நாடுகள் கொண்ட ஐரோப்பிய யூனியனுக்கு அமை திக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் 44 நாடுகள் உள்ளன. ஐரோப்பிய யூனியனில் இல்லாத நாடுகள் குறித்த விருதுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளன. ஐரோப்பாவில் உள்ள பெரும்பாலான நாடுகள் இன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றன. நோபல் பரிசை நேரில் யார் சென்று பெறுவது, பரிசுப் பணத்தை பகிர்ந்து கொள்வது போன்றவற்றில் சிக்கல் நிலவுகிறது.

ஐரோப்பிய யூனியனின் தலைவர், வான் ராம்பி, நேரில் சென்று மேற்படி பரிசைப் பெற்றுக் கொள்வார்' என்று பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் ஜனாதிபதிகள் தெரிவித்திருந்தனர். 'எம்மை மதித்து அளித்துள்ள இந்தப் பரிசை, ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பெற வேண்டும் என்று ராம்பி வற்புறுத்தியுள்ளார். நோபல் பரிசை ராம்பி பெற்றுக் கொண்டால், யார் ஏற்புரை நிகழ்த்துவது என்பதில், தற்போது சர்ச்சை நிலவுகிறது. நோபல் பரிசை உருவாக்கிய, அல்பிரெட் நோபலின், நினைவு தினமான எதிர்வரும் டிசெம்பர், 10 ஆம் திகதி நோபல் பரிசு வழங்கப் பட உள்ளது. (வ)

# முதன் முறையாக சீனாவில் பெண்ணுக்கு உயர் பதவி



சீனாவில் முதன் முறையாக பெண் ஒருவருக்கு உயர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது.10 ஆண்டு களுக்கு ஒரு முறை புதிய ஜனாதிபதி நியமிக்கப்படுகிறார்.

இந்தநிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி ஹூஜிந்தா வோவுக்குப் பதிலாக புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படவுள்ளார்.

அவ்வாறு தெரிவுசெய்யப்படும் புதிய அரசை வழி நடத்தும் கூடுதல் அதிகாரம் படைத்த 9 பேர் கொண்ட நிலைக் குழுவில் ஒரு பெண் உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.

அவரது பெயர் லியூ யங் டாங் (வயது 67). 24 உறுப்பினர்களைக் கொண்ட பலம் வாய்ந்த மத்திய குழுவில் (பொலிட் பிரோலில்) இவரும் ஒரு உறுப்பினராக உள்ளார். அதில் இருந்து தான் நிலைக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலை அதிபர்
அல்போன்ஸ் அன்ரனி வின்சன் மரியநாயகம்
அவர்கள் 05.10.2012 ஆம் திகதி முதல் அதிபர் சேவை தரம் 2 – II இல் பதவி ஏற்றமையை பாராட்டுவதோடு அவர்மேலும் பல உயர் பதவிகள் பெற்று சிறப்புற வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர்கள்,
யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை, பருத்தித்துறை (23660)(6.7.8)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளிநொச்சி கல்வி வலயத்தில் இருந்து நல்லாசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு கடந்த 9 ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அவர்களால் ஆசிரிய 'பிரதீபா பிரபா 2012' விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்ட கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய ஆசிரியரும் பிறைற் கல்வி நிலைய ஆசிரியருமான
பரராஜசிங்கம் சசிறதன்
அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல விருதுகளையும், உயர்வுகளையும் பெற மனதார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
மாணவர்கள், பெற்றோர்கள், பிறைற் கல்வி நிலையம், A-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி
(சி/4207) 45.6.7)

வீடு விற்பனைக்கு
குமரக்கோட்டம் கோண்டாவில் முனியப்பர் கோயிலடி அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக் குண்டு.
தொடர்பு : 077 4985637
(சி/2066)(6.7.8)

கோழிக்குஞ்சு விநியோகம்
BAHIRAHA No .01
புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
றாஜீவ், நவாலி வீதி, ஆனைக் கோட்டை.
T.P : 077 6090926
(24584)(6.7.8)

பணிப்பெண் தேவை
கணவன், மனைவி இருவர் கொண்ட குடும்பத்திற்கு சமையல் மற்றும் ஏனைய வீட்டு வேலைகள் செய்வதற்கு பொறுப்புக்களற்ற ஆரோக்கியமான பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 077 9859218
(24893)(67.8) சாவகச்சேரி.

விற்பனைக்கு
சொந்தப் பாவனையிலுள்ள MP - X X X X எலோவீல் பல்சர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 2508 751
(24893)(6-7-45)

வீடு காணி விற்பனைக்கு
வெங்கடேசா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய வீடு (1½ பரப்பு) மற்றும் கச்சேரி நல்லூர் வீதியில் கிணறு, சுற்றுமதிலுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொ.பே. 075 7100 884
(24620)(6-7-45)



பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது பாடசாலை அதிபர்
திருமதி இளவேந்தி நிர்மலராஜ்
அவர்கள் 02.10.2012 அன்று சேவைத்தரம் 2 - II க்கு அதிபராக பதவி உயர்த்தப்பட்டமையை பாராட்டுவதோடு அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சேவையில் உயர்ந்து நீடுழி காலம் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
கிளி / நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை. (24607)(6.7.8)



பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது பாடசாலை அதிபர்
பேரம்பலம் திருக்கேதீஸ்வரன்
(B.Ed., Spe. Trd. (Agri.), SLPS 2 - II)
அவர்கள் 18.10.2012 அன்று முதல் சமாதான நீதிவானாக பதவியேற்றுள்ளமையை பாராட்டுவதோடு. அவர் மேலும் பல பதவிகள் பட்டங்கள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.
மாணவர்களும் பாடசாலைச்சமூகமும்,
கிளி/பூநகரி நல்லூர் ம.வி பூநகரி.



சேவை நலன் பாராட்டு
கடந்த 23 வருட சேவைக் காலத்தில் எமது பாடசாலையில் முழுநேரமாகவும் பகுதி நேரமாகவும் 12 வருட காலம் சேவையாற்றி இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய
சங்கீத கலா வித்தகர்
திருமதி யோகராணி செல்வநாயகம்
அவர்களது சேவையை பாராட்டுவதுடன் மேலும் சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை. (24613)(6.7.8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(14)



உங்களுக்குத் தான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் செய்த உதவியை என்னால் மறக்க முடியாது. என் நன்றியை ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்றான். மேயர் திகைப்புடன் அவனைப் பார்த்தார். ''நான் உனக்கு என்ன உதவி செய்தேன்? புரியவில்லையே?'' என்றார்.

''நான் சிறையிலிருந்து வெளியில் வந்தபோது, அன்புடன் ஒரு வார்த்தை பேசினீர்கள். மீண்டும் என்னை ஒரு மனிதனாக மதித்தீர்கள். அந்த ஒரு வார்த்தை என்னை மிக மிக மாற்றி விட்டது. மிகவும் யோக்கியமானவனாக மாறினேன். இன்று பணக்காரனாக இருக்கிறேன்''

மற்றவர்களிடம் அன்புடன் நடந்து கொள்பவர்கள் எப்போதும் சுயநலமற்றவர்களாகவே இருப்பார்கள். ஒரு மாணவன் படிப்பதற்காக விடியற்காலையில் எழுந்தான். நேரம் போவது தெரியாமல் படித்துக் கொண்டிருந்தான். பள்ளிக்கூடம் போக நேரமாகி விட்டது. காலை சிற்றுண்டி சாப்பிட நேரமில்லை. உணவைக் கட்டிக் கொண்டு பள்ளிக்கு நேரத்துக்குச் சென்றான்.

வகுப்பில் பாடங்களைக் கற்ற போது அவனுக்குப் பசியே தெரியவில்லை. ஆனால் பாடங்கள் முடிந்து மணி அடித்ததும், அவனுக்கு ஏகப்பட்ட பசி, உணவுப் பொட்டலத்தை எடுத்தான். அதை அவன் பிரித்த போது, தொலைவிலிருந்து மற்றொரு மாணவன் அதையே பார்த்துக் கொண்டிருந்தான். இவனைவிட அவனுக்கு ஏகப்பட்ட பசி, அவனும் பட்டினி.

அந்தப் பையனை அழைத்து உணவை அவனிடம் கொடுத்து, 'சாப்பிடு' என்றான்.

''உனக்கு?''

''எனக்கு என்னமோ தெரியவில்லை, பசியே இல்லை.''

தன்னுடைய உணவை தியாகம் செய்த மாணவன் வேறு யாரும் இல்லை: முசோலினி இத்தாலி நாட்டின் தலைவனாகி உலகப் புகழ் பெற்றவன். தான் ஒரு முக்கியமானவன் என்ற எண்ணம் அவன் மனத்தில் சிறிய வயதில் வேரூன்றியிருந்ததால் தான் அவன் மற்றவர்களைக் கவர்ந்தான். மாபெரும் அரசியல்வாதியானான்.

**கணவனைத் திருத்திய மனைவி**

ஒரு மனைவி தன் கணவனைத் திருத்த எண்ணினாள். கணவனின் அன்பு அவளுக்கு கிடைக்கவில்லை. எப்போதும் அவன் தன் மனைவியை மட்டம் தட்டியே பேசி வந்தான். ஒருநாள்கூட அவளைப் பாராட்டியதில்லை. ஆகவே அவள் தினமும் துன்பத்தில் மூழ்கியிருந்தாள்.

ஒரு நாள் கணவனைத் திருத்துவதற்கு என்ன வழி என்று யோசித்தாள். அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. தன்னிடம் உள்ள குறைகள் கணவனுக்குப் பிடிக்கவில்லை. அவை என்ன குறைகள் என்று அவளுக்குத் தெரியவில்லை. கோபத்தில் அவன் சுட்டிக் காட்டியவை குறைகளாக அவளுக்குத் தோன்றவில்லை; ஆகவே அவள் தன் கணவனுக்கு ஒரு கடிதத்தை எழுதினாள். அவனிடம் நேரடியாகவே அதைக் கொடுத்தாள்.

'என்ன இது''

''உங்களுக்கு நான் எழுதிய கடிதம், நான் என்னைத் திருத்திக் கொள்ள நீங்கள் உதவி செய்ய வேண்டும்.''

''இது என்ன புது மாதிரி புதிர்''

''புதிர் அல்ல, படியுங்கள்''

அவன் கடிதத்தைப்படித்தான். அதில் அவள் அவனிடம் 'என்னிடம் உள்ள பத்துக் குறைகளை எடுத்துச் சொல்லுங்கள் ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுங்கள் அந்தக் குறைகளை நான் திருத்திக் கொள்கிறேன். இரண்டே வாரத்தில் நீங்கள் நினைப்பது போல் நான் நடந்து கொள்ள முடியும்' என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவன் அந்தக் கடிதத்தை வைத்துக் கொண்டு ஒரு நாள் முழுவதும் சிந்தித்தான், தன்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தவே அவள் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறாள். அவளிடம் உள்ள பத்துக் குறைகள் என்ன? அவை எல்லாம் சாதாரண குறைகள் மற்றப் பெண்களிடம் உள்ள குறைகள். ஆனால் என்னிடம் எத்தனை குறைகள் இருக்கின்றன என்று நான் கேட்டால், அவள் ஆயிரமாயிரம் குறைகளைச் சொல்ல முடியுமே! எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டேன். இனிமேல் அவளை எந்தக் காரணத்தைக் கொண்டும் திட்டக் கூடாது. ...

அன்று மாலை அலுவலகத்திலிருந்து வரும்போது அவளுக்காக ஒரு இனிப்புப் பொட்டலமும், அடர்த்தியாகக் கட்டப்பட்ட மல்லிகைப் பூச்செண்டுமாலையும் வாங்கி வந்து கொடுத்தான். அவளால் நம்பவே முடியவில்லை.

''என்ன இது திடீரென்று?''

''உன் கடிதம் என் கண்களைத் திறந்து விட்டது. இனி உன்னிடம் நான் அன்பாக நடந்து கொள்ளப் போகின்றேன். உன்னிடம் எந்தக் குறையும் இல்லை'' என்று அவன் சொன்ன போது அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# காலத்துக்கு ஏற்ப மாற்றம் பெற்றுவரும் உலகில் பாடசாலையும் நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

அளவெட்டி,ஒக்.22

காலத்துக்கு ஏற்ப மாற்றம் பெறும் உலகில் பாடசாலையும் காலத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவிச்சந்திரன் தெரிவித்தார்.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை நிறுவுநர் நாளும், பரிசளிப்பு விழா நிகழ்வும் பாடசாலையின் ஒரேற்றர் மண்டபத்தில் அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இரவிச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கந்தரோடையில் தனக்கென்று ஓர் இடத்தை தனியாக ஆண்டுதோறும் தக்க வைத்திருக்கும் பாடசாலை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், ஆரம்பப் பாடசாலையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

தனது இருப்பிடத்தை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ளும் விதமாக மாணவ செல்வங்களை செயற்திறன் மிக்கவர்களாக உருவாக்கி உயர்ந்த உன்னதபணியை ஆற்றிக் கொண்டிருக்கிறது ஸ்கந்தா.

பரீட்சைப் பெறுபேறுகளை வைத்து கணிப்பிடக்கூடாது. செயற்திறன் தான் பாடசாலையில் முக்கியம் பெறுகிறது.

தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான கல்வியில் பிள்ளைகளிடம் பெற்றோர் காட்டும் அக்கறை புலமைப்பரிசில் பரீட்சையுடன் நின்றுவிடுகிறது. இதனால் தரம் ஆறுக்கு பிள்ளைகள் சென்றதும் ஓய்ந்து விடுகிறார்கள்.

எனவே பெற்றோர்கள் தொடர்ந்தும் பிள்ளைகளின் கல்வி விடயத்தில் அக்கறை காட்ட வேண்டும்.

பெற்றோர்கள் ஒத்துழைப்பு வழங்கினால்தான் பாடசாலை செயற்திறன் மிக்கதாக செயலாற்ற முடியும். பெற்றோர்கள் பாடசாலையோடு கூடிய உறவுகளை ஏற்படுத்த வேண்டும்.

சிறிய பாடசாலையிலும் கணினி வசதி ஏற்படுத்தப்பட வேண்டும். எமது காலத்தில் தான் பாடசாலைத் தேவைகள் முன்னெடுக்க வேண்டியுள்ளது. எனவே கல்வி முன்னேற்றத்துக்கு அதிபர், ஆசிரியர்களுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பழைய மாணவர் சங்கம் என்பனவும் வலுவானதாக இருக்க வேண்டும்.

பாடசாலையின் தரத்தை மாணவர்களின் எண்ணிக்கையை வைத்து எடைபோடக் கூடாது தேர்ச்சி பெறும் மாணவர்களின் தரத்திலிருந்து தான் பாடசாலையின் தரம் கணிக்கப்படுகிறது. அதிபர், ஆசிரியர்களுக்கு ஒத்தாசை வழிகாட்டல் அவசியம். வாசிப்பு பழக்கம் அவசியம் - என்றார். (எ-36)




முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்தின் தரம் 10 மாணவர்கள் கல்விச் சுற்றுலா மேற்கொண்ட போது உதயன் பணிமனையின் நாளாந்த பத்திரிகைச் செயற்பாடுகளைப் பார்வையிட்டனர். (எ-14)

# பல மதம் சார்ந்த மாணவருக்கு கல்வியை வழங்கிய பெருமை வைத்தீஸ்வராவைச் சாரும்

## கல்லூரி அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

பல மதம் சார்ந்த மாணவர்களையும் இணைத்து கல்விச் சேவையை வழங்கிய பெருமை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு உண்டு. இதன் காரணமாகவே இன்று யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்ற பாடசாலையாக உயர்வடைந்துள்ளது என்று யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் எம்.மகேந்திரன் தெரிவித்தார்.

''அம்பிகைப்பாகனின் ஆளுமைத்தடம்'' எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த 19 ஆம் திகதி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் விவேகானந்தா மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரை நிகழ்த்திய போதே மகேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளின் தோற்றம், வளர்ச்சி என்பன அதிபர்களின் சேவையில் தங்கியிருப்பதால் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் பெருமை மிகு கல்லூரியாக மாற்றிய பெருமை முன்னாள் அதிபர் அம்பிகைபாகனைச் சாரும். இவரது பணிகள் பாராட்டப்பட வேண்டியன. பல வருடங்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்காற்றியவர்களில் இவரும் ஒருவர். அத்துடன் தனிநபர் என்று இல்லாமல் தனது குடும்பத்துடன் இணைந்து சேவையாற்றியவர்.

கொட்டில் பாடசாலையாக இருந்த யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியை இன்று தரம் 1 ஏபி பாடசாலையாக உயர்த்தியவர்கள் பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள். அந்தவகையில் பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்காற்றியவர்கள் வரிசையில் முன்னாள் அதிபர் அம்பிகைபாகனை நினைவு கூர்ந்து இந்த நூல் வெளியீடு செய்துவைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பல மதம் சார்ந்த மாணவர்களின் குறிப்பாக ஏழை மாணவர்களின் கல்விக்கு அத்திபாரமாக யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி திகழ்கிறது.

கல்லூரி இந்தச் சேவையாலேயே அடையாளப்படுத்தப்பட்ட பாடசாலையாக திகழ்கிறது. சிறந்த கல்விமான்களை உருவாக்கிய பெருமையையும் எமது பாடசாலை கொண்டுள்ளது. கல்வியை மட்டுமல்லாது, ஒழுக்கத்தையும் சிறந்த அதிபர்களின் வழிகாட்டல்கள் ஊடாக வழங்கி வருகிறது - என்றார். (எ-14)

# நிர்வாக உறுப்பினர் தெரிவு

மன்னார், ஒக்.22

மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 14 ஆம் திகதி இடம் பெற்றது.

இதில் தலைவராக த.ரமேஸ் செயலாளராக என்.சுரேஸ்குமார், பொருளாளராக எ,எம்.எலியாஸ் ஆகியோரும் 17 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-14)

* * *

வட்டக்கச்சி இளங்கதிர் சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் நடைபெற்றன.

இதில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர்கள், பிரதேச சபை உறுப்பினர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டோர் வருமாறு:-

தலைவர் நா.பிரபாகரன், உப தலைவர் கே.சாரங்கன், செயலாளர் ஜெ. கௌசலா, உபசெயலாளர் ஏ.பிரபாகரன், பொருளாளர் வீ. சிறிவெங்கடேஸ்வரன், உறுப்பினர்கள் க. பாக்கியநாதன், ச.கமலாதேவி, செ.சுமநாத், ந.ஜெயசீலி.

மேலும் காப்பாளராக கிராம அலுவலர் நீ.ஜோன் - ஜெகநாதன், கணக்காய்வாளராக கிராம அலுவலர் செ.ரூபசிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டார்கள். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை சுஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## ஏவிவிடப்படும் காட்டேறிகள்

பில்லி சூனியக் கதைகளில் தமக்கு எதிரானவர்களை கொன்று குவிப்பதற்காக, தமது கட்டுப்பாட்டில் உறங்கு நிலையில் இருக்கும் இரத்தக் காட்டேறிகளை மந்திரவாதிகள் ஏவிவிடுவர். அந்தக் காட்டேறிகளும் மந்திரவாதிகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு தனக்கு அடையாளம் காட்டப்பட்ட நபர்களை கொல்ல முயற்சிக்கும். அனேக கதைகளில் காட்டேறிகளின் முயற்சி தோல்வியிலேயே முடிவடைவதுண்டு.

காட்டேறிகளை ஏவிவிடுவதென்பது புனையப்பட்ட கதைகளில் மாத்திரமே நடக்கக்கூடியது என்றே எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த நினைப்பைப் பொய்யாக்குவது போல வன்னிக்குள் ஒரு காட்டேறி உயிர் குடிப்பதற்காக ஏவிவிடப்பட்டிருக்கிறது. அந்தக் காட்டேறியின் பெயர் 'கபரயா'. அது ஒரு அடக்க முடியா மதம் கொண்ட யானை.

35 வயதுடைய கபரயா, இதுநாள் வரையும் புத்தளத்திலேயே சுற்றிக்கொண்டிருந்தது. திடீரென அதற்கு மதம் பிடித்துவிட, புத்தளத்தை கிலி கொள்ள வைக்குமளவுக்கு அதன் நடவடிக்கைகள் இருந்தன. கடைகள், வீடுகளை உடைப்பதை முழுநேரப் பொழுது போக்காகக் கொண்டிருந்த கபரயா, இடையிடையே மனிதர்களையும் கொலைவெறியோடு துரத்தத் தவறவில்லை. இந்தக் கொலைவெறியில் சிக்குண்டு இருவர் உயிரையும் விட்டிருந்தனர்.

இனியும் விட்டுவைத்திருந்தால் ஒட்டுமொத்த புத்தளத்தையும் கபரயா கபளீகரம் செய்துவிடும் என்று அலறியடித்த மக்கள் வனவிலங்குத் திணைக்களத்திடம் முறையிட்டனர். பெரும் பிரயத்தனத்தின் பின்னர் சிறையிடப்பட்ட கபரயாவை எங்கு கொண்டுசென்று விடுவது என்ற கேள்வி எழுந்தது. இதுபோன்ற மனிதர்க்கு ஊறு விளைவிக்கக்கூடிய மதம் பிடித்த யானைகளை மக்கள் நடமாட்டமற்ற அடர் காட்டுப் பகுதியிலேயே கொண்டு சென்று விடுவது வழக்கம். ஆனால் கொலைகாரக் கபரயாவை மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள முத்துஐயன்கட்டு காட்டுக்குள் இறக்கிவிட்டுவிட்டு பறந்துவிட்டனர் வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள்.

இருவாரங்களுக்கு முன்னர் இவ்வாறு ஏவிவிடப்பட்ட கபரயாக் காட்டேறி, வந்த நாள் தொடக்கம் தன் கைவரிசையை சுற்றுவட்டாரம் எங்கும் காட்டத் தொடங்கி விட்டது. தம்மிடம் எஞ்சிக்கிடந்த தறப்பாள்களையும், தகரங்களையும் வைத்து மீளக்குடியேறிய மக்கள் இட்டுக் கட்டிய தற்காலிக குடிசைகள் கபரயாவின் அட்டகாசத்துக்கு முன்னால் எப்படி நின்றுபிடிக்க முடியும்? தற்காலிக இருப்பிடமும் பறிபோக, அதற்குள் இருந்த பொருள்களும் நாசமாகி விட, மாரிமழைக்குள் அவலப்படவேண்டிய நிலைக்குள் முத்துஐயன்கட்டுக் காட்டை சுற்றியுள்ள மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். பகல்,இரவு என்ற பேதமின்றி வெறியோடு அலையும் கபரயா, எப்போது இங்குவருமோ? என்ற பயத்தோடு தூக்கத்தையும் தொலைத்தவர்களாக நெஞ்சிடியோடே இந்த மக்கள் இருக்கின்றனர்.

குடிசைகளைச் சின்னா பின்னப்படுத்தும் கபரயா, சற்று அலட்சியமாக இருந்தால் மனித உயிர்களையும் காவுகொள்ளத்தயங்காது.

மக்களை போரால் வதைத்தது போதாதென்று, அவர்களின் மீள்குடியமர் வாழ்வின் அமைதியைக் குழப்புவதற்காகவே உயிர்குடிக்கும் காட்டேறி கபரயா ஏவிவிடப்பட்டிருக்கிறதோ? என்ற சந்தேகம் அங்குள்ள மக்களுக்கு வந்துள்ளது. புதிது புதிதாக அழிவுநுட்பங்களை பிரயோகிக்கும் பேரின அரசு, கபரயாவை காட்டேறியாக வேண்டுமென்றேதான் ஏவிவிட்டுள்ளது என்ற சந்தேகம் முளைத்திருக்கிறது.

முத்துஐயன்கட்டு மட்டுமன்றி நெடுங்கேணிப் பகுதியிலும் இதுபோன்ற யானைகள் களமிறக்கிவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அங்கும் யானைகளின் அட்டகாசம் எல்லைமீறத்தொடங்கியுள்ளது. அவையும் கபரயா போன்று கொலைவெறியோடே அலைகின்றன.

இப்போது மக்களிடமுள்ள பயம் , "இனியும் எத்தனை கபரயாக்கள் எங்கள் மீது ஏவப்படப்போகின்றன?" என்பதுதான். மக்களின் பயத்திலும் ஒரு நியாயம் இருக்கத்தானே செய்கிறது.

# மன்னிப்பு சபையில் 46 அமைப்புக்கள் இலங்கைக்கு எதிராக அறிக்கை

### மனித உரிமை முன்னேற்றம் மார்ச் மாநாட்டில் ஆய்வு

சண்டே ரைம்ஸ் அரசியல் கட்டுரையிலிருந்து

■ கோகுலன்

இலங்கை அரசையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இருதரப்பு பேச்சுக்களை ஆரம்பிக்கச் செய்து இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு முயற்சியை முன்னெடுக்க செய்வதற்கான இந்தியாவின் முன் முயற்சி பெரும் சிக்கலுக்குள்ளாகியிருப்பதாகத் தெரிகின்றது.

இருதரப்பு பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும் அதேசமயம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றுவதற்கான செயற்பாடும் ஏககாலத்தில் இடம் பெறுவதற்கு முன்முயற்சி செய்யப்படவிருந்தது. ஆனால் அப்படியான அறிவித்தல் எதனையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுக்கப்போவதில்லை என்பது இப்போது தெரிய வந்துள்ளது. அதேசமயம் இந்தியாவும் அப்படியான ஒரு நிலைப்பாட்டுக்கு உத்தரவாதம் அளிக்கும் நிலையில் இல்லை. இந்தியாவின் முன்முயற்சிக்கு ஆரம்ப நிலையிலேயே முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதுடில்லி பயணத்தையடுத்து இலங்கை விடயத்தில் பல்வேறு கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்பட்டிருப்பதுடன் ஏற்கனவே இலங்கையுடன் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள கருத்து முறுகல் நிலை மேலும் மோசமடையக்கூடிய சூழ்நிலை தெரிகின்றது . இதுபற்றி இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள ராஜதந்திரிகள் கவலை தெரிவிக்கிறார்கள். இலங்கையில் அண்மைக் காலத்தில்ஏற்பட்டுள்ள சிலபல அரசியல் போக்குகள் குறித்து இந்தியா கவலை கொண்டிருப்பதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடு திரும்பியவுடனேயே இலங்கையில் உள்ள சீன தூதுவர் வூஜியாங்கோ அவர்களை ஒரு கலந்துரையாடலுக்கு அழைத்திருந்தார். இலங்கை விவகாரங்களில் இதுவரை அக்கறை கொள்ளாது இருந்துவந்த சீனா இப்போது கவனத்தை உள்விவகாரங்களிலும் திருப்ப விரும்புகிறது. என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

இந்தியாவுடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை கூட்டமைப்பினர் சீன தூதருக்கு விளக்கியிருக்கிறார்கள். அரசுடன் இதுவரை காலமும் நடத்தப்பட்ட பேச்சுக்களின் விவரங்கள் குறித்து சீன தரப்பால் கேள்வி எழுப்பப்பட்டதாகத் தெரிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இந்தியா பேச்சுக்கு அழைத்த சம்பவம் அண்மையில் ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்ற போது இந்தியப் பிரதமரோடு நடத்திய பேச்சுக்களையடுத்தே இடம்பெற்றது.

கூட்டமைப்புடன் நடத்திய பேச்சுக்களின் போது பிரதமர் சிங் வெளியிட்டுள்ள கருத்துக்களில் இலங்கை புதுடில்லிக்கு வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து நழுகிச்செல்வதை உணர்வதாக குறிப்பிட்டுள்ளார் என்று தெரிகின்றது.

கூட்டமைப்பின் மிக முக்கிய உயர்குழுவொன்று இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்த அங்கு சென்றிருந்த அதேவேளையில் இலங்கையில் நிகழ்ந்துள்ள சில அரசியல் சம்பவங்கள் குறித்து இந்திய அதிகாரிகள் கவலை கொண்டிருந்துள்ளனர். இருதரப்பு உறவுகளை பாதிக்கும் பல விடயங்கள் நடைபெற்றுள்ளன. அவைகளில் ஒன்று "திவிநெகும" சட்ட முன்வரைபு இந்தச் சட்ட முன்வரைவானது ஏற்கனவே [illegible] அதிகாரங்களை இல்லாமல் செய்வதாக இருக்கின்றனவென்று இந்தியா கருதுகின்றது. அரசமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தத்தின் கீழ் இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரங்களையடுத்து இந்தியா மேற்கொண்ட அனுசரணை நடவடிக்கையின் கீழ் 13 ஆவது திருத்தம் இலங்கை அரசமைப்பின் ஒரு பிரிவாக இணைத்துக் கொள்ளப்பட்டது. இந்தியாவுக்கு ஏற்பட்ட இன்னொரு அதிர்ச்சி என்னவென்றால் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டும் என்று கூறியிருப்பதாகும். தமிழர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இந்தத் திருத்தம் முழுமையாகச் செயற்படுத்தப்படுவதோடு மேற்கொண்டும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்பது இந்தியாவின் கருத்தாகும்.

**வடக்கு மாகாண சபை தேர்தலுக்கு முன்னரே...**

இலங்கையின் முக்கிய தலைவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்த போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கைகளில் இந்த விடயம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. கடைசியாக இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்த போது விடுத்த அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டிருந்தது.

அடுத்த ஆண்டு செப்ரெம்பரில் வடமாகாண சபைக்கான தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாகவே 13 ஆவது திருத்தத்தை நீக்கிவிடுவதற்கு முயற்சி நடைபெறுவதாக இந்தியா அதிகாரிகளில் சிலர் சரியாகவோ தவறாகவோ கருத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறாயின் வடக்கில் மாகாண சபை ஒன்று இருக்கமாட்டாது. அல்லது அதிகாரமில்லாத ஒரு சபையே இயங்குவதாக இருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள். பெயர்குறிப்பிட விரும்பாத அமைச்சரவை வட்டாரம் ஒன்றின் கருத்தின்படி 13 ஆவது திருத்தம் இல்லாமல் செய்யப்படுமானால் நாடு முழுவதுமே மாகாண சபைகள் இல்லாமல் போய்விடும். எனவே அது குறித்த அச்சத்துக்கு அடிப்படையில்லை.

இவை இப்படி இருக்க இலங்கையின் ராஜதந்திர நகர்வுகளின் பெறுபேறுகள் எப்படி போகின்றன என்பதை அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மனிதஉரிமை சபையில் இங்கு இடம்பெறும் சம்பவங்களின் எதிரொலிப்பை காணக் கூடியதாக விருக்கும். அடுத்த வருடம் மார்ச்சில் நடைபெறவிருக்கும் மாநாட்டிலும் அது எதிரொலிக்கும். உலகளாவிய பருவகால ஆய்வு நவம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. அதன் பின்னர் இந்தியாவின் தலைமையில் ஸ்பெயின் மற்றும் பெனின் ஆகிய நாடுகள் தயாரிக்கும் இலங்கை மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை நவம்பர் 5 ஆம் திகதி சபையில் ஆராயப்படும். ஏற்கனவே இலங்கை அரசாங்கத்தின் 26பக்க தேசிய அறிக்கையும் மற்றும் தொடர்புடைய அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சபைகளின் அறிக்கைகளும் மனித உரிமைகள் சபையின் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை அரசானது தனது நிலைப்பாட்டை அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ள அதேவேளை ஏனைய நிறுவனங்கள் அறிக்கையபெரும்பாலும் வசனத்துக்கு வசனம் எதிர்த்து கருத்துக்களை வெளியிட்டுள்ளன. அரசசாரா நிறுவனங்கள் உட்பட்ட 46 நிறுவனங்கள் மனித உரிமை சபையின் காரியாலயத்துக்கு அறிக்கைகளை அனுப்பியுள்ளன.

சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் 2002 பெப்ரவரியில் இருந்து 2009 மே வரையில் நீடித்திருந்த தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போர் நிறுத்த உடன்பாடு காலத்தில் நடந்த சம்பவங்கள் பற்றி ஆராய நியமிக்கப்பட்டிருந்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக் குழுவானது அமைப்பு ரீதியிலோ செயற்பாட்டு ரீதியிலோ சுயாதீனமாகவோ பாரபட்சமற்றதாகவோ இருக்கவில்லை என்று தெரிவித்துள்ளது. இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பாக ஆராய ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டிருந்த நிபுணர் குழுவும் கூட இதேவித தீர்மானத்துக்கு வந்திருந்தது. குறிப்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் கருத்தில் சாட்சிகளின் பாதுகாப்பு விடயத்தில் குறைபாடுகள் காணப்பட்டது என்று தெரிவித்துள்ளது.

பொதுமக்களும் மருத்துவமனைகளில் இருந்தவர்களும் கூட புலிகளினதும் ராணுவத்தினதும் தாக்குதல்களினால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் என்பதை குழு ஏற்றுக்கொண்டுள்ளது ஆனால் ஆயுதமோதல் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பான உண்மைகளை நிலைநாட்டத் தவறியுள்ளது. அரச படைகள் பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியதை நிராகரித்து மோதலில் சிக்கிய பொதுமக்களின் எண்ணிக்கையை வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டமைக்கு ஆதாரம் எதுவும் தரப்படவில்லையென்றும் மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. ஆணைக்குழுவின் விசாரணைகளில் மனிதஉரிமைகளை மீறியவர்களாக இனங்காணப்பட்டவர்களின் அந்தஸ்து அல்லது அரசின் பதவிகள் கருத்தில் கொள்ளப்படாமல் தண்டிக்கப்பட வேண்டும். என்று மன்னிப்புச்சபை பரிந்துரைத்துள்ளது.

கனேடிய தமிழர்களுக்கான அமைப்பானது தனது அறிக்கையில், ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை மக்கள் வதியும் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை மூடுவது மற்றும் மீள்குடியமர்ந்தவர்களுக்குச் சட்டபூர்வ உரிமம் வழங்கப்படவில்லை என்பவைகளை அது சுட்டிக்காட்டியுள்ளது.


அடுத்த வாரம் ஜெனிவாவில் ஆரம்பமாகும் மனித உரிமைகள் சபையின் விவாதங்களைவிட அடுத்த வருடம் மார்ச்சில் நடைபெறவிருக்கும் கூட்டமே அதிக முக்கியத்துவமானதாக இருக்கும். அதில் தான் கடந்த மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்க ஆதரவான தீர்மானத்தை இலங்கை எந்தளவுக்கு நிறைவேற்றியுள்ளது என்ற விடயம் ஆராயப்படும்.

சில வாரங்களுக்கு முன் அமெரிக்க தென்ஆசிய மற்றும் மத்திய பகுதிகளுக்கான உதவி ராஜாங்க அமைச்சர் றொபேட் பிளேக் வெளியிட்டுள்ள கருத்தில் இலங்கை விடயத்தில் வாஷிங்டன் ஏமாற்றம் அடைந்திருப்பதாகக் கூறியிருந்தார். கடந்த மே மாதம் வெளியுறவு அமைச்சர் பீரிஸ் அமெரிக்காவுக்கு சென்றிருந்த போது இலங்கை வடமாகாண சபை தேர்தல் 2013 செப்டெம்பருக்கு முன்னரே நடைபெறும் என்று கூறியிருந்தார். அது செயல்படுத்தப்படவில்லை. பருவகால ஆய்வின் போது முன்னேற்றம் காணப்படாது போகுமானால் மார்ச்மாத கூட்டத்தில் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாய் இருக்கும். என்று அவர் கூறியுள்ளார். நீதித்துறை, ஊடகத்துறை மற்றும் மீள் நல்லிணக்கத்தில் முன்னேற்றம் ஆகியவை குறித்து அமெரிக்கா கவனித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் 22

ஜெரா



> இந்தத் தாக்குதல் புலிகள் மீதான உலகப் பார்வையை மாற்றியது. ஏற்கனவே தீவிரவாதப் பட்டியலில் வைத்திருந்த கனடாவும், அமெரிக்காவும் தமது நிலைப்பாட்டை மேலும் இறுக்கின. இவர்களுக்கு எங்கிருந்து ஆயுதங்கள், அதற்கான நிதி கிடைக்கின்றன என்ற விடயத்தை தோண்டத் தொடங்கின. புலிகளின் இந்த அபரித வளர்ச்சியால் கதிகலங்கிய இந்தியா களத்தில் குதிக்கவே, போட்டிக்கு சீனாவும், பாகிஸ் தானும் இலங்கைக்கு உதவிக்கு வந்தன.

கடந்தகாலம் தமிழர்களிடமிருந்து மிக வேகமாக அரிக்கப்படுகின்றது. நம்மைக்கடந்துபோகும் ஒவ்வொரு கணமும் வலிகளாலும், மனித சமூகம் எதிர்கொள்ளவே முடியாத துயரங்களாலும் நிரம்பியவை.

ஆனால், அவை நம்மில் தங்குவதில்லை. முகாமிடுவதில்லை. மிகுகதியில் அழிந்துவிடுகின்றன. நினைவழிதலின் அரசியல் எனும் விடயம் இங்கு மட்டும் தான் விரைவான தன் செயற்றிறனைக் காட்டியிருக்கின்றது. உலகில் போராடித் தோற்ற வேறு எந்த இனங்களிடமும் காணப்படாத ஓர் அரிய, தவிர்க்கப்பட வேண்டியபண்பாடாக நாம் வைத்திருக்கின்றோம்.

**ஏன் கடந்தகாலம்?**

நமது நாள்கள் குருதியால் நிரம்பியவை. இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து தொடங்கிய இந்த இரத்தப் பெருக்கெடுக்கும் இலங்கைத் தமிழரின் வரலாறானது, 1983இலிருந்து வீரியம் பெற்றது. 2009 இல் ஒட்டுமொத்த வெறியையும் நம் மீது கட்டவிழ்த்தது. இந்த நாள்களில் கொப்பளித்து அடங்கி, நாறிப்போன குருதிக்குள், குழந்தைகள், கருவில் இருந்த சிசுக்கள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள், ஆண்கள் என அனைவருமே மூழ்கினர்.

அவர்கள் அனைவரும் சிந்திய குருதியின் வண்ணத்தில் தான் நம் ஒவ்வொருவரின் காலைகளும் விடிந்தன. சாவு விழும் என்ற எதிர்பார்ப்புடனும், சாவை பற்றிய செய்தி வரும் என்ற எதிர்பார்ப்புடனேயுமே சனங்கள், பக்கங்களையும், பத்திரிகைகளையும் பார்த்தகாலம்இன்னும்ஆறவில்லை.

**365 நாள்கள் நம் சாவுக்கு போதாது**

உலகில் சிறியதொரு இனமாக இருந்து கொண்டு, எப்படி ஒவ்வொரு நாளும் சாவை வைத்துக் கொள்ள முடிகின்றது? இதற்கான விடை நாம் வேட்டையாடப்பட்டதிலும், வேட்டையாடப்பட்டதற்கான காரணாகாரியங்களிலுமே உள்ளது.

தமிழர்கள் இந்தத் தீவில் வாழவே கூடாது என்ற எண்ணம் சாவுகளை நம் மீது அள்ளி வீசியது. பால், வயது வேறுபாடறுக்கப்பட்ட சாவுகள், தமிழர் நிலம் முழுவதும் விதைக்கப்பட்டன. இந்த சாவு விதைப்புக்கும், அதன் அறுவடைக்கும் 365 நாள்களும் போதாமலிருந்தன.

ஒவ்வொரு குடிசையிலும், ஒன்றுக்கு மேற்பட்ட சாவுச் செய்திகள் நாள் தோறும் இருந்தன. இருக்கின்றன. அதனால் தான் நம் மத்தியில் சாவுகளை நினைவு கொள்வதற்கு நாள்கள் போதாமலிருக்கின்றன. அதனாலேயும் நினைவு வைத்துக்கொள்ள வேண்டியவைகளை மறந்தே போனோம்.

**நினைவழிதலின் அரசியலை விளங்கிக் கொள்ளுதல்**

இன்று உலகம் முழுவதும் அமெரிக்காவுக்குப் பயன்படாத தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் விரைவான தோல்வியை சந்தித்து வருகின்றன. அவை விரைவாகவே தீவிரவாத விளம்பரங்களைப் பெற்றும் விடுகின்றன. அத்தோடு இன விடுதலைக்காக வீழ்ந்த அத்தனை உயிர்களும் வீணான சாவுகளின் பட்டியலில் தம்மை இணைத்துக் கொள்கின்றன.

அந்த சாவுகள் பெறுமதியற்றவையாக, சிங்கள புத்தரின் மொழியில் வாழத் தகுதியற்றவனவாக வரலாற்றில் பதிவுசெய்து கொள்கின்றன. ஆனால் போராடும் இனங்களின் பக்கம் நின்று பார்த்தால், இந்தச் சாவுகள் நினைவில் வைக்கப்பட வேண்டியவை. ஆனால் இனவிடுதலைப் போராட்டங்களை ஒடுக்கும் அரசுகள் அவ்வாறான நினைவுகளையும் அழிப்பதில் கனகச்சிதமாக செயற்படுகின்றன. அதற்கான செயற்பாடுகளையே நினைவழிக்கப்படுதலின் அரசியல் என அழைக்கின்றனர்.

**எப்படி அழிக்கப்படுகின்றது நினைவு**

இலங்கையில் புலிகள் தனி இராச்சியம் ஒன்றையே நிறுவியிருந்தார்கள். பல இடங்களில் அவரகளது போராட்ட நினைவுச் சின்னங்கள் இருந்தன. குறிப்பாக மாவீரர் துயிலும் இல்லங்கள் பார்க்கும் ஒவ்வொரு சந்ததிக்கும் விடுதலை வேட்கையையும், போராடும் குணத்தையும் கடத்தும் ஊடகங்களாக அமையப்பெற்றிருந்தன.

மக்கள் வணங்கிச் செல்லும் ஆலயநிலையை அவை எட்டியிருந்தன. அந்த இடங்களைக் கடக்கும்போது பேருந்துகளில் பாடல்கள் ஒலிப்பதில்லை. வாகனங்கள் அசைவொலி எழுப்புவதில்லை. அவ்வளவுக்கு மரியாதைக்குரிய நினைவுகளாக அவை பாதுகாக்கப்பட்டன.

ஆனால், இன்று திட்டமிட்ட வகையில் நினைவழிக்கும் அரசியல் படலம் அந்த புனித மையங்களிலெல்லாம் சாத்தியமாகியிருக்கின்றது. அந்த இடங்களில் இப்போது எந்த நினைவும் இல்லை. அனைத்துமே கிளறப்பட்டாயிற்று. அண்ணனின் நினைவு மீது தம்பி கிரிக்கெட் விளையாடும் மைதானங்கள் உருவாக்கியளிக்கப்பட்டுள்ளன. போராட்டம் தோற்று 3 வருடங்களுக்குள் நினைவுத் தரைகள், வெறும் கட்டாந்தரைகள் ஆகிவிட்டன. இப்படித் தான் ஒவ்வொரு நினைவிடமும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன.

போராடியமக்களுக்கு வேறொரு உலகில் வாழும் எண்ணத்தை வழங்கக் கூடிய சூழலை உருவாக்குவதற்கான பணிகள் தீவிரம் பெற்றுவருகின்றன. அதில் முக்கால்வாசிக்கு மேல் வெற்றியும் அடைந்தாயிற்று. இன்று வன்னியில் போரில் காயம்பட்ட கட்டடங்களைக் கூட காணக்கிடைப்பதில்லை. அனைத்தும் ஐ.என்.ஜீ. ஓவும், அரசு சார்ந்த நிறுவனங்களாலும் பூசிமெழுகப்பட்டுள்ளன.

ஆக போரில் காயப்பட்ட அப்பாவின் நினைவை மட்டும் அவரின் மகனும், அந்த மகனின் நண்பர்களும் சுமக்கின்றனர். அதுவும் இந்த அப்பா, அப்பப்பா ஆகும் போது மறக்கப்பட்டுவிடும்.

**ஒரு நினைவு**

இன்று 22ஆம் திகதி. 2007 ஆம் ஆண்டும் இதே போன்றதொரு 22 ஆம் திகதி வந்தது. ஆனால் அது இந்த முறை போன்று மௌனித்த பெருவெளிக்குள் இயங்கவில்லை. அந்த நாள் தொடங்கி மாதக்கணக்கில் பெரும் ஆரவாரம் இருந்தது. உலகம் இரண்டாவது தடவையாக தமிழர் பக்கம் திரும்பியது இந்த 22 இல் தான். அந்த ஆபத்தான பார்வையை இந்த 22 தான் தந்தது.

இந்த நாள் இது போன்றதொரு ஆச்சரிய செய்தியைத் தருமென்று சனங்கள் யாருமே நினைக்கவில்லை. அன்றும் வழமையாக புலிகளின் குரல் வானொலி 6.30 இற்கு ஆரம்பமாகியது. ஆனால் அன்று மட்டும் தொடக்கத்தில் வரும் அறிவிப்புக்கள் இருக்கவில்லை. தன் குரலினால் போர்க்களத்தையே கொண்டுவரும் தி.தவபாலன் (தி.இறைவன்) மைக்கை பொறுப்பெடுத்திருந்தார். அன்று முழுதும் அவரின் கையில் தான் அது இருக்கப் போகின்றது என்ற விடயம் ஆரம்பத்தில் பலருக்குத் தெரிந்திருக்கவில்லை.

அதிகாலை 3 மணியளவில் அனுராதபுரம் விமானப் படைத் தளத்துக்குள் நுழைந்த 21 பேர் கொண்ட விசேட கரும்புலிகள் அணி அந்த தளத்தையும், அங்கிருந்த விமானங்களையும் தாக்கியளித்தது என்ற செய்தி அனைத்து சனங்களையும் சுவாரஸ்யமாக்கியது. வெற்றிப் பாடல்களுக்குள்ளும், தவபாலன் எப்போது வாயைத் திறப்பார் என்ற ஆவலுக்குள்ளும் வானொலிப்பெட்டியடியில் பலர் படுக்கை போட்டனர்.

அவரும் சளைக்காமல் அந்தத் தாக்குதல் தொடர்பான நேரடி வர்ணனையை வழங்கிக் கொண்டிருந்தார். எப்படிப்பயிற்சி பெற்றனர்? எப்படி நுழைந்தனர்? எப்படி தாக்கினர்? எவ்வளவு பெறுமதியிழப்பு போன்ற தகவல்களை தொடர்ந்தும் வழங்கிக் கொண்டேயிருந்தார். கிளிநொச்சி இளைஞர்கள் பட்டாசுக் கொளுத்திக் கொண்டாடினர்.

அன்று காலை வெளிவந்த ஈழநாதம் பத்திரிகையில் தாக்குதல் குறித்து எந்தச் செய்திகளும் இருக்கவில்லை. அதனால் மாலையில் விசேட பதிப்பொன்று வந்தது. அதில் தம் உயிரை இழந்த முகங்கள் கடைசிப் புன்னகையுடன் இருந்தன. அவர்களின் முகங்களைக் கண்டதிலிருந்து சனங்கள் மத்தியிலிருந்து வெற்றிக் கொண்டாட்டங்கள் அடங்கிப் போயிற்று.

அன்று தொடங்கிய தாக்குதல் பற்றிய கதைகளும், செய்திகளும் பல மாதங்கள் நீடித்தன. ஒவ்வொரு பத்திரிகையும் புலிகளின் பலத்தையும், இலங்கை இராணுவத்தின் பலவீனத்தையும், இழப்பையும், அதற்குப்பிறகு இலங்கையில் ஏற்படப் போகும் மாற்றத்தையும் பலவாறாக எழுதித் தொலைத்தன. ஆனால் 2009 இல் முடிந்த யதார்த்தம் அவை எழுதியதிலிருந்து முற்றாக மாறுபட்டிருந்தன.

**முதல் கூட்டுத் தாக்குதல்**

விடுதலைப்புலிகள் சமாதான காலத்தின் முடிவில் அபரிதமான ஆயுத வளர்ச்சியைக் கண்டிருந்தார்கள் என்று எழுதப்பட்டு வந்த நேரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. அதற்கேற்றாற் போலவே புலிகளும் மூன்று வழியிலான தாக்குதலை நடத்தியிருந்தனர்.

கரும்புலிகள் அணி நேரடியாகத் தாக்குதலில் ஈடுபட, புலிகளின் விமானப்படையும் சமநேரத்தில் தாக்குதல் நடத்தியது. பக்க பலத்திற்கு புலிகள் பக்கமிருந்து ஆட்லெறி எறிகணைத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

ஆகவே அந்த அரசியல் ஆய்வாளர்கள் அனைவரினதும் கருத்துக்கள் நிஜப்பட்டதாகவே தொடர்ந்தும் புலிகளுக்கு உசுப்பேத்தினர். இதுவரை உலகில் வேறு எந்த விடுதலை இயக்கமும் இதுபோன்ற ஒருங்கிணைப்புத் தாக்குதலை நடத்தவில்லையெனவும், இது அதீத வளர்ச்சி எனவும் முழங்கினர்.

**உலகின் பார்வை மாறியது**

ஆனால் இந்தத் தாக்குதல் புலிகள் மீதான உலகப் பார்வையை மாற்றியது. ஏற்கனவே தீவிரவாதப் பட்டியலில் வைத்திருந்த கனடாவும், அமெரிக்காவும் தமது நிலைப்பாட்டை மேலும் இறுக்கின.

இவர்களுக்கு எங்கிருந்து ஆயுதங்கள், அதற்கான நிதி கிடைக்கின்றன என்ற விடயத்தை தோண்டத் தொடங்கின. புலிகளின் இந்த அபரித வளர்ச்சியால் கதிகலங்கிய இந்தியா களத்தில் குதிக்கவே, போட்டிக்கு சீனாவும், பாகிஸ்தானும் உதவிக்கு வந்தன.

புலிகளுக்கு எதிராகப் இலங்கை அரச படைகள் பயன்படுத்த இந்த நாடுகள் அனைத்துமே போட்டி போட்டுக் கொண்டு ஆயுதங்களை வாரிக் கொட்டின. 2009 முடிவுவரை அந்த நிலை தான் தொடர்ந்தது. புலிகளை ஒடுக்குவதற்கான சந்தர்ப்பங்கள் அவர்களாலேயே உருவாக்கிக் கொடுக்கப்பட்டதென உசுப்பேற்றிய பத்திரிகைகள் மறுபடியும் எழுதத் தொடங்கின.

சீனாவும், இந்தியாவும், பாகிஸ்தானும் இலங்கைக்குள் கால்வைப்பதாக செய்திகள் வருகின்றன. அதற்கு அனுராதபுரத் தாக்குதல் இப்படித்தான் உதவியது.

**பிணங்களைக்கொண்டாடிய சிங்களவர்கள்**

அன்று மாலையே சிங்களத் தொலைக்காட்சிகள் ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் ஒளிபரப்பின. அனுராதபுரத் தாக்குதலில் மரணித்த போராளிகளின் நிர்வாண உடலங்கள் வாகனப் பெட்டிகளில் கட்டி தெருத்தெருவாக இழுத்துச் செல்லப்பட்டன. சிங்கள மக்கள் அதனைப் பார்வையிட்டு பெருமூச்செறிந்தனர். எதைக்கொடுத்தாவது இவர்களை அழித்தொழிக்க வேண்டும் என உறுதியெடுத்துக் கொண்டனர்.

2009 முடிவுக்கு தம்மாலான அனைத்து உதவிகளையும் ஆட்சியாளர்களுக்கு சிங்கள மக்கள் வழங்கினர். இப்போதும் இந்த அரசு தாங்க முடியாத பொருளாதார சுமைகளை அந்த மக்கள் மீது சுமத்துகின்ற போதும் தமது ஆதரவை வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றனர்.

அதற்கு அந்த மக்களின் கனவை இந்த அரசு நிறைவேற்றி வைத்தது தான் பிரதான காரணி. அந்த வெற்றியின் நினைவே சிங்கள மக்கள் மத்தியில் இந்த அரசை கதாநாயகப்படுத்தியிருக்கின்றது. இப்படியான ஒரு கடந்த கால நினைவையும் நாம் வைத்திருக்கின்றோம்! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலட்சியம் ஆபத்து

குருட்ஷேத்திரத்தில் போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. பீமனின் மகன் கடோற்கஜன் கௌரவர் சேனையை பலமாகத் தாக்கினான். அதன் காரணமாக கௌரவ தரப்பு சேனைகள் அழிந்து கொண்டிருந்தன. பல கௌரவ சகோதரர்கள் அவனை அழிக்க முற்பட்டும் பலன் இல்லை.

இதைக் கவனித்த துரியோதனன் கர்ணனிடம் வந்து, ''கர்ணா... இந்த கடோற்கஜனின் தாக்குதலால் எமது படைகள் அழிந்து கொண்டிருக்கின்றன. நீ இப்போது உன் திறமையை வெளிப்படுத்தி எமது சேனைகளைக் காப்பாயாக'' என்றான்.

கர்ணனும் அதனை ஏற்று பாண்டவர் சேனையை பலமாகத் தாக்கத் தொடங்கினான். அமைதியாக, அதே நேரம் குறி தவறாமல் கர்ணன் பாணங்களைப் பொழிந்து கொண்டே இருந்தான்.

இந்தத் தாக்குதலால் பாண்டவர் சேனை நிலை தடுமாறியது. இதைக் கண்ட அர்ச்சுனன் கோபங்கொண்டு கர்ணனைத் தாக்குவதற்குப் புறப்பட்டான். அப்போது சாரதியாக வீற்றிருந்த ஸ்ரீ கிருஷ்ணர், ''அர்ச்சுனா.. இப்போது நீ கர்ணனைத் தாக்க வேண்டாம்... கடோற்கஜனே அவனை எதிர்க்கட்டும்...'' என்று கூறினார்.

அதன்படி கடோற்கஜன் கர்ணனை எதிர்க்கத் தொடங்கினான். அதைக் கவனித்த துரியோதனன் கர்ணனுக்குப் பாதுகாப்பாக படைகளை அனுப்பிக் கொண்டேயிருந்தான். அவன் அனுப்பிய படைகள் அனைத்தையும் கடோற்கஜன் துவம்சம் செய்து கொன்று முடித்தான். கர்ணனின் உடல் முழுவதும் இரத்தக் காயங்களை அவன் ஏற்படுத்தினான். கர்ணனைக் காக்க வேண்டும் என்பதற்காக பல சேனைகளைத் துரியோதனன் அனுப்பினான்.

ஆனால், கடோற்கஜனின் தாக்குதல் மிகத்தீவிரமாக இருந்தது. அவன் அனுப்பிய படைகள் அனைத்தும் மீண்டும் அழிந்தன. இப்படியே போனால் தன் படைகள் முழுவதையும் இந்த கடோற்கஜன் அழித்து விடுவான் என்று கருதிய துரியோதனன், ''கர்ணா.. இக் கொடியவனை உடனே கொல்க... கொல்க..' என்ற கோபத்துடன் கூக்குரலிட்டான். ஏற்கனவே பல ரத்தக் காயங்களை தனக்கு கடோற்கஜன் ஏற்படுத்திக் கொண்டிருந்த காரணத்தாலும், துரியோதனன் போட்ட கூக்குரலினாலும் மிகுந்த கோபம் கொண்ட கர்ணன் தான் பத்திரப்படுத்தி வைத்திருந்த சக்தி ஆயுதத்தை எடுத்து கடோற்கஜன் மீது பிரயோகித்து விட்டான். சக்தி ஆயுதம். கடோற்கஜனைத் தாக்கியது. அவன் உயிரிழந்து போர்க்களத்தில் விழுந்தான். அதைக் கண்ட கௌரவர் சேனை ஆரவாரம் செய்து கர்ணனைப் பாராட்டியது. பாண்டவர்கள் துக்கத்தில் மூழ்கினர். ஆனால், ஸ்ரீ கிருஷ்ணன் மகிழ்ச்சியடைந்தவராய் அர்ச்சுனனை கட்டித் தழுவிக் கொண்டார். அப்போது அர்ச்சுனன், ''கிருஷ்ணா! நாங்கள் அனைவரும் கடோற்கஜனின் மறைவால் அதிக துக்கத்தினை அடைந்திருக்கிறோம். ஆனால் நீர் மட்டும் மகிழ்ச்சியடைந்தவராகவே காணப்படுகிறீரே.. அதற்குக் காரணம்...? என்று வினவினான்.

''அர்ச்சுனா.. உன்னைக் கொல்வதற்கென பத்திரப்படுத்தி வைத்திருந்த சக்தி ஆயுதத்தைக் கர்ணன் அலட்சியம் காரணமாகவே கடோற்கஜன் மீது பிரயோகித்து விட்டான். இனி அந்தச் சக்தி ஆயுதம் அவனுக்குப் பயன்படாது. அதன் காரணமாக நீ காப்பாற்றப்பட்டாய். அதே சமயம் சக்தி ஆயுதத்தை இழந்து விட்டதால் கர்ணன் இப்போது பலவீனன் ஆகிவிட்டான். இனி அவனைக் கொல்வதும் எளிது. அதனால்தான் மகிழ்ச்சியடைந்திருக்கிறேன்'' என்று கிருஷ்ணர் விளக்கம் கூறினார்.

அர்ச்சுனனைக் கொல்வதற்காகவே நீண்ட காலமாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்த சக்தி ஆயுதத்தை கடோத்கஜனின் தாக்குதலால் உண்டான ஆவேசம் காரணமாகவும், அலட்சியம் காரணமாகவும் கர்ணன் வீணாக்கி விட்டான். அதனால் அவன் பலம் குறைந்து போயிற்று. அர்ச்சுனனுக்கும், அவனுக்கும் நேரடியாக யுத்தம் தொடங்கிய போது ஒரே முறை மட்டும் பிரயோகிக்க வேண்டிய நாகாஸ்திரமும் பயனின்றிப் போனது. ஸ்ரீ கிருஷ்ணர் தன் கட்டை விரலால் தேரை அழுத்தி நாகாஸ்திர ஆபத்திலிருந்து அர்ச்சுனனைக் காப்பாற்றி விட்டார்.

அந்தச் சமயம் ஆயுதம் அவனிடம் இருந்திருக்குமேயானால் கர்ணனை வெல்ல எவராலும் முடிந்திருக்காது. பாண்டவர் படை முழுவதும் ஒன்று சேர்ந்து அவனைத் தாக்கியிருந்தாலும் கூட அவற்றை அவன் முறியடித்திருப்பான். சக்தி ஆயுதத்தை இழந்த நிலையில் இருந்த கர்ணனின் தேர்ச் சக்கரம் மண்ணில் புதையுண்டது. இது போன்ற பல பலவீனங்கள் அவனுக்குச் சூழ்ந்தன. அந்தச் சமயம் பார்த்து அர்ச்சுனன் அம்புகளை எய்து கர்ணனை வீழ்த்தி விட்டான்.

அலட்சியம் காரணமாக சக்தி ஆயுதத்தை வீணடித்த காரணத்தால்தான் கர்ணன் பலவீனன் ஆகி, உயிரிழக்க நேர்ந்தது. இந்த வையகத்திலும் பலர் தங்களுக்கு இருக்கும் மிகப்பெரிய பலத்தை அற்ப விஷயங்களுக்காக செலவழித்துவிட்டு முக்கியமான காலகட்டங்களில் அந்த பலம் இல்லாமல் அழிந்து போயிருக்கிறார்கள்.

இந்த உலக வாழ்க்கை என்பது எப்போதும் சீராக இருப்பதில்லை. விநாடிக்கு விநாடி இது மாறிக் கொண்டேயிருக்கிறது. பலவான் பலவீனன் ஆவதும், பலவீனன் பலவான் ஆவதும் இங்கே சதா நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. இப்போது நாம் சகல வசதிகளுடன் வாழ்கிறோம் என்பதற்காக எதிர்காலத்திலும் இப்படியே இருப்போம் என்று நினைத்து விட முடியாது. எமக்கு இருக்கும் பாதுகாப்புக் கவசங்களாக செல்வம், சொத்து, உறவினர் மற்றும் பல்வேறு அம்சங்களைத் தக்க வைத்துக் கொண்டே வாழ்க்கைப் பயணத்தைத் தொடர வேண்டியவர்களாக இருக்கிறோம்.



தற்போது இருக்கும் சூழ்நிலையை வைத்து இந்தப் பாதுகாப்புக் கவசங்களை இழந்து போகும்படியான காரியங்களை நாம் மறந்தும் செய்யக் கூடாது. எமக்கு ஏராளனமாக திறமைகள் இருக்கலாம்; அந்தத் திறமைகளை வெளிப்படுத்த வேண்டிய முக்கியமான கால கட்டங்களில் தான் வெளிப்படுத்த வேண்டும். கண்ட நேரங்களில், பொருந்தாத இடங்களில் அவற்றை வெளிப்படுத்தி விரயம் செய்யக்கூடாது.

பரமஹம்ஸ ஸ்ரீபரத்வாஜ் ஸ்வாமிகள்

# இணைப்பாடவிதானத்தில் முன்னிலையில்

# யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை




(கடந்த வாரத் தொடர்ச்சி...)

ஆண்டு தோறும் தரம் ஒன்று மாணவர்களுக்கான அனுமதி விண்ணப்பங்கள் ஆயிரத்துக்கும் அதிகமாகக் கிடைக்கின்றன. எனினும் இருநூற்றி பத்து மாணவர்களே தெரிவு செய்யப்படுகின்றனர். மாணவர் அனுமதியிலும் போட்டித் தன்மை காணப்படுகின்றது.

ஆண்டு தோறும் புலமைப்பரிசில் பரீட்சையில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்து சாதனை படைக்கின்றனர். இது மாவட்ட தேசிய மட்டங்களில் கிடைக்கிறது. 2004-2006 ஆம் ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று ஜப்பான் கல்விச் சுற்றுலாவில் தமது மாணவர்கள் இடம் பெற்றதில் மகிழ்ச்சி அடைந்தனர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள். 2012 இல் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் வடமாகாணத்தில் முதன்மை பெறுபேற்றைப் பெற்றதுடன் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் (143 மாணவர்கள்) சித்தியடைந்துள்ள நிலையில் ஜப்பானுக்கான கல்விச்சுற்றுலா மேற்கொள்ளும் வாய்ப்பும் தமது பாடசாலைக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் அதிபர் தியாகலிங்கம் கூறுகின்றார்.

இந்த ஆண்டில் இப் பாடசாலையைச் சேர்ந்த பா.அபிராம் 193 புள்ளிகளைப் பெற்று முதல் மாணவனாக தேறியுள்ளார். இம்முறை மாவட்ட மட்டத்தில் இங்கிருந்து தோற்றிய மாணவர்கள் முறையே முதலில் இரண்டாம், மூன்றாம் இடங்களையும் தட்டிக் கொண்டுள்ளனர்.

கல்விச் செயற்பாடுகள் மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பாடசாலை முன்னிலையில் உள்ளது. விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிக் காட்டுவதிலும் சிறுவர்கள் ஆர்வம் காட்டுகின்றார்கள். முதன்மை நிலை ஒன்று, முதன்மை நிலை இரண்டு, மூன்று என இரு நிலைகளாகவும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உடற்பயிற்சி, கவின் கலைகள், மொழி விருத்திச் செயன் முறைகள் , ஆங்கில மொழிகளுக்கான ஆற்றல், குருளைச் சாரணியம், கணினித் துறை, சென் ஜோன்ஸ்' அம்புலன்ஸ் சேவை என்பன பாடசாலையின் நாள்காட்டியின் பிரகாரம் இடம் பெறுகின்றது.

தமிழ் ஆங்கிலதினப் போட்டிகளில் கோட்ட , வலய, மாகாண, தேசிய மட்டங்களில் ஒவ்வொரு ஆண்டிலும் இப் பாடசாலை அதிகமான விருதுகளைத் தட்டிச் செல்கின்றது. கணினித் துறையிலும் முன்னணிப்பாடசாலையாக விளங்கும் இப் பாடசாலை 2010-2011 ஆம் ஆண்டுகளில் தேசிய ரீதியில் கணினித்துறைக்கான தேசிய விருதையும் பெற்றுள்ளன.

இதன் மூலம் கணினித்துறைக்கு க்ணினிகள், மல்ரி மீடியா, போன்றவையும் கிடைத்துள்ளன. இது தவிர அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்ட முப்பது பாடசாலைகளில் ஒன்றாக அறுபத்தி ஐந்து செயன்முறைத் திட்டத்தில் (ஒரு வருட செயற்பாட்டுத் திட்டம்) கல்வி அமைச்சின் சிபாரிசின் பேரில் ஊ.எவ்.சி.சி. வங்கியின் அனுசரணையுடன் சாதனைப் பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு அதற்கான பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றுக் கொண்டுள்ளது.

இதனூடாக இப்பாடசாலை ஆரம்பக் கல்விப் பிரிவில் முன்னோடிப் பாடசாலையாக நவீன கற்பித்தல் சாதனங்களின் பயன்பாட்டைக் கொண்ட மாதிரி வகுப்பறைகள் அமைக்கப்பட்டு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் முன்னிலை வகிக்கின்றது. இதனால் வெளி மாவட்டங்களில் உள்ள தமிழ் சிங்களப் பாடசாலை மணவர்கள் இங்கு வந்து பார்வையிட்டும் அறிந்தும் செல்கின்றனர். பாடசாலையின் சகல செயற்றிட்ட வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் அபிவிருத்திக் குழு ஆகியன முகாமைக் குழுவுடன் இணைந்து சிறப்பாகச் செயற்படுகின்றன.

> இந்தப்பாடசாலை ஆரம்பக் கல்விப் பிரிவில் முன்னோடிப் பாடசாலையாக, நவீன கற்பித்தல் சாதனங்களின் பயன்பாட்டைக் கொண்ட மாதிரி வகுப்பறைகள் அமைக்கப்பட்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் முன்னிலை வகிக்கின்றது.

சைவசமயப் பாடசாலை என்பதால் சமய பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக் காத்து மாணவர்கள் எதிர்காலத்தில் தமது மதம், கலை, கலாசாரங்களைப் பேணக் கூடியதான சமுதாயமாக மிளிர அதிபர் திருஞான சம்பந்தம்பிள்ளையின் காலம் தொட்டோ கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

பாடசாலைக்கு வரும் சிறார்களின் நெற்றியில் சைவசமயத்தின் அடையாளமான விபூதி, சந்தனம் இருப்பதை அவதானிக்கலாம். அருகிக் கொண்டு வரும் குருவை மதிக்கும் குணாதிசயம் இங்கே தழைக்கக் காண்கிறோம். அதே போன்று பெற்றோரை மதிக்கும் பண்புகளை மாணவர்கள், தமது சிறார்கள் கடைப்பிடிக்க அறிவூட்டப்படுவதுடன், பெற்றோர்கள் அதற்கான ஒழுங்கு முறைகளைக் கவனத்தில் கொள்ளவும் கேட்கப்படுகின்றனர். மாணவர்கள் தேவாரங்களைப் பண்ணுடன் இசைத்துப் பாடுவதற்கான பயிற்சிகளை வகுப்பாசிரியர்கள் வழங்குகின்றனர்.

ஆரம்பமே வெற்றிக்கான அத்திபாரமாக அமைய வேண்டும் என்பதில் இந்தப் பாடசாலைச் சமூகம் உறுதியுடன் உள்ளது. ஒவ்வொரு செயற்றிட்டங்களையும் அவதானிக்கும் போது உணர முடிகிறது. சிறுபிள்ளைகளின் மொழி அறிவுக்கு ஆர்வமூட்டும் வகையில் சில பொருள்கள், உடலுறுப்புக்களின் பெயர்கள், படங்களுடன் எவ்வாறு விளக்கம் கொடுக்கப்படுகின்றன என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளக் கூடியதாய் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் குறித்து பாடசாலைக்குள் நுழையும் ஒவ்வொருவரையுமே சிந்திக்க வைக்கக் கூடியதாக எல்லா வகுப்புகளுமே அமைந்துள்ளன. மாணவர் சமூகத்தின் நிறைவான கல்விக்கு அடித்தளமாகவுள்ள யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் நிறைவடையாத கட்டடப் பகுதியை பூர்த்தி செய்யும் போது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மேலும் துரிதமாகவும் இட நெருக்கடியைத் தவிர்க்கக் கூடியதாகவும் அமையும் என்பது நிச்சயம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலையில் சிக்கிய இராட்சத சுறா ...



அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சின்னப் பாலமுனைப் பகுதியில் இராட்சத சுறா ஒன்று சிக்கியுள்ளது. கடலுக்குச் சென்றிருந்த ஆழ்கடல் மீன்பிடி தொழிலாளர்களின் வலையிலேயே குறித்த சுறா பிடிபட்டுள்ளது.

# சவால்களைத் தீர்க்க ஐந்து வருடத் திட்டம்

### மட்டு. அரச அதிபர் தெரிவிப்பு

எருவில்,ஒக்.22

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்களை எப்படி தீர்த்து வைப்பது என்பது தொடர்பில் கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஐந்து வருட திட்டம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் மாவட்ட விவசாயதிணைக்களமும்இணைந்து சின்ன வெங்காய செய்கையின் அறுடை விழாவை களுவாஞ்சிக்குடியில் நடத்தியது. இந்தநிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனையின் கீழ் இறக்குமதிக்காக செலவழிக்கும் பணத்தை மீதப்படுத்தி அதன் மூலம் மக்களின் பொருளாதாரத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டத்தின் அடிப்படையிலேயே இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.



அதற்கமைவாக நிறுத்தப்படும் இறக்குமதிக்குப் பதிலீடாக மாவட்டங்கள் தோறும் அடையாளம் காணப்பட்ட பயிர்களைப் பயிரிடும் பணிகளின் கீழ் களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் முதன்முறையாக இந்த சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 22 கண்டத்தில் 180 கிலோ விதைகொண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட சின்ன வெங்காயச் செய்கையானது சுமார் 2000 கிலோ அறுவடையை தந்துள்ளது என்று மாவட்ட விவசாய திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஹரிகரன் தெரிவித்தார்.(ச-31)

## 'மரக்காலையாக' மாறியுள்ள ஏறாவூர் பொலிஸ் நிலையம்

மட்டக்களப்பு,ஒக்.22

ஏறாவூர் பொலிஸ் நிலையம் கடந்த ஒரு வருட காலத்தில் ஒரு மரக்காலையாக மாறியிருக்கின்றது. சுமார் இருபது லட்சம் ரூபா பெறுமதியான மரங்கள், மரக் கடத்தல் காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்று ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காஞ்சன கொடகும்புர தெரிவித்தார்.

ஏறாவூர் நகர வர்த்தகர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாறு அழிக்கப்படும் மரங்கள் இந்த ஊரில் மழை பெய்விக்கும் உயிர்நாடிகள். அவை எமது இளம் சந்ததியைப் பாதுகாக்கும் இயற்கை வளங்கள்.

இந்த இயற்கை வளங்களை சில வியாபாரிகள் தமது சுயலாபத்துக்கும் சொகுசு வாழ்க்கைக்காகவும் அழித்து நாசம்பண்ணுகிறார்கள். இவற்றை கண்ணை மூடிப் பார்த்துக் கொண்டு இருந்துவிட முடியாது என்று அவர் கூறினார்.

சூழலை மாசுபடுத்தி இயற்கை வளங்களை நாசம் செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளோம். கொள்ளைச் சம்பவங்களை மட்டும் தடுத்து நிறுத்துவது மட்டும் பொலிஸாரின் கடமையல்ல.

மக்களின் உடல் நலம், ஆரோக்கியம், விபத்து, நீதி எல்லாவற்றையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

சட்டத்தை மீறி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும், இயற்கை வளங்களுக்கும் குந்தகம் விளைவிக்கும் நபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும்தெரிவித்தார். (ச)

## கல்முனை மாநகரசபையின் பட்ஜெட் ஆலோசனை

கல்முனை,ஒக்.22

கல்முனை மாநகரசபையின் 2013 இக்கான வரவு - செலவுத்திட்டம் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வருமான அதிகரிப்பு குறித்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் சனிக்கிழமை சாய்ந்தமருது பரடைஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீரா சாஹிப் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் கிழக்கு மாகாணசபையின் திறைசேரிப் பணிப்பாளர் ஜனாப் ஐ.எல்.எம்.அக்ரம், ஆசிய மன்ற பிரதிநிதிகள், கல்முனை மாநகர சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச)



மட்டக்களப்பு, கிரான்குளம் விநாயகர் வித்தியாலயத்தில் 5 அடி உயரத்தில் சரஸ்வதி சிலை நிறுவப்பட்டது. (31)

## ஒலுவிலில் பொறியியல்பீடம் பாராட்டுகிறது பல்கலை நிர்வாகம்

எருவில்,ஒக்.22

தென்கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு பொறியியல் துறையைப் பெற்றுக்கொள்வதற்கு உதவிய அனைவருக்கும் தென்கிழக்கு பல்கலைக் கழக சமூகம் நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் மிக நீண்ட நாள் தேவைகளுள் ஒன்றாகக் காணப்பட்ட பொறியியல் பீடத்தை அமைப்பதற்காக பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருந்தபோதிலும் அந்த முயற்சி தற்போது வெற்றியளித்துள்ளது என்று தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். எம். எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

**தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் ஒலுவில் வளாகத்தில் பொறியியல்பீடம் அமைப்பதற்கான அங்கீகாரத்தை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கியுள்ளது.**

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் ஒலுவில் வளாகத்தில் பொறியியல்பீடம் அமைப்பதற்கான அங்கீகாரத்தை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கியுள்ளது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் பொறியியல் துறையில் கல்வி கற்பதற்கு கொழும்பு மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களுக்கே இதுவரை தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வருடம் முதல் கிழக்கு மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மாணவர்கள் இந்தப் பல்கலைக்கழகத்திலும் பொறியியல்துறையில் கல்விபயிலும் சந்தர்ப்பத்தைப் முதன்முறையாக பெறவுள்ளனர் என்று அவர் கூறினார்.

இந்த வருடம் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பொறியியல்துறை மாணவர்களை முதல் தொகுதியாகக் கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ள பொறியியல்பீடம் ஒலுவில் வளாகத்தில் செயற்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச-31)

## தேசத்துக்கு மகுடம் நடமாடும் சேவை

எருவில்,ஒக்.22

தேசத்துக்கு மகுடம் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பொத்துவில் பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பொத்துவில் அல் இர்பான் மகளிர் கல்லூரியில் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.எம். தௌபீக் தலைமையில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையில் ஜனாதிபதி செயலகம் உட்பட மத்திய மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள், அதிகாரசபைகள் உட்பட 40 இக்கு மேற்பட்ட கரும பீடங்கள் செயற்பட்டன.

இந்த நடமாடும் சேவையில் 292 காணி அனுமதிப் பத்திரங்கள், 1000 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள், 2 சக்கர நாற்காலிகள், 4 குடும்பங்களுக்கு சமுர்த்தி வீட்டு லொத்தர் என்பன வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

## கரையை நாடிவரும் மீன்கள் காலநிலை மாற்றமே காரணம்

### கிழக்குப் பல்கலை விலங்கியல்துறை தலைவர் வினோபாவா கூறுகிறார்

எருவில்,ஒக்.22

மட்டக்களப்பு, காத்தான்குடி மற்றும் அதனை அண்மித்த கடலில் மீன்கள் கூட்டம் கூட்டமாக கரையை நோக்கி வந்த சம்பவம் காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட நிகழ்வு என்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விலங்கியல்துறைத் தலைவர் பெ.வினோபாவா தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடலில் குளிர்ரான பகுதியில் நடமாடும் குறித்த மீன் இனங்கள் காலநிலை மாற்றம் காரணமாகவே கரையை நோக்கி நகர்ந்திருக்கலாம். அதாவது கரையோரத்தை நோக்கிய பகுதிகளில் வெப்பநிலை குறைந்த நீரோட்டங்கள் வந்ததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இது காலநிலை மாற்றத்தினால் நிகழும் சில மாற்றங்கள்.

இந்த மாற்றங்களை அறிந்துகொள்ள சமுத்திரவியல் பாடநெறிகள் எமது நாட்டில் இல்லை. இதனால் சமுத்திரத்தில் நடைபெறுகின்ற மாற்றங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியாதுள்ளது. சமுத்திரவியல் பாடநெறிகள் இருக்குமானால் சமுத்திரத்தில் இப்படியான மாற்றங்கள் நிகழும்போது மழை பெய்யுமா? வெள்ள இடர் ஏற்படுமா? என்பதை முன்கூட்டியே அறியக்கூடியதாக இருக்கும்.

மீன்கள் கூட்டம் கூட்டமாக கரையை நோக்கி வருவது என்பது புதிய விடயம் அல்ல. சில காலப்பகுதியில் குறிப்பாக மழை வீழ்ச்சி கூடிய பருவப் பெயர்ச்சி காலங்களில் கிழக்கு கரையோரத்தில் பல பகுதிகளில் நடைபெறுவது வழமை. ஆனால் இந்த முறை கூடுதலாக மீன்கள் வந்திருக்கலாம்.- என்றார்.(ச-31)

## பெரும்போகத்துக்கு மானியமாக உரம் விநியோகம்

மட்டக்களப்பு,ஒக்.22

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரை மற்றும் கிரான், வாழைச்சேனை, செங்கலடி, வாகரை ஆகிய பிரதேசங்களிலுள்ள சுமார் 150 ஆயிரம் ஏக்கரில் பெரும்போக விவசாயச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரும்போக விவசாயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்காக அரசினால் மானியமாக விநியோகிக்கப்படும் உரம் கடந்த வியாழக்கிழமை விநியோகிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து கமநலசேவைகள் நிலையம் ஊடாக சுமார் 420,000 மூடைகள் உரம் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் நிலைய பணிப்பாளர் ருசாந்தன் தெரிவித்தார். (ச)

## கண்டி மாவட்டத்தில் மண்சரிவு அபாயம்

### ஆராய்ச்சி நிலையம் எச்சரிக்கை

கண்டி,ஒக்.22

மலையகத்தில் ஏற்பட்டுள்ள கடும் மழை காரணமாக கண்டி மாவட்டத்தின் பல பிரதேச செயலகப் பிரிவுகளில் மண் சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் கங்கஇஹல கோரலய, உடுநுவர யட்டிநுவர, ஹாரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய, அக்குறணை, கலகெதர, ஹத்தரலியத்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் மண் சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன என்று தேசியக் கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் நிறைவேற்று அதிகாரி ஆர்.எம்.எஸ்.பண்டார தெரிவித்தார்.

இந்தப் பிரதேசங்களில் சந்தேகத்துக்குரிய அபாயகரமான இடங்களில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீங்கள் தொடர்பில்லாத பணி ஒன்றில் ஈடுபட நேரலாம். இதனால், அன்றாடச் செயல்களில் தாமதம் தொழில், வியாபாரத்தில் இருக்கும் அனுகூலத்தன்மை பாதுகாப்பது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும். நம்பகக்குறைவான ஒருவருக்கு உதவுவதால், எதிர்காலத்தில் சிரமம் ஏற்படலாம். கவனம் தேவை.

**இடபம்:** சில பணிகளை அவசியம் நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டாயம் உருவாகும். இதனால், பதற்றம் ஏற்படலாம். பொறுமை அவசியம். கடின உழைப்பால் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். குடும்பத்தேவை ஓரளவு பூர்த்தியாகும்.

**மிதுனம்:** வசீகரமாகப் பேசி புதியவர்களின் நட்பைப் பெறுவீர்கள். தாமதமான பணி ஒன்று எளிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு திறமை மிகு செயல்களால் பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**கடகம்:** எந்தச் செயலிலும் நிதானத்தைப் பின்பற்ற வேண்டும். நண்பர்களிடம் அதிக உரிமை பாராட்டுவதால் மாறுபட்ட சூழ்நிலை உருவாகும். சகதொழில் சார்ந்தவருடன் தேவையற்ற பேச்சைத் தவிர்க்கவும். குறைந்தளவில் பணவரவு இருக்கும்.

**சிங்கம்:** உங்கள் நண்பர்களில் சிலர் போட்டி, பந்தயத்தில் கலந்துகொள்ள ஊக்கப்படுத்துவர். அதைத்தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரம் வளர அனுபவசாலியின் ஆலோசனை பெற்று செயற்படுவீர்கள். பணவரவில் இருந்த தாமதநிலை மாறும். பணியாளர்கள் குளறுபடியான செயலால் நிர்வாகத்தின் கண்டிப்பைப் பெறுவர்.

**கன்னி:** எதிர்வரும் பணிகளுக்காக முன்னேற்பாடு செய்வது அவசியம். நண்பருக்கு கொடுத்தவாக்குறுதி தாமதமாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணவரவை விட செலவு கூடும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம்.

**நாளை**

ஐப்பசி -07 செவ்வாய்க்கிழமை 23.10.2012
திதி: நவமி சித்தம் மு.இ.11.59 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.இ 10.08 வரை
சுபநேரம்: 10.32-12.02 வரை
ராகுகாலம்: 03.02- 04.32 வரை
சரஸ்வதி பூஜை , மஹாநவமி விரதம்

**துலாம்:** உங்கள் மனதில் புதிய நம்பிக்கை ஏற்படும். பணிகளை உற்சாகத்துடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். தாராளமான பணவரவு கிடைக்கும். முக்கிய நண்பருடன் விருந்தில் கலந்துகொள்வீர்கள்.

**விருச்சிகம்:** உங்கள் செயலில் சில குளறுபடி ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை சிரமங்களைச் சரி செய்ய உதவும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி பெற மென்மையான அணுகுமுறை அவசியம். அளவான பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** உங்களின் ஒவ்வொரு செயலையும் திறம்பட நிறைவேற்றுவீர்கள். நண்பர், உறவினர்களின் பாராட்டுக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். அரசிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** உங்கள் பேச்சில் எதார்த்த தன்மை நிறைந்திருக்கும். மாற்றுக்கருத்து உள்ளவர்களிடம் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவதால் எதிர்பார்த்த பலன் பெறலாம். அளவான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** நீண்டகாலம் திட்டமிட்ட செயல் ஒன்றை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். அறிமுகம் இல்லாதவர் வழியாக சில உதவிகள் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரித மிதமான வளர்ச்சி ஏற்படும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு.

**மீனம்:** கடந்தகாலத்தில் தொந்தரவாக இருந்த சிரமம் ஒன்று விலகும். புதிய நண்பரின் அறிமுகம் மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரம் வளர தேவையான மாற்றம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை சிறந்து உபரி பணவருமானம் தரும். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பு, சன்மானம் கிடைக்கப் பெறுவர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 2 | | 5 | 4 | | | 1 |
| | 4 | | | 6 | | | | |
| 7 | | 6 | 1 | | | 8 | | 3 |
| 8 | 7 | | | | | 5 | | |
| 6 | 9 | | 5 | | 7 | | 8 | 2 |
| | | 5 | | | | | 3 | 6 |
| 9 | | 8 | | | 5 | 4 | | 7 |
| | | | | 8 | | | 5 | |
| 5 | | | 2 | 7 | | 6 | | 8 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 9 | 1 | 8 | 2 | 5 | 3 | 4 |
| 8 | 3 | 5 | 6 | 4 | 7 | 1 | 9 | 2 |
| 4 | 2 | 1 | 5 | 9 | 3 | 8 | 6 | 7 |
| 9 | 4 | 6 | 8 | 3 | 5 | 7 | 2 | 1 |
| 2 | 8 | 3 | 7 | 6 | 1 | 9 | 4 | 5 |
| 1 | 5 | 7 | 4 | 2 | 9 | 6 | 8 | 3 |
| 6 | 1 | 8 | 2 | 5 | 4 | 3 | 7 | 9 |
| 5 | 9 | 2 | 3 | 7 | 8 | 4 | 1 | 6 |
| 3 | 7 | 4 | 9 | 1 | 6 | 2 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 31 ஆம் நாள் நினைவுகளும் நன்றி நவிலலும்

உதிப்பு
18.05.1931



உதிர்வு
22.09.2012

திருமதி
## கமலாதேவி கணேசநாதன்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காக திகழ்ந்து கடந்த (22.09.2012) அன்று எம்மை ஆழ்ந்த துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எமது பாசமிகு அன்னை திருமதி கமலாதேவி கணேசநாதன் அவர்களின் பிரிவுத் துயரில் பங்குகொண்டு நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், பல்வேறு வகையில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கு எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (22.10.2012) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


கரணவாய் வடக்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(சி/2806)) (45.6.7)

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நம

# அந்தியேட்டி வீட்டுக்கிரியையும் நன்றி நவிலலும்



தாயின் மடியில்
29.04.1946

ஆண்டவன் அடியில்
08.09.2012

## அமரர் இராசையா கெங்காதரன்

(இளைப்பாறிய பொறியியலாளர், சீமெந்து கூட்டுத்தாபனம்)

கடந்த (08.09.2012) சனிக்கிழமை அன்று இறைபதமடைந்த செய்தி கேட்ட உடன் பலவழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், வெளிநாடு, உள்நாட்டில் தொலைபேசி மூலம் துயரில் பங்குகொண்டவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.10.2012) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண கிரியைகள் நாளை (23.10.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் குடும்சகிதம் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி,
077 6693 644

மனோசாந்தா கெங்காதரன் (மனைவி),
கருணாகரன் துஷிக்கா (மகள்-மருமகன்),
டக்ஷ்னன் அயந்தினி (மகன்-மருமகள்),

(23655)(45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மாணவர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அலரி மாளிகைக்கு அழைத்து அவர்களுடன் உரையாடி பரிசில்களும் வழங்கினார். அருகில் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பரீட்சை ஆணையாளர் புஷ்பகுமார ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# 400 விரிவுரையாளர்கள் வெளிநாடுகளில் சுகபோகம்

**விரைவில் நடவடிக்கை என்கிறது உயர்கல்வி அமைச்சு**

கொழும்பு,ஒக்.22

இலங்கையின் சுமார் 400 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெளிநாடுகளில் குடியமர்ந்துள்ளனர். இவ்வாறு வெளிநாடு சென்றுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று உயர்கல்வி அமைச்சு எச்சரித்துள்ளது.

உள்நாட்டில் செய்து கொண்ட கல்வியியல் தொடர்பான உடன்படிக்கைகளையும் அதற்கான அரச செலவுகளையும் உதாசீனம் செய்து அவர்கள் வெளிநாடுகளில் குடியமர்ந்துள்ளனர் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவர்கள் மேலதிக கற்கைகளுக்காக வெளிநாடு சென்றநிலையிலேயே அங்கு குடியமர்ந்துள்ளனர்.

இதன் காரணமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு 2 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# சிறுநீரக நோய் பரவுவதைக் கண்டறிய அமைச்சர்கள் அடங்கிய குழு நியமனம்

கொழும்பு,ஒக்.22

சிறுநீரக நோய் பரவி வரும் நிலையில் இரசாயனப் பசளை மற்றும் விவசாய இரசாயனப் பசளை பயன்பாடுகளால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்ந்து அதனை தீர்க்க ஜனாதிபதி தலைமையில் அமைச்சர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மட்டத்தில் திட்டமொன்றை முன்னெடுத்து சிறுநீரகநோயை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அநுராதபுரம், பொலநறுவை, அம்பாறை, பதுளை, ஹம்பாந்தோட்டை, குருநாகல் ஆகிய பகுதிகளில் சிறுநீரக நோயால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோய் குறித்து பல்வேறு மட்டங்களில் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. உலக சுகாதார ஸ்தாபனமும் ஆய்வு நடத்தியுள்ளது. நீரினால் இந்தப் பிரச்சினை ஏற்படவில்லை என்று கூறியுள்ள உலக சுகாதார ஸ்தாபனம் சில பரிந்துரைகளையும் வழங்கியுள்ளது.அதற்கமைய திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

இரசாயன உரம், விவசாய இரசாயன உரம் என்பவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் உணவுப் பொருள்களால் சிறுநீரக நோய் ஏற்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே பசளை பயன்பாட்டை குறைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.- என்றார். (ச)

# தொழில்நுட்ப அறிவில் இலங்கை பின்னடைவு

**சர்வதேச பொருளாதாரத்துக்கு ஈடுகொடுக்க முடியாத நிலை நீடிக்கிறது என்கிறது ஐ.நா.**

கொழும்பு,ஒக்.22

சர்வதேச பொருளாதாரத்தை வெற்றி கொள்ளக் கூடிய அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு விடயத்தில் இலங்கை பின்தங்கியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

2000 ஆம் ஆண்டில் இது தொடர்பான சுட்டியில் இலங்கை 87 ஆவது இடத்தை வகித்தது.

2012 ஆம் ஆண்டு இலங்கை இந்தச் சுட்டியில் 101 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்தச் சுட்டியில் 145 நாடுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை கல்வி விடயங்களில் இலங்கையால் முன்னேற்றம் காணமுடிந்துள்ளது. எனினும் தகவல் மற்றும் பரிமாற்ற தொழில்நுட்ப விடயங்களிலேயே இலங்கை பின்தங்கியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாத்திரம் இன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தொழில்நுட்ப அறிவு குறைந்துள்ளது.

எனவே உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகிவற்றிலிருந்து வெளியேறும் மாணவர்கள் சர்வதேச பொருளாதாரத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் தொழில்நுட்ப அறிவைக் கொண்டிருக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கோரியுள்ளது.

இந்தநிலையில் குறித்த கல்வி நிலையங்களில் தொழில்நுட்பங்களுடன் கூடிய வகையில் கற்பித்தல்கள் சீர்படுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது. (ச)

# போதை தலைக்கேறி கைகலப்பில் ஈடுபட்ட 6 பேர் கைது

நீர்கொழும்பு கடற்கரைப் பூங்காவில் மதுபோதையில் கைகலப்பில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நீர்கொழும்பு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூவர் உட்பட 6 பேர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று ஏத்துக்கால சுற்றுலாத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபோதையிலிருந்த இந்த மூன்று சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றொரு தரப்பினருடன் கை கலப்பில் ஈடுபட்டனர். இவர்களில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் கூறினர். (ச)

**கூடங்குளம் அணுத் திட்டம் குறித்த**

# இலங்கையின் கோரிக்கை இந்தியாவால் நிராகரிப்பு

கொழும்பு,ஒக்.22

அணுத் திட்டம் குறித்த இலங்கையின் கோரிக்கையை இந்தியா நிராகரித்துள்ளது.

அணுப் பாதுகாப்புக் குழுவில் இலங்கையர்களையும் உள்வாங்கிக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இந்தியா அறிவித்துள்ளது.

கூடங்குளம் அணு மின் நிலையத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பிலான பாதுகாப்பு குழுவில் இலங்கையர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டிருந்தது.

எனினும் ஆபத்துக்களின் போது துரித கதியில் எச்சரிக்கைகள் விடுக்கப்படும் என்று இந்தியா உறுதியளித்துள்ளது.

இதேவேளை, அணு மின் நிலையம் குறித்து உன்னிப்பாக கண்காணிக்கப்படும் என்று இலங்கை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்த புதிய சட்டங்கள்

**சிங்கள ஊடகம் தகவல்**

கொழும்பு,ஒக்.22

இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்த புதிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு சக்திகளுக்காக சில அரச சார்பற்ற நிறுவனங்கள் உளவுப் பணியில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாட்டின் இரகசியங்களை வெளிநாட்டு சக்திகளுக்கு வழங்கி அதன் மூலம் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதி பெற்றுக் கொள்கின்றன.

சிவில் நலன்புரி நடவடிக்கைகள் என்ற போர்வையில் போர் இடம்பெற்ற காலத்தில் செய்மதி தொலைபேசிகள் மூலம் 275 அரச சார்பற்ற ஊழியர்கள் உளவுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்த அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஒரு மேற்குலக நாடு 366 டொலர்களை வழங்கியுள்ளது.

புதிய சட்டங்கள் நாடாளுமன்றில் நடைமுறைப்படுத்தப்பட்டால் அரச சார்பற்ற நிறுவனங்களை கண்காணிக்கக் கூடிய அதிகாரம் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களை கண்காணிக்கும் வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (ச)

# புதுப்பொலிவு பெற்ற குதிரைப் பந்தய பார்வையாளர் கூடம்

**125 மில்லியன் ரூபா செலவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட இந்தக் கட்டட நிர்மாணத்தில் சுமார் 300 படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.**

கொழும்பு,ஒக்.22

கொழும்பு, கறுவாத்தோட்டத்தில் அமைக்கப்பட்ட 120 வருடங்கள் பழைமை வாய்ந்த குதிரைப் பந்தயத் திடல் பார்வையாளர்கூடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பு நகரை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ், இராணுவ பொறியியல் துறையினரால் இந்தப் பழைய கட்டடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

125 மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இந்தக் கட்டட நிர்மாணத்தில் சுமார் 300 படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

இலங்கை புற்றரை பராமரிப்பு கழகத்தின் கீழிருந்த கறுவாத்தோட்ட குதிரைப் பந்தய தடாகம் தற்பொழுது பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அனுமதிப்பத்திரமின்றி 185 பஸ்கள் சேவையில்

**தனியார் பஸ் சங்க செயலாளர் தெரிவிப்பு**

**பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், அரசில்வாதிகள் ஆகியோருக்குச் சொந்தமான பஸ்களே இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.**

கொழும்பு,ஒக்.22

வீதி அனுமதிப்பத்திரமற்ற 185 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், அரசில்வாதிகள் ஆகியோருக்குச் சொந்தமான பஸ்களே இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று அனைத்து மாகாண தனியார் பஸ் சங்கத்தின் செயலாளர் நிஹால் தேவப்பிரிய தெரிவித்தார்.

தூரப் பகுதிகளுக்கான போக்குவரத்துச் சேவையிலேயே இந்தப் பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்தவிடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சுக்கும் அரசுக்கும் ஏற்கனவே மூன்று தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, பொத்துவில், மூதூர் மற்றும் மன்னார் போன்ற நகரங்களுக்கான போக்குவரத்துச் சேவையில் இந்தப் பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அனுமதிப் பத்திரமின்றி சில பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன என்று தேசிய போக்குவரத்துச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் [illegible] குணவர்தன [illegible] குறிப்பிடத்தக்கது. (ச)

# கலைப்பிரிவு மாணவர்களுக்கு தாதியர் பட்டம் பெற வாய்ப்பு

**உயர்கல்வி அமைச்சர் அறிவிப்பு**

கொழும்பு,ஒக்.22

உயர்தர கலைப்பிரிவில் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கு தாதியர் பட்டம் பெறுவதற்கும் வாய்ப்பு வழங்கப்படும் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

[illegible] நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் சுமார் இரண்டு லட்சம் தாதியருக்கு வெற்றிடம் நிலவுகின்றது.

இதனால் வெளிவாரி பட்டப் படிப்புக்கான அனுமதியை மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பாலசிங்கம் நடனகுமார் (சிவா)**
அட்டமி திதி: 22.10.2012

அன்னையின் மடியில் சரண்
12.02.1962

ஈழத்துச் சிதம்பர நடராஜரின்
திருப்பாத கமலங்களில் சரண்
10.10.2005

நீ ஓடிமறைந்து ஏழாண்டுகள் ஆனதுவோ
ரிவீக்கு முன்னாலே உன்னை மறந்து உவகையுடன் இருப்பாய்
அந்தப் பொன் முகத்துப் புன் சிரிப்பு போனவழி தெரியவில்லை
நேற்றுப்போல் இருக்கின்றது நீ சிரித்த புன்சிரிப்பு
ஏழாண்டுகள் எப்படித்தான் ஓடியதோ
அப்பா மறைந்து மாதங்கள் ஆச்சு
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும் உன் நினைவு......
நீளும் நினைவுத் தடத்தில்
நெடுங்காலம்
அப்பா...... சிவா உங்கள் அழியா நினைவுகள் எப்போதும் இறுகிநிற்கின்றன
நவராத்திரி நன்னாளில்
நம் நினைவு உங்களுடன்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

'துவாரகா'
கதிர்காமசுவாமி கோயிலடி,
காரைநகர். (2462!) (45.6.7)

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் சின்னத்தம்பி மகேந்திரன்

கடந்த (22.09.2012) சனிக்கிழமை அமரத்துவம் அடைந்த சின்னத்தம்பி மகேந்திரன் அவர்களின் வாழ்வுக்கும் பணிக்கும் நன்றி செலுத்தும் முகமாக நாளை மறுதினம் (24.10.2012) புதன்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் அன்னாரின் செபவழிபாட்டிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் மருத்துவ உதவி வழங்கிய வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியவர்கள், சகல வழிகளிலும் முன்வந்து உதவிய நல்ல உள்ளங்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர், தொலைபேசி மற்றும் இணையத்தளம் ஊடாக ஆறுதல் தெரிவித்தோர், சகல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இந்நாளில் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

148, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

(சி/4258) (45.6.7)

# மரண அறிவித்தல்

## ஜோர்ஜ் ஜோசவ் குணநாதன்

(Retired Divisional Pharmacist -Colombo South, Old Boy, St.Patrics College)



டேவிற் வீதியைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோர்ஜ் ஜோசவ் குணநாதன் கடந்த (19.10.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணநாயகம் -அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான யேசுசகாயம்-ஆசையன்னம் தம்பதியரின் மருமகனும், எலிசபெத் பத்மா மணியின் (ஓய்வு பெற்ற மருந்தாளர், யாழ் போதனா வைத்திய சாலை) அன்புக் கணவரும், Dr. ஜோசவ் பிரதீபன் (யாழ்.போதனா வைத்தியசாலை- ஆஸ்திரேலியா), அன்றூ சஜீவன் (UK), பிரியந்தினி(Commercial Bank- Kilinochchi)ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெனற் அமலினியின் (ஆஸ்திரேலியா) பாசமிகு மாமனாரும், மரிய திவ்வியனின் (ஆஸ்திரேலியா) அன்புப் பேரனும், காலஞ்சென்ற குணமணி அடைக்கலம் மற்றும் நீற்றா ஜெயமணி, கிருபைநாதன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.10.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் சென். பீற்றர்ஸ் தேவலாயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் சென். பீற்றர்ஸ் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பெத்தனி'
நவாலி தெற்கு,மானிப்பாய்.
021 225 5915

(24614)(45-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி / கோணாவில் அ.த.க. பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றி, இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கு தரமுயர்த்தப்பட்ட
திருமதி **நாகேஸ்வரி குகதாசன்**
அவர்களையும் 2012 ஆம் ஆண்டில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான



அழகேதீஸ்வரன்
வேணுகாயினி (170)
மா.நி - 08







சந்திரசேகரன்
அபிசா (148)
மா.நி - 89







சேகரன்
டினோஜா (148)
மா.நி - 89

ஆகியோரையும் வாழ்த்துகிறோம்.

கிளி/ கோணாவில் அ.த.க.பா. ஆசிரியர் நலன்புரிசங்கம்.

# கேள்வி கோரல்கள்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாலங்கள், புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்

## பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

01. பின்வரும் புனர்நிர்மாண வேலைகளுக்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர், கேள்விச்சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக்கொள்வார்.

| வேலை விவரம் | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் ICTAD |
|---|---|---|
| 1. கொங்கிறீற் கால்வாய் அமைத்தல் - நல்லூர் - ஒட்டுமடம் வீதி, 0.30 - 0.40 கி.மீ | 15,000/= | C8 |
| 2. கொங்கிறீற் கால்வாய் அமைத்தல் - வழுக்கையாறு புங்குடுதீவு - குறிகாட்டுவான் வீதி 10.3 - 10.4 கி.மீ | 15,000/= | C8 |
| 3. 27/2 இலக்க மதகு நிர்மாணம் யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை வீதி | 15,000/= | C8 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 05.11.2012 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும் கேள்விப்பத்திரங்கள் 05.11.2012 அன்று மு.ப. 10.30 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 26.10.2012 தொடக்கம் 02.11.2012 பிற்பகல் 2 மணி வரை மீள் அளிக்க முடியாத வைப்புத்தொகையான 750/= +பெறுமதி சேர் வரி 12% செலுத்திப் பெற வேண்டும்.

2. தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

(அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி, நிர்மாணித்தல்துறையில் மேற்குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.
04. முன் கேள்வி கோரல் கூட்டம் 31.10.2012 அன்று மு.ப. 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.
05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும் (04.03.2013)
06. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்புப் பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (05.11.2012 மு.ப. 10.00) முன் சேர்ப்பிக்கப்படவேண்டும்.
08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

09. மேலதிக விவரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

**அலுவலகம்**

பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.

**தொலைபேசி இலக்கம்.**
021 2222968

மாகாணப்பணிப்பாளர் (வ)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4237)(6.7.8)

பிரதம பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## சாவகச்சேரி நகர சபையில் மரநடுகை தினம் அனுஷ்டிப்பு

தென்மராட்சி, ஒக்.22

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகர சபையின் மரம் நடுகை தினம் கடந்த வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

நகர சபை வளாகம், மீசாலை, நுணாவில் பொது நூலகங்கள் போன்ற இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டன. நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு அலுவலர் விஜிதா கலந்துகொண்டார்.

நிகழ்வில் சபை உறுப்பினர்கள், செயலாளர் சு. புத்திரசிகாமணி, நூலக அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், வாசகர் வட்ட உறுப்பினர்கள் உட்படபலர் கலந்துகொண்டனர். (3)

## அபிவிருத்திக்கு நிதி உதவி



கைதடி,ஒக்.22

லண்டன் கைதடி உறவுகளின் நிதி உதவியுடன், கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் கைதடி மற்றும் நாவற்குழி பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான நிதி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஒவ்வொரு சனசமூக நிலையத்துக்கும், 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. கடந்த வாரம் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழக கேட்போர் கூடத்தில் தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் எட்டு சனசமூக நிலையங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. (ம-288)

## தமிழியல் விருதுக்கு நூல்களை அனுப்பலாம்

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டு தோறும் ஈழத்திலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்து தமிழ்ப் படைப்பாளிகளை ஊக்குவித்து தமிழியல் விருது வழங்கி மதிப்பளித்து வருகின்றது.

அந்த வகையில் இந்த வருடமும் இலக்கிய மேம்பாட்டுக்கு உழைத்த மூத்த படைப்பாளி ஒ.கே. பாக்கியநாதனுக்கு உயர் தமிழியல் விருதும், தமிழிலக்கிய மேம்பாட்டுக்கு உழைத்த பத்து மூத்த படைப்பாளிகள், ஊடகவியலாளர்களுக்கு தலா ரூபா 15000 பணத்துடன் வவுனியா-ஸ்ரீஇராமகிருஷ்ணா- கமலநாயகி தமிழியல் விருதுகளும் வழங்கப்படவுள்ளது. அத்துடன்2011 ஆம்ஆண்டு வெளிவந்த சிறந்த 16 நூல்களுக்கு தலா 10000 ரூபா பணத்துடன் சிறந்த நூல்களுக்கான தமிழியல் விருதும், தலா 5000 ரூபா பணப்பரிசுடன் கூடிய சிறந்த ஓவியருக்கான தமிழியல் விருதும் வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளது.

எனவே இந்தத் தேர்வுக்கான சிறந்த நாவல், சிறுகதை, கவிதை, குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம், விடலை இலக்கியம், நாடகம், அறிவியல், ஆய்வியல், வரலாறு, பழந்தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்பு, இனமத நல்லுறவு இலக்கியம், தொழில்நுட்பம் எனப் பல்துறை சார்ந்த நூல்களை தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம்.

நூல்கள் 2011ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதிக்குள் வெளிவந்தவையாக இருக்கவேண்டும்.

நூல்களை அனுப்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விவரத்துடன் நூலின் 4 பிரதிகளையும், 30.11.2012 இற்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். டாக்டர். ஒ.கே. குணநாதன், மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல 64, கதிர்காமவீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (3)

## தென்மராட்சி வலய ஆரம்பப் பிரிவு மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.22

தென்மராட்சி கல்வி வலய ஆரம்ப பிரிவுக்கான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

இதில் கலந்துகொள்ளும் போட்டியாளர்கள் போட்டிக்குரிய உடை, பிறப்புச் சான்றிதழ், அதிபர் உறுதிப்படுத்திய புகைப்படம் ஆகியவற்றுடன் வருகை தருமாறும், போட்டியில் பங்குபற்றும் ஆண்களுக்கு கறுப்பு நீல நிற இலக்கமும், பெண்களுக்கு சிவப்பு நிற இலக்கமும் அந்தந்தப் பாடசாலைகளே தயாரிக்க வேண்டுமெனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கேட்டுள்ளார். (3-9)

## ஆளுநர் விருது பெறும் கலைஞர்கள்

கலைக்கும், தமிழுக்கும் அரும் பணியாற்றிய வடமாகாண கலைஞர்களுக்கு 2012 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருது வழங்கப்பட இருக்கின்றது. இந்த விருதை, அருளப்பு பேக்மன்-யாழ்ப்பாணம், சந்தியா அந்தோனி மிராண்டா- மன்னார்,மடொனிப்பஸ் தைரியநாதன்-வவுனியா, மயில்வாகனம் தவமணி- முல்லைத்தீவு, ம.ந.கடம்பேஸ்வரன்-யாழ்ப்பாணம், ம.பார்வதிநாதசிவம்-யாழ்ப்பாணம், வ.செல்லத்துரை- யாழ்ப்பாணம், க.கனகேஸ்வரன்-வவுனியா, செ.இராசா- யாழ்ப்பாணம், த.ஜெகந்நாதன்-கிளிநொச்சி, எம்.பதுகே குணதிலக- வவுனியா, எம்.ஏ.மொகமட் ஷரிப்- வவுனியா ஆகியோர் பெற்றுக்கொள்கின்றனர்.

இவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள தமிழ் இலக்கிய விழாவின் நிறைவில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## மகாதேவ சுவாமிகளின் குருபூசை தினம்

கந்தர்மடம் சிவகுருநாதகுருபீடம் வேதாந்த மடத்தில் மகாதேவ சுவாமிகளின் 70 ஆவது குருபூசை நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது.வேதாந்த மடத்தில் எட்டாவது குருபீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்யா சாகர சுவாமிகளின் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் ஜே.எஸ். ஆர் திருஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரியும் சுவாமி ஜாக்கிரத்சைதன்யரின் ஆன்மிக உரையும் இடம்பெறவுள்ளன. (3)

அமெரிக்கா
லொத்தர் வீசா – 2014
விண்ணப்பங்களை
இன்று முதல்
அனுப்பிக்கொள்ளலாம்
முடிவுத்திகதி :- 03.11.2012
Arrul Global Express
T.P :- 021 222 6113

THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆங்கிலத்தில் கதைக்க, இலக்கணம் பயில,
BY.ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி,
426,K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை.

## பெயர் மாற்றம்

மாசுவன், நீர்வேலி மேற்கு நீர்வேலி என்னும் முகவரியைச் சேர்ந்த நவரத்தினசாமி நடனதேவி ஆகிய நான் 22.10.2012 முதல் நவரத்தினசாமி நந்தினிதேவி என பெயர்மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

நவரத்தினசாமி நந்தினிதேவி

## நெஞ்சம் நெகிழ்ந்த நினைவஞ்சலிகள்

30 ஆம் ஆண்டு

தோற்றம் 28 - 03 - 1916



மறைவு 25 - 10 - 1982



10 ஆம் ஆண்டு

தோற்றம் 12 - 11 - 1928



மறைவு 28 - 08 - 2002

**அமரர் அப்புக்குட்டி சுப்பிரமணியம்**

(இளைப்பாறிய மேஸ்திரியார், அரியாலை)

திதி- பூர்வபக்க அட்டமி

என்னைப்பெற்ற அப்பா முப்பது ஆண்டுகள் எப்படித்தான் ஓடி மறைந்ததோ அப்பா உங்கள் அறிவால் வளர்ந்த என்னை பெரிய வேலை பார்க்கச் செய்தீர்கள் உங்களை எந்த ஜென்மத்திலும் மறக்க முடியாது அப்பா

**திருமதி நடனலட்சுமி சுப்பிரமணியம்**

(எட்டு வருட லண்டன் வாழ்க்கை)

திதி-ஆவணி சதுர்த்தி-

என்னைப்பெற்ற அம்மா உன்னை மறக்க முடியுமா உங்கள் இரத்தம் தானே என் உடம்பில் ஓடுகிறது பத்து ஆண்டுகள் ஓடினாலும் உங்களை எந்த ஜென்மத்திலும் மறக்க முடியுமா உங்கள் அறிவு புகட்டலாலே இன்றும் பத்து ஆண்டுகள் ஆகியும் வாழ்த்துகிறேன் அம்மா

அரியாலை கனகரத்தினம் வீதி,
மகேஸ்வரி,
லண்டன் வாழ்
லோகேஸ்வரி குணேந்திரன் குடும்பத்தினர்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள். [24622]

A.S. ரவீந்திரநாதன் (மகன்)
(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப சேவையாளர்,
மின்சார சபை யாழ்ப்பாணம்)
22/5, கச்சேரி, நல்லூர் வீதி,
பாரதிலேன், அரியாலை, யாழ்ப்பாணம்.

அரியாலை கனகரத்தினம் வீதி,
கிருஷ்னேஸ்வரி,
நோர்வே வாழ்
லோகேந்திரன் கேசவராணி குடும்பத்தினர்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி சசிகலா அருட்செல்வன் அவர்களின் அன்புச் சகோதரன்

**குணரட்ணம் குகன்**

அவர்கள் சிவபதம் அடைந்தமையையிட்டு எமது கண்ணீர்க் காணிக்கையைத் தெரிவிப்பதுடன் அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**

யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம், திருநெல்வேலி.

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 01 Kg க்கு UK 645 /= Germany 735/= France 775/=
மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. Denmark 775 /= Australia 825/= Holland 825 /=
கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.
ஆடி மாத அதிரடி விலைக்குறைப்பு
குறிப்பு : சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினை பெற்றுக்கொள்ளலாம்.
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ் T.P : 021 222 6113
Arrul Global Express
International Courier & Cargo Service

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஏக்கம்

க.சாரங்கா
பருத்தித்துறை

எத்தனை காலம் தான்
ஏங்குவது விடுதலைக்காக

சொந்தங்களைப் பார்க்க
துடிக்கும் கண்கள்
சோகத்தை சொல்ல துடிக்கும் மனசு
இன்னும் எத்தனை காலம் தான்
ஏங்குவது?


பாசமான என் கணவனைக் காண
அன்பான என் குழந்தையுடன் பேச
காத்திருக்கிறது மனசு
விடுதலை தருவாரா என்று
விழிகள் ஏங்குகிறது

வருடங்கள் சென்றுவிட்டன
ஆனால் வழி பிறக்கவில்லை
எம் விடுதலைக்கு
இன்னும் எத்தனை காலம் தான்
ஏங்குவது எம் விடுதலைக்கு...?

# மனைவி எதிர்பார்ப்பது என்ன?



★ அன்பாக , பிரியமாக இருக்க வேண்டும், மனது புண்படும்படி பேசக் கூடாது.
★ கோபப்படக்கூடாது, சாப்பாட்டில் குறை சொல்லக் கூடாது.
★ பலர் முன் திட்டக்கூடாது, எந்த இடத்திலும் மனைவியை விட்டுக் கொடுக்கக் கூடாது.
★ முக்கிய விழாக்களுக்குச் சேர்ந்து போக வேண்டும், மனைவியிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.
★ சொல்வதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும், மனைவியின் கருத்தை ஆதரிக்க வேண்டும், மதிக்க வேண்டும்.
★ வித்தியாசமாக ஏதாவது செய்தால் ரசிக்க வேண்டும். பாராட்ட வேண்டும்.
★ பணம் மட்டும் குறிக்கோள் அல்ல. குழந்தை, குடும்பம் இவற்றிற்கும் உரிய முக்கியத்துவம் தந்து நடந்து கொள்ள வேண்டும்.
★ வாரம் ஒரு முறையாவது. மனம் விட்டுப் பேச வேண்டும், மாதம் ஒரு முறையாவது வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும்.
★ ஆண்டுக்கு ஒரு முறையாவது, சுற்றுலா செல்ல வேண்டும்.
★ பிள்ளைகளின் படிப்பைப் பற்றி அக்கறையுடன் கேட்க வேண்டும்.
★ ஒளிவு மறைவு கூடாது, மனைவியை நம்ப வேண்டும்.
★ முக்கியமானவற்றை மனைவியிடம் கூற வேண்டும்.
★ மனைவியிடம் பிற பெண்களைப் பற்றிப் பாராட்டக் கூடாது.
★ அடுத்தவர் மனைவி அழகாக இருக்கிறாள் என்று எண்ணாமல் தனக்குக் கிடைத்ததை வைத்து சந்தோசப்பட வேண்டும்.
★ தனக்கு இருக்கும் கஷ்டம் தன் மனைவிக்கும் இருக்கும் என்று எண்ண வேண்டும்.
★ உடல் நலமில்லாத போது உடனிருந்து கவனிக்க வேண்டும்.
★ சின்னச் சின்னத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.
★ சிறு சிறு உதவிகள் செய்ய வேண்டும்.
★ குழந்தைகள் அசிங்கம் செய்து விட்டால் 'இது உன் குழந்தை' என்று ஒதுங்கக் கூடாது.
★ அம்மாவிடம் காட்டும் பாசத்தை, **மனைவியிடமும்** காட்ட வேண்டும். ஏனென்றால் **மனம் சலிக்காமல்** அம்மாவை விட, அக்கா,தங்கையை **விட அதிக**மாக கவனிக்க கூடியவள் மனைவி.
★ நேரத்திற்குச் சாப்பிட வேண்டும்.
★ சாப்பாடு வேண்டுமென்றால் முன் **கூட்டியே** சொல்ல வேண்டும்.
★ எங்கு சென்றாலும் மனைவியிடம் **சொல்லி** விட்டுச் சொல்ல வேண்டும்.
★ சொன்ன நேரத்திற்கு வர **வேண்டும்**.
★ எப்போதும் வீட்டு நினைப்பு **வேண்டும்**.
★ மனைவியின் பிறந்த நாள் தெரிய **வேண்டும்**.
★ மனைவிக்குப் பிடித்தவற்றைத் **தெரிந்து வைத்**திருக்க வேண்டும்.
★ பொய், சூது, மது, மாது போன்ற **தீய பழக்கங்**கள் கூடாது.
★ மனைவி வீட்டாரைக் குறை சொல்**லக் கூடாது**.
★ கைச் செலவுக்கு பணம் தர **வேண்டும்**.




# நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே.......

உங்களுக்குத் தெரியுமா? சுயஆளுமைத் தன்மையுள்ள குழந்தையால்தான் புதிய முயற்சிகளைத் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ள முடிகின்றது. சமுதாயத்தில் எல்லோருடனும் வலுவான நட்புடன் உறவாட முடிகின்றது. பள்ளி வாழ்வும், நண்பர்களும் உங்கள் குழந்தையின் சுய மதிப்பீட்டைக் குறைக்கலாம். மனம் தளராதீர்கள்! எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே; அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே!

உங்கள் குழந்தையின் சுயமதிப்பீட்டை அதிகரிக்கவும், மனம் தளரா தன்னம்பிக்கை கொள்ளவும் சில யோசனைகள்:

★முதலில், உங்கள் குழந்தையின் மீது முழு நம்பிக்கை கொள்ளுங்கள். உங்கள் குழந்தை விலை மதிப்பில்லாத, அன்பிற்குரிய உயிர் என்பதை நீங்கள் உணர்வதோடு அதை குழந்தையும் உணருமாறு நடந்து கொள்ளுங்கள்.

★உங்கள் குழந்தையின் திறமை மற்றும் சாதனைகளைப் பற்றி, அது எவ்வளவு சிறிய செயலாக இருந்தாலும், உடனுக்குடன் பாராட்டி கருத்துக்களைக் கூறுங்கள். அது சற்று கடினமான செயலாக இருந்தாலும் நீ நல்ல முறையில் முயற்சித்தாய் என்று பாராட்டுவது குழந்தையின் முகத்தையும், மனதையும் ஒருங்கு சேர மலர்த்தும்.

★குழந்தைகளின் சின்னச் சின்ன தவறுகள் குற்றங்களல்ல அவை புரிந்து வளர்வதற்கான படிப்பினைகள் என்பதை அவர்களுக்கு உணர வையுங்கள்.

★குழந்தைகள் பேசும்போது மிகுந்த உன்னிப்பாக கவனிக்கும் மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் கவனிப்பதற்கு அடையாளமாக உடனுக்குடன் கலந்துரையாடி குழந்தைகள் தொடர்ந்து பேச உற்சாகமளியுங்கள். உங்கள் குழந்தையின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ஆமோதித்து அவற்றை வார்த்தைகளாக வெளியிட உதவுங்கள்.

★விமர்சியுங்கள் - குழந்தைகளை அல்ல குழந்தையின் பழக்க வழக்கங்களை! இதைச் செய்யும்போது மிக கவனமாக கத்தி மீது நடப்பதுபோல செய்ய வேண்டும். அளவிற்கு அதிகமான விமர்சனம் குழந்தையைக் காயப்படுத்தும். ஆனால் ஒன்றில் உறுதியாக இருங்கள். உங்கள் விமர்சனம் குழந்தையின் பழக்க வழக்கம் அல்லது செயல் பற்றியதாக மட்டும் இருக்க வேண்டுமே தவிர, குழந்தையைப் பற்றி அல்ல.

★குழந்தையின் ஆர்வத்திற்கு மரியாதை கொடுங்கள். உங்களுக்கு ஆர்வம் குறைவாக இருந்தாலும், தன் நண்பர்கள், பள்ளியின் அன்றைய நிகழ்வுகள் போன்றவை பற்றி குழந்தை விவரிக்கும்போது, உண்மையான அக்கறையுடன் கவனியுங்கள். முடிந்தால் இடையிடையே சில கருத்துகளையும் தெரிவியுங்கள்.

★குழந்தை வெளியிடும் அதன் பயம் அல்லது பாதுகாப்பின்மையை முழு மனதோடு ஏற்றுக் கொள்ளுங்கள். குழந்தையின் பயம் அர்த்தமற்றதாக இருப்பினும் அதை அலட்சியப்படுத்தாதீர்கள். உதாரணமாக, குழந்தைக்கு கணக்கு பாடம் சிரமமாக இருப்பதாகக் கூறினால், அதை எளிதாகச் சமாளிக்க தாம் உதவுவதாகக் கூறி ஆறுதல் படுத்துங்கள்.

★குழந்தை சுதந்திரமாக செயற்பட ஊக்கமளியுங்கள். தனியாக புதுப்புது முயற்சிகள் செய்ய வாய்ப்பளியுங்கள். அதில் கிடைக்கும் வெற்றி குழந்தையின் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும். தோல்வி வேறு புதிய முயற்சிகளுக்கு வழி ஏற்படுத்தும். எப்பொழுதும் குழந்தையுடன் சேர்ந்து சிரித்து மகிழுங்கள்.

★குழந்தைக்கு எதில் அதிக ஆர்வம் என்பதைக் கண்டறிந்து அதில் தொடர்ந்து கவனம் செலுத்த குழந்தையை உற்சாகப்படுத்துங்கள். அது நடனமாகவோ, ஓவியமாகவோ, விளையாட்டாகவோ. எதுவாயினும் சரி! உங்களுக்குப் பிடிக்காத ஒன்றாக இருந்தாலும் கூட!

★குழந்தையின் காதுபட எவரிடமும் குழந்தையைப் பற்றி குறையாக 'சாப்பிட அடம் பிடிக்கிறாள்; அழுகிறாள்' என்று அடுக்கி விடாதீர்கள். ஏனெனில், அம்மாவுக்கு நம்மைப் பிடிக்கவில்லை என்று குழந்தை எண்ண ஆரம்பித்து விடும். இவ்வெண்ணம் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்.

★உங்களைப் பற்றி நீங்களே கூறும் சுயவிமர்சனமும் குழந்தையின் ஆளுமையை மாற்றக்கூடும். பொதுவாக குழந்தைகள் [illegible] அதிலும், தன் மனம் கவர்ந்த [illegible] கொள்ள விரும்புவர். நீங்கள் ஏதாவது ஒரு செய்திக்கு அல்லது பிரச்சினைக்குக் கொஞ்சம் அதிகப்படியாக அலட்டிக் **கொண்**டால் அவ்வளவுதான்! குழந்தை என்ன நி**னைக்கும் தெரியு**மா? வாழ்வின் சவால்களை உங்களால் **எதிர்கொள்ள** முடியவில்லை என்று எண்ணி கவலைப்**படும். இது** குழந்தையின் ஆரோக்கியமான எதிர்கால **எண்ணங்களைச் சிதை**க்கும்.

★குழந்தையிடம் பேசுவதற்கு முன் **நன்றாக** யோசித்து சரியான சொற்களையே தேர்ந்தெடு**ங்கள்! குழந்தை** ஏதேனும் குறும்பு செய்தால் அல்லது அநாவசிய **கேள்வி** கேட்டால் 'முட்டாள் மாதிரி செய்யாதே', '**நீ ரொம்ப பிடிவாதம்**' என்று குழந்தைகளைக் கடிந்து கொள்**வது இயல்பு**. ஆனால் இவற்றை அதிகமாக அடிக்கடி **கூறுவதால்** 'நாம் அது மாதிரிதானோ' என்ற **எண்ணம் குழந்தை**யிடம் ஏற்படலாம். எனவே எதிர்மறைச் **சொற்களைப்** பயன்படுத்துவதைத் தவிர்த்து **விடுங்கள்**.

இவையெல்லாம் எளிதாக **பின்பற்றக் கூடி**யவை. ஒவ்வொரு தாயும் இதை உண**ர்ந்து பின்பற்ற** ஆரம்பித்தால் எதிர்காலத்தில் ஆரோக்கிய**மான உலகைக்** காண முடியும் அல்லவா?



அருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு பாலமார்க்கண்டன்



உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பாலமார்க்கண்டன் நேற்று (21.10.2012) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.50, உதயசூரியன் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(24848)(3.14)

## மரண அறிவித்தல்

### திருமதி ரஞ்சிதமலர் கனகரத்தினம் (காந்தி அக்கா)



இல. 291, ஆடியபாதம் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சிதமலர் கனகரத்தினம் நேற்று (21.10.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இமானுவல் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்ல சேகரம் - செல்லம் (பண்டத்தரிப்பு) தம்பதியரின் அன்பு மருமகளும், கஜேந்திரகுமார் (கஜன்), சசிகுமார் (செந்தூரன்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மருமகளும், சிவகௌரியின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2012) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

291, ஆடியபாதம் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(24842)(3.14)

# இயற்கை கூட்டுப் பசளை விற்பனை நிலையம் திறப்பு

எருவில்,ஒக்.22

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்முறையாக இயற்கை கூட்டுப் பசளை விற்பனை நிலையம் திறந்துவைக்கப் பட்டது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகரசபையினால் மேற் கொள்ளப்பட்டுவரும் திட் டத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த நிலையம் திறந்துவைக் கப்பட் டுள்ளது.

எதிர்கால சந்ததிக்கு நஞ் சற்ற உணவை வழங்கும் நோக்குடன் விவசாயிகளுக்காக இந்த இயற்கைக் கூட் டுப்பசளையை மட்டக் களப்பு மாநகரசபை தயாரித்து வரு கின்றது.

மட்டக்களப்புப் பிரதேசத் தில் அகற்றப்படும் திண்மக் கழிவுகளைக்கொண்டு இந்த இயற்கை கூட்டுப்பசளை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தநிகழ்வில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிலையத்தை திறந்து வைத்துள்ளார்.

இதேவேளை மட்டக் களப்பு நகரில் அமைக்கப் பட்டுள்ள பயணிகள் இளைப்பாறும் மண்டபமும் பொது மக்களின் பாவனைக்காக மட்டக்களப்பு மாநகர முதல்வரினால் கையளிக்கப்பட் டது.

இந்தப் பகுதியில் நீண்ட காலமாக பஸ் தரிப்பிடம் இல்லாத காரணத்தினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்ட நிலையில் மாநகரசபையினால் இந்த மண்டபம் அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக் கப்பட்டது.

(ச-31)

# 5 நட்சத்திர ஹோட்டல் ஜனாதிபதியால் திறப்பு

அம்பாறை, ஒக்.22

கிழக்கின் முதலாவது ஐந்து நட்சத்திர ஹோட்ட லொன்றை பாசிக்குடாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்து வைத்தார்.

பாசிக்குடா பகுதியில் 150 ஏக்கர் விசாலத்தில் அமைய வுள்ள 14 ஹோட்டல்களின் முதற்கட்டமாக 48 அறைகளைக் கொண்ட 5 நட்சத்திர ஹோட்டல் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த ஹோட்டல்கள் நிர்வகிக்கப்படவுள்ளமை குறிப் பிடத் தக்கது.

(ச)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் அளிப்பு
10 ★ 04 ★ 1979

அரக்கன் அழிப்பு
29 ★ 10 ★ 2006

**அமரர் செல்லத்துரை சுதர்சன்**

திதி: அபரபக்க சதுர்த்தி (தேய்பிறை)

வாழ்க்கை எனும் பாதையிலே
நீ காட்டிய பாசமெல்லாம்
எமை விட்டுப் பிரிந்து ஆறாண்டானதோ
உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்

குடும்பத்தினர் (ஜேர்மனி)

(24637)(3.14)

# வாகன விபத்தில் ஒருவர் சாவு

அம்பாறை,ஒக்.22

அம்பாறை,எரக்கம்பிட்டிய பிரதேசத்தில் செங்கல் ஏற்றி வந்த வாகனம் கவிழ்ந்ததில் கல்கந்தை பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

காயமடைந்த நபர் அம்பாறை ஆதார வைத்தியசா லையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோதும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ச)

## பாராட்டி வாழ்த்து



எமது பாடசாலை அதிபர்
**நா. கருணாகரன்**
அவர்கள் கடந்த (02.10.2012) செவ்வாய்க்கிழமை அதிபர் சேவை தரம் 2.II பதவிக்கு நியமனம் பெற்றமையை மனமுவந்து பாராட்டுவதுடன் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சிறப்போடு வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம்.

"நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாள்களாய் நிலைத்திருப்பேன்" (சங்.23:06)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

ஆண்டவர் படைப்பில்
27.01.1983

ஆண்டவர் அழைப்பில்
21.09.2012



அமரர்
**திருமதி சுபேதர் ஆரோக்கியநாயகி ராஜிதா டயஸ்**

அன்பாலும் பண்பாலும் எம்மை ஈர்த்தவளே
சிரித்த முகத்துடன் திகழ்ந்தவளே
பாரினிலே உயர்ந்திட நினைத்தாய்
பரிசுத்த வேதத்தை உயிராக நினைத்தாய்
ஆறிடுமோ எங்கள் துயரம் - உன் பிள்ளைகளை தேடிச் சென்றாயோ
இருவிழிகள் அருவியெனச் சொரிய எம் அன்பு ராஜிதா
உன்னை நாம் தினமும் தேடுகிறோம்- ஆனால்
உன்னை அழைத்தவர் எமது ஜீவனுள்ள கிறிஸ்து
என்பதால் அடைகின்றோம் ஆறுதல்
மகிமையில் மீண்டும் சந்திப்போம் - இறைவனுடன்
மகிழ்ந்து வாழ்வோம் என்ற அசையாத நம்பிக்கையால்
இப்போது வேண்டுகிறோம் உன் ஆன்மா சாந்தி அடைய...

கடந்த 21.09.2012 அன்று இறைவனடி சேர்ந்த எனது அன்பு மனைவியின் ஞாபகார்த்த ஆராதனையும், மதியபோசனமும் இன்று 22.10.2012 மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.120(58) A.V. றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம்.
0777916940, 0772900089

(24643)(9.14)

கணவர், குடும்பத்தினர்.

# கிண்ணியா தள வைத்தியசாலைக்கு குளிரூட்டிகள்

திருகோணமலை, கிண்ணியா தள வைத்தியசாலைக்கு கிண்ணியா ஹஸன்மௌலவி நற்பணி மன்றத்தினால் 5 குளிரூட்டிகள் நேற்று முன் தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டன.

கிண்ணியா தள வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி ஏ.எச். எம்.சமீம் தலைமையில் இடம்பெற்ற இந்தநிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மௌலவி எஸ்.எல்.எம். ஹஸன் கலந்து கொண்டு இந்தக் குளிரூட்டிகளை வழங்கினார்.

(ச)

## அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் செல்வன்
**தியாகராசா கரிஸ்லன் (கரிஷ்)**
2012 புலமைப்பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று யாவருக்கும் பெருமை சேர்த்தார். இவரின் இக் கல்விச் சித்திக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அதிபர் திரு. நோயல் விமலேந்திரன், வகுப்பாசிரியை திருமதி ஜஸ்மி மற்றும் வழிப்படுத்திய ஆசிரியர், ஆசிரியைகளையும் பாராட்டுவதோடு ஏனைய புலமைப் பரீட்சை ஆசிரியர்களான திரு. சிவனேசன், நேசமலர் அவர்களையும் பாராட்டுவதோடு எமது நன்றிகளையும் தெரிவித்து மனம் மகிழ்கின்றோம்.

Best Wishes

பாறாய் வீதி, சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

அப்பா, அம்மா, அண்ணா,
தம்பி, தங்கைமார்.

## 21ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



செல்வி
**டலிக்குமார் சிந்துஜா**

இன்று (22.10.2012) திங்கட்கிழமை தனது
21ஆவது பிறந்த நாளை வெகு விமரிசையாக
தனது இல்லத்தில் கொண்டாடும் சிந்துஜா
அவர்களைப் பல்லாண்டு காலம் சீரும்
சிறப்புடனும் வாழ
வாழ்த்துகின்றோம்.

HAPPY BIRTHDAY!


[illegible]
[illegible] வீதி,
சண்டிலிப்பாய்.

(24645)(9.14)

வாழ்த்துவோர்:
அண்ணா- நிசாந்தன்,
அக்கா- நிலாந்தினி,
அத்தான்- பரா, பிரணாங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சின்னக்குட்டி சிவசுப்பிரமணியம் (J.P.)

(ஓய்வுநிலை எழுதுவினைஞர், உள்ளூராட்சி அமைச்சு)

யாழ். ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி சிவசுப்பிரமணியம் (J.P.) 17.10.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை- மயிலுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் பிரான்ஸைச் சேர்ந்தவர்களான கீத்தா ரமணன், வாணிசங்கர், அபிராமி, சாந்திபூசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சுசீலாதேவி மற்றும் திரிபுரவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பேரின்பநாயகம், ராசா, காலஞ்சென்ற திக்கவயல் தர்மகுலசிங்கம் மற்றும் தர்மலட்சுமி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் உஷா, பிரபா, கரன் (லண்டன்), பிரசாந்த் (கனடா), நர்த்திகா காலஞ்சென்ற தஷா மற்றும் லாவண்யா ஆகியோரின் அன்பு மாமனும் சாருகேஷின் (வருன்) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரிபுரவதனி (சகோதரி).

ஆவரங்கால். (24624)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22.06.1940

மறைவு: 03.11.2011

## அமரர் இராசா மயில்வாகனம்

குடும்பத்தின் குல விளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
திகழ்ந்த எம் இனிய உறவே;
நீங்கள் மீளாத் துயில் கொண்டு
பன்னிரண்டு மாதங்கள் ஓடி மறைந்து
விட்டதென்று நம்பமுடியவில்லை.
எம் மனதின் சோகம் ஆழ்கடல்போல்
இருந்தாலும் நாளும் பொழுதும் எம்
இதயத்தில் அகல் விளக்காய்
பிரகாசித்துக் கொண்டு இருக்கின்றீர்கள்
ஆற்றுவார், தோற்றுவார் பலர் இருந்தும்
அனலிடைப்பட்ட புழுவாய் துடிக்கும்
எங்களுக்கு உங்களுக்கு ஒப்பாக
யாரைத்தான் காணமுடியும்

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(24521)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா மகேஸ்வரி



தம்பாலை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா மகேஸ்வரி 19.10.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும் காஞ்சென்ற முத்தையா மற்றும் மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வர்களான வைரமுத்து - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் சிறி, பாஸ்கரன், ஜெயந்தினி, சுகந்தினி, யாழினி ஆகியோரின் பாசமிகு தாயும் காந்தராஜா (கனடா), மகேந்திரம் (கனடா), நிதி, தேவராணி, ஜீவகருணா ஆகியோரின் பாசமிகு மாமியும் குயின்சன், கயிதா, நிலானி, நிலோஜினி, தபோஜினி, ஜினேஸ், தனீஸ், பிருத்திகா, சிந்துஜா, நிருஜா, தனுஜன், தாருஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கனகரத்தினம், அற்புதராஜா, காலஞ்சென்ற றோசாமலர் மற்றும் நேசமலர் ஆகியோரின் சகோதரியும் சிவபாக்கியம், நாகபூரணம், இராசம்மா, மகேஸ்வரி, சின்னத்தம்பி, ஈஸ்வரிதேவி, ராசசுலோசனா, காலஞ்சென்றவர்களான சதாசிவம், குமாரசாமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக தம்பாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்

தம்பாலை, அச்சுவேலி. (24634)

# மரண அறிவித்தல்

## திருமதி விசுவலிங்கம் சிவகாமி



ஊரங்குணை, கட்டுவனைப் பிறப்பிடமாகவும் 115, UPNEY LANE, BARKING ESSEX LONDON ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசுவலிங்கம் சிவகாமி கடந்த 19.10.2012 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம்-சீதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- கைராசி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவலிங்கம் (லண்டன்), பரமேஸ்வரி (கனடா), சுந்தரலிங்கம், இராசலிங்கம், தருமலிங்கம் (லண்டன்), பஞ்சலிங்கம் (லண்டன்), சத்தியலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், பொன்னையா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னுப்பிள்ளை, அன்னம்மா ஆகியோரின் மைத்துனியும், ராஜினி (லண்டன்), இராசநாயகம் (கனடா), ஜெயலட்சுமி, வசந்தகுமாரி, ஷாமினி (லண்டன்), மாலா (லண்டன்), றஞ்சனா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும், குவேரா,நெல்சன், பிரசன்னா, பர்மினன், றமணன், பாமினி, ராகுலன், சுபாஷினி, சுஜன், ராஜ்குமார், றதீஸ்குமார், ஜமுனா, ஸ்ரீபன், பமீலா, Doctor ஜெகான்,சோனியா, தரணிகா, ஜெசிக்கா, தரண், நரேஷ், கோபி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அபி, சஞ்சை, விஸ்வா, தருண், சனோஜன், ஹரிஸ்கா, ஹரினி, டிலோஜா, லக்ஸ்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.10.2012 வெள்ளிக்கிழமை லண்டன் நேரப்படி பிற்பகல் 3.15 இக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வி. சுந்தரலிங்கம் (0776033665)
வி. இராசலிங்கம்
(வாசன்- 0777427027)
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

தகவல்:
மகன்மார்

(24631)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் இரண்டு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் ஏழுதப்பட்ட இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு யாழ். பொது நூலகத்தில் நேற்று இடம்பெற்றது.

நீரிழிவு நிலையத்தினால் கடந்த மாதம் நடத்தப்பட்ட ஆரோக்கியமான உணவு தயாரிப்புப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் அதில் இடம்பெற்றது.

நீரிழிவு சிகிச்சை நிலைய வைத்திய அதிகாரி இ.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி வைத்திய கலாநிதி கே.பாலகுமார் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் ''நல்லதோர் உணவு செய்வோம்'', ''நூற்றாண்டு கடந்து நீடூழி வாழ்க'' ஆகிய இரு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன.

இரண்டு நூல்களையும் யாழ். போதனா வைத்தியசாலைப்பதில் பணிப்பாளர்வைத்தியகலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா வெளியிட்டு வைத்தார். ''நல்லதோர் உணவு செய்வோம்'' எனும் நூலின் முதற் பிரதியை யாழ். தாதியக் கல்லூரி அதிபர் செல்வி ராஜீலா தேவி வல்லிபுரநாதன் பெற்றுக்கொண்டார்.

''நூற்றாண்டு கடந்து நீடூழி வாழ்க'' எனும் நூலின் முதற்பிரதியை மூத்த ஊடகவியலாளரும், உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதன் பெற்றுக்கொண்டார்.

''நல்லதோர் உணவு செய்வோம்'' எனும் நூலின் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் ஜி.மிகுந்தன் நிகழ்த்தினார். யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் சட்டத்தரணி கு.குருபரன், ''நூற்றாண்டு கடந்து நீடூழி வாழ்க'' எனும் நூலின் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுனர் எஸ்.சிவன்சுதன் இரண்டு நூல்களினதும் ஏற்புரையை நிகழ்த்தினார்.

அத்துடன் ''ஆரோக்கியமான உணவு உண்ணுவதும் ஒரு கலை'' எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி ஏ.துஷ்யந்தியும், கடந்த மாதம்நடத்தப்பட்ட ''சமையற் போட்டி ஓர் அனுபவப் பகிர்வு'' எனும் தலைப்பில் வைத்தியகலாநிதி ரி.கார்த்திகாவும் உரையாற்றினர். தொடர்ந்து கவிதை, பாடல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கடந்த மாதம், நீரிழிவு சிகிச்சை நிலையத்தினால் நடத்தப்பட்ட 'ஆரோக்கியமான உணவு தயாரித்தல் போட்டியில் பங்குபற்றியவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஐ-4)

# உடல் உழைப்பு இன்மையே நோய்களுக்குக் காரணம்

## மருத்துவபீட பீடாதிபதி கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.22

உடல் உழைப்பு இன்மையாலேயே பெரும்பாலான நோய்கள் எம்மவர்களிடத்தில் குடிகொண்டுள்ளன. கோதுமை மா எப்பொழுது எமது நாட்டுக்கு வந்ததோ அப்பொழுதே நோயும் தொடங்கி விட்டது. நீரிழிவு போன்ற நீடித்துச் செல்லும் நோய்களுக்கு இதுவே காரணமாகிவிட்டது இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி வைத்திய கலாநிதி கே. பாலகுமார்.

யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தினரால் வெளியிடப்பட்ட நூல் வெளியீடு மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.'

இது தொடர்பில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

தற்பொழுது நீரிழிவு நோய் நீடித்துச் செல்கிறது. முன்னைய காலத்துடன் ஒப்பிடும் போதுதற்போதைய நிலைமை மோசமானதாகவே உணரப்படுகிறது.

முன்னைய காலத்தில் உடல் உழைப்பு சிறந்த கட்டமைப்பைக் கொண்டிருந்தது.

இன்று உடல் உழைப்பு இல்லை. சைக்கிள் ஓடுவது நல்ல பயிற்சியைக் கொடுத்தது. இன்று மோட்டார் சைக்கிள், கார் என்று பயணம் செய்ய ஏதுவாகிவிட்டது. சாப்பிட்ட பின்னர் பழங்கள் உட்கொள்வது மாற்றமுறும் நிலையை எட்டியுள்ளது. இந்த நிலையைத் தவிர்த்து உணவுக் கட்டுப்பாட்டில் அக்கறை கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-4)














யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் நூல் வெளியீடும், பரிசளிப்பு நிகழ்வும் நேற்று நடைபெற்றது. அதில் சாவகச்சேரி வைத்தியசாலை வைத்தியர் ரி.சிறீதரன் மங்கல விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மருத்துவ பீடப் பீடாதிபதி வைத்தியகலாநிதி கே.பாலகுமார் மற்றும் வைத்தியர்களான இ.பரமேஸ்வரன், ஏ.துஷ்யந்தி ஆகியோர் உரையாற்றுவதையும், வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் வைத்தியகலாநிதி எஸ். ஸ்ரீபவானந்தராஜா முதலாவது நூலின் முதற்பிரதியை வெளியிட தாதிய கல்லூரி அதிபர் செல்வி ரஜீலா தேவி வல்லிபுரநாதன் பெற்றுக் கொள்வதையும் காணலாம்.

இரண்டாவது நூலின் முதற்பிரதியை பதில் பணிப்பாளர் வைத்தியகலாநிதி எஸ். ஸ்ரீபவானந்தராஜா வெளியிட்டு வைக்க, மூத்த ஊடகவியலாளரும், உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதன் அதனைப் பெற்றுக் கொள்வதையும், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கு.குருபரன் நூல் ஆய்வுரை செய்வதனையும், போதனா வைத்தியசாலை வைத்தியர் எஸ்.சிவன்சுதன் ஏற்புரை வழங்குவதனையும், மனநல வைத்திய நிபுணர் சிவயோகன் நூலின் சிறப்புரைப் பிரதியை வெளியிட யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் வி.மகாலிங்கம் பெற்றுக் கொள்வதையும், யாழ். பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி கு.மிகுந்தன் மற்றும் பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும் காணலாம்.

(ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரந்தன் இளைஞர் வட்ட கிரிக்கெட்

# கிருஸ்ணபாரதியை வீழ்த்தி புதியபாரதி சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஒக்.22

பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழகத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று சம்பியனானது.

இந்த இறுதியாட்டத்தில் கிருஸ்ணபாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதியபாரதி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிருஸ்ணபாரதி விளையாட்டுக் கழக அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 37 ஓட்டங்களை பெற்றது.

இதில் சாந்தன் 12 ஓட்டங்களையும் யசிந்தன் 8 ஓட்டங்களையும், நிசாந்தன், குகராஜ் ஆகியோர் தலா 4 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்துவீச்சில் புதியபாரதி விளையாட்டுக் கழக அணி சார்பில் நிசாந்தன் 3 இலக்குகளையும் சாரங்கன் ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

38 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புதியபாரதி விளையாட்டுக் கழக அணி 9:1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர்.

இதில் பாபு 18 ஓட்டங்களையும், பிரதீசன் 8 ஓட்டங்களையும், றொசாந் 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கிருஸ்ணபாரதி விளையாட்டுக் கழக அணி சார்பில் குகராஜ் 3 இலக்குகளையும், றொசாந் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இந்தச் சுற்றுத் தொடரில் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக கிருஸ்ணபாரதி விளையாட்டுக் கழக அணி வீரன் றொசாந்,ஆட்ட தொடர் நாயகனாக புதியபாரதி விளையாட்டுக் கழக அணி வீரன் பாபு , சிறந்த பந்து வீச்சாளராக பச்சிலைப்பள்ளி இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி வீரன் ரூபன், சிறந்த விக்கெட் காப்பாளராக புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி வீரன் வசிகரன், சிறந்த களத்தடுப்பாளராக இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக அணி வீரர் செந்துரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரைச்சிப் பிரதேச செயலர் குமராஜ், சிறப்பு விருந்தினராக ஜனாதிபதியின் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் தீபன், கௌரவ விருந்தினராக கண்டாவளை பிரதேச செயலக பிரிவின் விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சிவநேசன், கரைச்சி பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் எஸ்.குமார், கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட பயிற்றுநர் சதீஸ், கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்றுநர் ஆசைநாதன், பரந்தன் இந்து மகா வித்தியாலய அதிபர் சிவநேசன், கிராம உத்தியோகத்தர்களான அம்பிகை பாலன், திருமதி நிசாந்தினி கிருஸ்ணன், வர்த்தகர் வேலும் மயிலும் ஆகியோர் கலந்து கொண்டனர். (ங-23)

## தேசிய மட்டப் போட்டியில் லேகாஜினிக்கு வெண்கலம்



கடந்த 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை அம்பாந்தோட்டை, பேலியத்த மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இடம்பெற்ற தேசிய மட்ட தடகளப் போட்டிகளில் வவுனியாவைச் சேர்ந்த கமலநாதன் லேகாஜினி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

வவுனியா சைவப் பிரகாச வித்தியாலயத்தைச் சேர்ந்த கமலநாதன் லேகாஜினி, 21 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்திலேயே 3ஆம் இடம்பெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

இதன்போது வெண்கலப் பதக்கத்தோடு அவருக்கு வர்ண விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அண்மையில் நடந்து முடிந்த வட மாகாண விளையாட்டுப் போட்டிகளிலும் சிறப்பான பெறுபேறுகளை இவர் வெளிப்படுத்தியிருந்தார். அத்தோடு மாகாண மட்டத்தில் 21 வயதிற்குட்பட்ட சிறந்த வீராங்கனைக்கான விருதையும் வென்றிருந்தார்.

இந்த முறைய தேசிய மட்டத் தடகளப் போட்டிகளில் வட மாகாணம் 5 தங்கப் பதக்கங்களையும், 4 வெள்ளிப்ப தக்கங்களையும், 9 வெண்கலப் பதக்கங்களையும் வெற்றிகொண்டதோடு, 6 வர்ண விருதுகளையும் தனதாக்கியமை குறிப்பிடத்தக்கது.

(ங-23)

## ஜனாதிபதி வெற்றிக்கிண்ண கரப்பந்து தொடர் நவம்பரில்

ஜனாதிபதி தங்க வெற்றிக்கிண்ணத்துக்கான திருகோணமலை பட்டினமும் சூழலும், கிண்ணியா, கந்தளாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதில் பட்டினமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவு அணிகளுக்கு இடையிலான போட்டிகள் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்திலும், கிண்ணியா பிரதேச செயலர் பிரிவு அணிகளுக்கு இடையிலான போட்டிகள் கிண்ணிய குறிஞ்சிக் கேணி விளையாட்டுக் கழக மைதானத்திலும், கந்தளாய் பிரதேச செயலர் பிரிவு அணிகளுக்கு இடையிலான போட்டிகள் கந்தளாய் மத்திய கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ங-23)



அம்பாந்தோட்டையில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டத் தடகளப் போட்டியின் பெண்களுக்கான அஞ்சலோட்ட நிகழ்வில் பங்குபற்றிய வீராங்கனைகள். (23)

## திருகோணமலையில் கடற்கரை உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

சக்தி எப்.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் நடத்தும் 5 பேர் பங்குபற்றும் கடற்கரை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் நவம்பர் மாதம் நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் 3 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றவுள்ளன என்று திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ங-23)



அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான சதுரங்கப் போட்டியில் சிறந்த வீரனாகத் தெரிவு செய்யப்பட்ட ஊர்காவற்றுறை பிரதேச செயலக வீரன் இ.செந்தில் மாறனுக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வெற்றிக்கிண்ணத்தை வழங்கி கௌரவித்தார். (ங-7-23)

## கிண்ணியா பிரதேச செயலக அணி திருமலை உதைபந்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 22

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிகளை நடத்தி வருகின்றன.

அந்த வகையில் திருகோணமலை மாவட்டத்துக்கு உட்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 21 வயதுக்குட்பட்ட தெரிவு அணிகளுக்கான இறுதியாட்டம் அண்மையில் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் கிண்ணியா பிரதேச செயலகத் தெரிவு அணியை எதிர்த்து திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக தெரிவு அணி மோதிக்கொண்டது.

இதில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோல்களை பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் கிண்ணிய பிரதேச செயலக தெரிவு அணி 4:1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி மாவட்ட சம்பியனானது.

(ங-23)

## சிநேக பூர்வ உதைபந்தில் சென்.ஹென்றிஸ் ஆதிக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் 14 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோலினையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது. 18 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்திலும் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

21வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் யாழ்ப்பாணக் கல்லூரியைத் தோற்கடித்தது.

(ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 22

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**பி.ப 3.30 மணி**

**சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகம் எதிர் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம்.** (ங-23)

* * *

இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி, மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் 14 வயது, 16 வயது, 18 வயது, 21 வயது பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHAMPIONS LEAGUE TWENTY 20

# வென்றும் சென்னை வெளியேறியது





மும்பை அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் ஆட்டத்தில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. தினேஷ் கார்த்திக், பொலார்டின் கடைசிநேர போராட்டம் வீணானது.

தென்னாபிரிக்காவில் நான்காவது சாம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர் நடக்கிறது. இதன் லீக் ஆட்டத்தில் நேற்று முன்தினம் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

சென்னை அணிக்கு டுபிளசி, முரளிவிஜய் இணைந்து 'ஜெட்' வேகத்தில் தொடக்கம் கொடுத்தனர். ஓஜா பந்தில் முரளிவிஜய் முதலில் ஒரு சிக்ஸர் அடித்தார். ஜான்சன் பந்துப் பரிமாற்றத்தில் ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகள் என்று தொடர்ந்து விளாசினார் டுபிளசி. பின், மலிங்காவின் பந்துப் பரிமாற்றத்திலும் 3 பவுண்டரிகள் பறக்க விட, 4.1 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் சென்னை அணி 50 ஓட்டங்களைக் கடந்தது.

குல்கர்னி பந்துப் பரிமாற்றத்தில் முரளிவிஜய், ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகள் அடித்தார். முதல் இலக்குக்கு 8 பந்துப் பரிமாற்ற ங்களில் 86 ஓட்டங்கள் சேர்த்த போது, முரளிவிஜய் (39) ஆட்டமிழந்தார். ஹர்பஜன் பந்தில் டுபிளசி ஒரு பவுண்டரி விளாச, சென்னை அணி 10 பந்துப் பரிமாற்றங்ளில் 100 ஓட்டங்களை எட்டியது.

இதன் பின் எல்லாம் தலைகீழானது. மலிங்கவின் அடுத்தடுத்த பந்துகளில் அரைச்சதம் அடித்த டுபிளசி (52), ரெய்னா (8) வெளியேறினர். பத்ரிநாத், 10 பந்துகளில் 2 ஓட்டங்கள் எடுத்தார். ஸ்மித், மலிங்கா பந்துப் பரிமாற்றத்தில் தலா ஒரு சிக்ஸர், பவுண்டரி அடித்த அணித் தலைவர் டோனி, 35 ஓட்டங்களுக்கு (19 பந்துகளில்) திரும்பினார். அல்பி மோர்கல் 'டக் அவுட்' ஆனார்.

சகா (5), ரவிந்திர ஜடேஜா (12) ஏமாற்றினர். சென்னை அணி 20 பந்துப் பரிமாற்றங்ளில், 8 இலக்குகளுக்கு 173 ஓட்டங்கள் எடுத்தது. அஷ்வின் (13) ஆட்டமிழக்காமல் இருந்தார். மும்பை அணி சார்பில் மலிங்க 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

கடின இலக்கை துரத்திய மும்பை அணிக்கு சச்சின் (2) வழக்கம் போல விரைவில் ஆட்டமிழந்தார். ஸ்மித் (13) இந்த முறை நிலைக்கவில்லை. அடுத்து இணைந்த ரோகித் சர்மா, தினேஷ் கார்த்திக் இருவரும் அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்தனர். மோர்கல், ஜடேஜா பந்துகளை ரோகித் சர்மா சிக்சருக்கு விரட்டினார்.

மறுமுனையில் தினேஷ் கார்த்திக், ஜடேஜா பந்துப் பரிமாற்றத்தில் அடுத்தடுத்து இரண்டு சிக்ஸர்கள், பவுண்டரி அடித்தார். இந்த ஜோடி 7.2 பந்துப் பரிமாற்றங்களில் ஓட்டங்கள் சேர்த்த போது, ரோகித் சர்மாவை (32) வெளியேற்றினார் மோர்கல். அஷ்வினின் பந்துப் பரிமாற்றத்தில் அடுத்தடுத்து பவுண்டரி, சிக்ஸர் அடித்த தினேஷ் கார்த்திக், அரைச்சதம் கடந்தார்.

கடைசி நேரத்தில் எழுச்சி பெற்ற பொலார்ட், அஷ்வின் பந்துப் பரிமாற்றத்தில் 3 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி உட்பட 24 ஓட்டங்கள் விளாச, ஆட்டத்தில் 'டென்ஷன்' எகிறியது. 45 பந்தில் 74 ஓட்டங்கள் எடுத்து தினேஷ் கார்த்திக் ஆட்டமிழக்க, மும்பை அணியின் வெற்றிக்கு, கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் 19 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

ஜடேஜா வீசிய முதல் பந்தில், பொலார்ட் சிக்ஸர் அடித்தார். அடுத்த பந்தில் ரெய்னாவின் 'சுப்பர்' பிடியெடுப்பில் பொலார்ட் (31) ஆட்டமிழந்தார். 3, 4 ஆவது பந்தில், ஒரு பவுண்டரி உட்பட 6 ஓட்டங்கள் எடுத்தார் ஹர்பஜன். 5 ஆவது பந்தில் ஹர்பஜன் (6), சகாவிடம் சிக்கினார். மும்பை அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளுக்கு 167 ஓட்டங்கள் எடுத்தது. சென்னை அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றிபெற்றது. (5)

### வெளியேறுகின்றன சென்னை, மும்பை

யார்க்ஷயர் அணிக்கு எதிரான வெற்றியின் மூலம், லயன்ஸ் அணி மொத்தம் 12 புள்ளிகள் பெற்று, 'பி' பிரிவில் இருந்து இரண்டாவது அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது. ஏற்கனவே இந்தப் பிரிவில் சிட்னி சிக்ஸர்ஸ் (12 புள்ளி) அரையிறுதிக்கு தகுதிபெற்றது. இதனால் சென்னை, மும்பை, யார்க்ஷயர் அணிகள் அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறுகின்றன.

## வோஸ்னியாக்கி -ஸ்டோசர் இறுதியில்

கிரெம்ளின் கிண்ண அரையிறு திச்சுற்றில் வெற்றி பெற்ற வோஸ்னி யாக்கி, ஸ்டோசர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் கிரெம்ளின் கிண்ண ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.

இதன் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ஆஸ்திரேலியா வின் சமந்தா ஸ்டோசருடன், டென் மார்க் வீராங்கனை கரோலின் வோஸ் னியாக்கி மோதுகிறார். அரையிறுதி யில் ஸ்வீடனின் சோபியா அர்விட் சனுடன் மோதிய வோஸ்னியாக்கி 6-3 என்ற கணக்கில் முதல் செற்றை கைப்பற்றி முன்னிலை பெற்றார். அடுத்த செற்றில் கடும் நெருக்கடி கொடுத்த சோபியா 7-6, 7-4 என்ற கணக்கில் வென்று பதிலடி கொடுக்க 1-1 என்று சமநிலை ஏற்பட்டது.

இதையடுத்து, 3 ஆவது செற் ஆட் டத்திலும் அபாரமாக விளையாடிய வோஸ்னியாக்கி 6-3, 6-7 (4-7), 6-4 என்ற செற் கணக்கில் வென்று இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் செர்பியா வின் அனா இவானோவிச்சுடன் மோதிய ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர் 2-6, 6-3, 6-2 என்ற செற் கணக்கில் வென்று இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றார். (5)

## அரையிறுதியில் லயன்ஸ் யார்க்ஷயர் மீண்டும் தோல்வி



சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடரின் அரையிறுதிக்கு தென்னாபிரிக்காவின் ஹைவெல்டு லயன்ஸ் அணி முன்னேறியது. நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் யார்க்ஷயர் அணியை 5 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவில் நான்காவது சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர் நடக்கிறது. இதன் 'பி' பிரிவில் நேற்று முன்தினம் நடந்த முக்கிய ஆட்டத்தில் ஹைவெல்டு லயன்ஸ், யார்க்ஷயர் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற லயன்ஸ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

யார்க்ஷயர் அணிக்கு ஜாக்குஸ், காலே இணைந்து முதலில் நிதான தொடக்கம் குடுத்தனர். பின்னர் அவ்வப்போது பவுண்டரி அடிக்க, ஓட்ட எண்ணிக்கை சீராக உயர்ந்தது. நான்ஸ் பந்துப் பரிமாற்றத்தில் ஜாக்ஸ் இரு பவுண்டரிகள் அடிக்க, காலேயும் தன்பங்குக்கு பவுண்டரிகள் விளாசினார். இருப்பினும், காலே (21) நிலைக்கவில்லை. ஜோ ரூட் (5) ஏமாற்றினார். யார்க்ஷயர் அணி 2 இலக்குகளுக்கு 61 ஓட்டங்கள் எடுத்த போது மழை குறுக்கிட்டது. பின் மீண்டும் போட்டி தொடர்ந்தது. இந்த முறை அல்விரோ பீற்றர்சனிடம் 'போல்டானார்' ஜாக்குஸ் (31).

வந்த வேகத்தில் இரு பவுண்டரிகள் அடித்த பேலன்ஸ், 17 ஓட்டங்களில் திரும்பினார். யார்க்ஷயர் அணிக்காக முதல் சிக்ஸர் அடித்த லித் (21) நீடிக்கவில்லை. ரஷித் (8), அஜீம் (4) ஏமாற்ற, யார்க்ஷயர் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளுக்கு 131 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

எளிதாக எட்டிவிடும் இலக்கை விரட்டிய லயன்ஸ் அணிக்கு தலைவர் அல்விரோ பீற்றர்சன் நல்ல தொடக்கம் கொடுத்தார். இவர், 18 பந்தில் 19 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். குலாம் (8) சொதப்பினார். பின் வந்த குயின்டன், டால்பி பந்துப் பரிமாற்றத்தில் ஒரு பவுண்டரி, சிக்ஸர் விளாசினார். தொடர்ந்து அசத்திய இவர், அஜீம் பந்தையும் சிக்ஸருக்கு அனுப்பினார். மறுமுனையில் மெக்கன்சி, ரஷித் பந்துப் பரிமாற்றத்தில் இரு பவுண்டரிகள் அடிக்க, ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது. இந்த நிலையில் மெக்கன்சி (13) அஜீம் சுழலில் சிக்கினார். குயின்டன் 32 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்க, லயன்ஸ் அணிக்கு சற்று சிக்கல் ஏற்பட்டது. அடுத்து வந்த டுவைனே, 14 பந்தில் 25 ஓட்டங்கள் எடுத்தார். ஆட்டத்தின் 19 ஆவது பந்துப் பரிமாற்றத்தில்', சைம்ஸ் அடுத்தடுத்து தலா ஒரு சிக்ஸர், பவுண்டரி விளாச, கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில்' லயன்ஸ் அணியின் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

பேட்டர்சன் வீசிய இந்த பந்துப் பரிமாற்றத்தில் சைம்ஸ் தொடர்ந்து இரு பவுண்டரிகள் அடிக்க, லயன்ஸ் அணி 19.2 பந்துப் பரிமாற்றத்தில் 5 இலக்குகளுக்கு 134 ஓட்டங்கள் எடுத்து, 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 'பி' பிரிவில் 12 புள்ளிகள் பெற்ற லயன்ஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறியது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் வெற்றி



பாகிஸ்தானில் கிரிக்கெட் போட்டிகளை மீளவும் கொண்டுவருவதற்கு முன்னோடியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உத்தியோகபூர்வமற்ற 'ரி-20' தொடரின் முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தானின் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி வெற்றிபெற்றுள்ளது. சர்வதேச உலகப் பதினொருவர் அணியை அந்த அணி 84 ஓட்டங்களால் வெற்றிகொண்டது.

கராச்சி தேசிய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது இலக்குக்காக 83 ஓட்டங்களை 6.1 பந்துப் பரிமாற்றங்களில் குவித்த அந்த அணி, தொடர்ச்சியாக வேகமாக ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி சார்பாக உமர் அக்மல் 37 பந்துகளில் 67 ஓட்டங்களையும், ஷைப் ஹசன் 21 பந்துகளில் 54 ஓட்டங்களையும், இம்ரான் நஷீர் 19 பந்துகளில் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சர்வதேச உலகப் பதினொருவர் அணி சார்பாக தான்டி ஷபலாலா 3 பந்துப் பரிமாற்றங்களில் 20 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஷபுர் ஷட்ரன் 38 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஸ்டீவன் ரெய்லர், அன்ட்ரே நெல் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

223 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சர்வதேச உலகப் பதினொருவர் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 84 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது பந்துப் பரிமாற்றத்தில் சனத் ஜெயசுரிய 10 ஓட்டங்களைப் பெற்ற போதிலும், 6 ஆவது பந்தில் ஆட்டமிழந்திருந்தார். தொடர்ந்து வந்த வீரர்களால் ஓட்டங்களைப் பெற முடிந்திருக்கவில்லை.

துடுப்பாட்டத்தில் சர்வதேச உலகப் பதினொருவர் அணி சார்பாக ஷபுர் ஷட்ரன் 51 பந்துகளில் 42 ஓட்டங்களையும், லூட்ஸ் பொஸ்மன் 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி சார்பாக தபிஷ் கான் 4 பந்துப் பரிமாற்றங்களில் 25 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், வகாப் றியாஷ் 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், கைப்பற்றினர். ஆட்டநாயகனாக உமர் அக்மல் தெரிவானார். (5)


**வீணைகள் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள பழைய வீணைகள் விற்பனைக்குண்டு.
K.P.பாலகிருஷ்ணன்
கே.கே.எஸ் வீதி பூநாறி மரத்தடி
கொக்குவில். 0212222940
(24823)(3.14)

Micro System
Jaffna Road, Manipay.

**தேவை**

கணனி கல்வி நிறுவனத்திற்கு பின்வருவோர் தேவை
1. அலுவலக உத்தியோகஸ்தர்
2. கணனித் தொழில்நுட்பவியலாளர்
3. கணனி ஆசிரியர்

மேற்கூறியவற்றிற்கு தகமையுள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையுடன் தொடர்பு கொள்ளவும்
msdc_manipay@yahoo.com
Tel No:- 021 3218462, 077 2487082


# இனத்துவேச வார்த்தைப் பிரயோகம்

## இங்கிலாந்து அணிக்குப் பாதிப்பு

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும், செல்ஷி அணியின் வீரருமான ஜோன் ரெறியின் இனத்துவேச வார்த்தைப் பிரயோகம் இங்கிலாந்தின் நற்பெயருக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக இங்கிலாந்து உதைபந்தாட்டச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ஜோன் ரெறிக்கு 4 போட்டித் தடையும், அபராதமும் விதிக்க இங்கிலாந்து உதைபந்தாட்டச் சம்மேளனம் எடுத்த முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போவதில்லை என்று ஜோன் ரெறி எடுத்த முடிவை அடுத்தே இங்கிலாந்து உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் டேவிட் பேர்ண்ஸ்ரெய்ன் தெரிவித்துள்ளார்.

செல்ஷி அணியின் தலைவராகக் காணப்பட்ட தருணத்தில் கடந்த ஆண்டு ஒக்டோபரில் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணியின் வீரரான அன்டன் பேர்டினன்ட் மீது இனத்துவேச ரீதியிலான வார்த்தைகளைப் பயன்படுத்தியிருந்தார் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அவர் மீதான குற்றவியல் விசார்ணைகளில் அவர் மீதான குற்றங்கள் உறுதிப்படுத்தபட்டிருக்காத நிலையில், இங்கிலாந்து உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்திய விசாரணைகளின் முடிவில் ஜோன் ரேறிக்கு 4 போட்டித்தடையும், 220,000 ஸ்ரேலிங் பவுண்ஸ் அபராதமும் விதிக்கப்பட்டது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த டேவிட் பேர்ண்ஸ்ரெய்ன், ஒரு விடயம் ஏராளமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை குறித்து கவலையடைவதாகத் தெரிவித்தார். எனினும் ஒரு சிறிய விடயம் கடந்த காலங்களில் வீரர்கள் இனத்துவேசத்தை நீக்குவதற்காக எடுத்த முயற்சிகளை மறந்துவிடக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (5)

# கம்பீர், சேவாக்கின் நிலையால் கவலை

கம்பீர், சேவாக்கின் மோசமான திறன் கவலை அளிக்கிறது, என்று இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ் வருத்தம் தெரிவித்தார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் தொடக்க வீரர்கள் சேவாக், கம்பீர். சமீபகாலமாக இவர்களது ஆட்டம் மோசமாக உள்ளது. எதிர்வரும் இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர், கடினமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இது குறித்து கபில்தேவ் கூறியதாவது:

கம்பீர், சேவாக் திறமையான தொடக்க வீரர்கள். இவர்கள் மீது ரசிகர்கள் அதிக எதிர்பார்ப்பு வைத்துள்ளனர். எப்போது இது போன்ற எதிர்பார்ப்பு ஏற்படுகிறதோ, அதை தக்க வைக்க வேண்டும். சிறந்த வீரர்களான இவர்கள், அணிக்காக மட்டுமன்றி, தங்கள் நலனுக்காகவும் ஓட்டங்களைச் சேர்க்க வேண்டும். இல்லையெனில், இது மகிழ்ச்சி தரக்கூடியதாக அமையாது.

சச்சின் ஜாம்பவான் வீரர். இவரது முடிவு குறித்து பேசமால் இருப்பது தான் நல்லது. அடுத்து என்ன செய்யப் போகிறேன் என்பதை, சமீபத்திய பேட்டியில் சச்சின் தெரிவித்து இருந்தார்.

டோனியை பொறுத்தவரை, அணித்தலைவர் பணியில் நிறைய வெற்றிகள் கொடுத்து விட்டார். 2007 ('ரி-20'), 2011 (50 பந்துப் பரிமாற்றம்) என்று இரண்டு உலகக் கிண்ணத்தை வென்று தந்துள்ளார். பல்வேறு டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணியை, டெஸ்ட் தரவரிசையில் அணியை முதலிடத்துக்கு கொண்டு சென்றார். இதற்குப் பின்பும், வெற்றி தேடித்தர வேண்டும் என்று டோனியிடம் எதிர்பார்க்கக் கூடாது.

அணித் தேர்வாளர்கள், ஒவ்வொன்றையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இருப்பினும், அவர்களது அனைத்து செயல்களும், இந்திய அணியின் நன்மைக்காக இருக்கும் என்று நம்புகிறேன். யார், யாரை தேர்வு செய்வது என்பதெல்லாம் நிர்வாகத்தின் முடிவு - என்றார். (5)


**சர்வதேச ஆங்கில பரீட்சைகள்**

IELTS
Opening doors, creating opportunities
• Unique Test Tips • Latest course Material
IELTS பரீட்சைக்கான வகுப்புகள் DMI இல் நடைபெறுகின்றன, யாழ்ப்பாணத்திலேயே பரீட்சைக்கு தோற்றலாம்.

பல்கலைக்கழக மாணவர்கள், வேலை வாய்ப்பை எதிர்பார்ப்போர் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச விரும்புவர்களுக்கானது.
veta Spoken English
தரமானதும் முறையானதுமான பயிற்சிகள்

City &Guilds இன் கற்கை நெறிகள்
UK Border Agency ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட
City & Guilds Approved Centre
A1-Exam (திருமணம் செய்து UK செல்வதற்கான)
B1-Exam (Student Visa மூலம் UK செல்வதற்கான)
A1, B1 கற்கைநெறிகளை எமது நிறுவனத்திலேயே கற்று ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel.: 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, Tel.: 021-227 0243

**விற்பனையாகின்றது**

கிராமசேவகர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி, பதிவாளர் சேவை போட்டிப் பரீட்சை வழிகாட்டி
விலை ரூபா 350
✱ பொதுஅறிவு, நடைமுறை விடயம் வினாத்தாள் இலவசம்
By.P.Kamalthasan
கிடைக்குமிடங்கள்- NEC, பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, இராம சந்திராஸ் (வவுனியா), KPK (வவுனியா), கவிதா (வவுனியா)
(சி/4213)(9.14)

**வேலை வாய்ப்பு**

DGWHC (DREAMS GLOBAL WORKERS HELPING CENTER (PVT) LTD) நிறுவனத்துக்கு
200 - 300 வேலையாள்கள் தேவை
எதிர்பார்க்கப்படும் தகைமைகள்
✱ க.பொ.த. உயர்தர பாடத்தில் சாதாரண சித்தி
✱ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு (IT Course)
✱ ஆங்கில அறிவு இருத்தல் விரும்பத்தக்கது
பொருத்தமானவர்கள் சுயவிவரக் கோவை மற்றும் உரிய தகைமைகளுக்கான ஆவணங்களுடன் 25.10.2012 வியாழக்கிழமை யாழ்., தீவக, வலிகாம பிரதேச வலயத்தைச் சேர்ந்தவர்களும், 26.10.2012 வெள்ளிக்கிழமை வடமராட்சி, தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்தவர்களும் காலை 9 மணிக்கு வருகை தரவும்.
முகவரி
DGWHC தலைமை அலுவலகம், யாழ். வீதி, வல்வெட்டித்துறை.
மேலதிக தொடர்புகளுக்கு:
Hot lines: 0776534514, 0778759672, 0772826326
(23866)(3.14)



(சி/4229)(8.14)



(23933)(9.14)

**கடை வாடகைக்கு**

கோண்டாவில் கிழக்குச் சந்தியில், இருபாலை றோட்டில் புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட 2 கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0214907069, 0015628603828
(24537)(3.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.